# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - உலகளாவிய தமிழர்கள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழர் பண்பாடு

கலைகளின் விளைநிலம் எனப்படுவது சோழநாடு .வியக்க வைக்கும் கட்டடக்கலையும் சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் கும்பகோணம் ஆகும். இவ்வூரின் தென்புறம் அரிசிலாறு (தற்போது அரசலாறு) பாய்கிறது.

- அரசலாற்றின் தென்கரையில் உள்ள தாராசுரம் என்னும் ஊரில் இரண்டாம் ராஜராஜசோழனால் கட்டப்பட்ட ஐராவதீஸ்வரர் கோயில் உள்ளது.

## கதை சிற்பங்கள்

- முப்புரம் எரித்தவன் (திரிபுராந்தகன்) கதை.
- யானையை வதம் செய்து அதன் தோலைத் தன்மீது உடுத்திக்கொள்ளும் ஈசனின் யானை உரி போர்த்தவர் (காகசம்வாராமூர்த்தி) கதை.
- அடிமுடி தேடவைக்கும் அண்ணாமலையார்(லிங்கோத்பவர் கதை.
- இக்கோயிலின் நுழைவுவாயிலில் சரிகமபகநி எனும் ஏழுநாதப்படிகள் (சங்கீதருங்கள் படிகள்) உள்ளன.
- 63 நாயன்மார்களின் கதைகளைக் கூறும் கல்வெட்டு எழுத்துத் தலைப்புகளுடன் கூடிய படைப்புச்சிற்பங்கள் இங்குள்ளன.
- கலைகளின் சரணாலயம் எனப்படும் இக்கோயிலை யுனெஸ்கோ அமைப்பு மரபு அடையாளச்சின்னமாக அறிவித்துள்ளது.
- இங்குள்ள ஒருடல் சிற்பங்கள் சிறப்பானவை.
- சமணர் கோயில் உள்ள இடம் தீபங்குடி.
- தாராபுரம் கோயிலின் விமானத் தோற்றத்தை பாராட்டிய வானவியல் அறிஞர் - கார்ல்சேகன்( Carlsagon)
- ஐராவதீசுவரர் கோயில் 800 ஆண்டுகள் பழமையானது.
- தாராசுரம் கோயிலின் கூம்பிய விமானத் தோற்றமும், மண்டபமும் வான்வெளி இரகசியத்தை காட்டுவதாக உள்ளது என்று கூறிய அறிஞர் - கார்ல்சேகன்.

## தமிழர் கப்பற்கலை

- நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். இந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது.
- " சேந்தன் திவாகரம் " என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றை சிறிய நீர்நிலைகளைக் கடக்க பயன்படுத்தினர்.
- கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை. இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.
- கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும்.
- கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும்.

## தமிழ் மணி

- ✓ பண்டைய காலங்களில் தமிழர்களின் கப்பலில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று தற்சமயம் நியூசிலாந்து நாட்டில் உள்ள வெலிங்டன் அருங்காட்சியகத்தில் "தமிழ் மணி" ஆக பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- ✓ எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் பகுதிகளாகும்.
- ✓ கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

## தமிழ் ஒளிர் இடங்கள்:

- தஞ்சை சரசுவதி மகால் நூலகம் உலகில் உள்ள தொன்னூலகங்களுள் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

- இங்கு தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், இடாய்ச்சு, இலத்தீன், கிரேக்கம் முதலிய பலமொழிகளிலுள்ள ஓலைச்சுவடிகளும், கையெழுத்துப்பிரதிகளும், அச்சுப்பிரதிகளும் உள்ளன.
- வரலாறு, மருத்துவம், அறிவியல், இசை, நாட்டியம், சிற்பம், மதம், தத்துவம் முதலிய பலகலைகளில் சிறந்த நூல்கள் இங்கு உள்ளன.
- 16, 17 நூற்றாண்டுகளில் தஞ்சையை ஆண்ட நாயக்க அரசர்கள் சமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் நூல்களைக் கொண்டு வந்து தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சேர்த்தனர்.
- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகும்.
- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981, செப்டம்பர் 15 ஆம் நாள் உருவாக்கப்பட்டது. தஞ்சாவூரில் 972.7 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. தமிழ் மொழி, பண்பாடு போன்ற துறைகளில் உயர் ஆய்வை நோக்கமாகக் கொண்டது.

## தமிழ் எழுத்து வடிவில் கட்டடங்கள்

- தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் எழுப்பப்படும் புலக்கட்டடங்கள் அவற்றின் உருவ அமைப்பில் "தமிழ்நாடு" என்ற சொல்லின் எழுத்துக்களைப் போன்று வடிவமைக்கப்படும். அவ்வகையில் தமிழ்நாடு என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களைக் குறிக்கும் நிலையில் ஒவ்வொரு எழுத்துக்கும் (த, மி, ழ், நா, டு) ஒவ்வொரு கட்டடம் அமையும். 'த' வடிவக்கட்டடத்தில் கலைப்புலத்துறைகளும், 'நா' வடிவக் கட்டடத்தில் சுவடிப்புலத் துறைகளும் அமையும். 'ழ்' வடிவக் கட்டடத்தில் மொழிப்புலம் செயல்பட்டுவருகிறது. 'மி' வடிவக் கட்டடத்தின் கட்டுமானம் முடிவடைய உள்ளது.
- இதில், அறிவியல் துறைகள் கொண்டுவரப்படவுள்ளன. 'டு' வடிவக்கட்டடம் அண்மையில் திறக்கப்பட்டது. தற்போது 'மி' வடிவத்திலுள்ள அறிவியல் புலக்கட்டடம் 8 பிப்ரவரி 2016இல் திறக்கப்பட்டது.

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் என்பது சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஒரு நூலகமாகும். உலகிலேயே அதிகமான தமிழ்ச் சுவடிகள் இந்த நூலகத்தில்தான் உள்ளது. இங்கு, 26 லட்சம் ஓலைச்சுவடிகளைக் கொண்ட 72,748 சுவடிக் கட்டுகளும் 25,373 ஆய்வு நூல்களும் உள்ளன.

இந்நூலகம் ஆராய்ச்சிக் கருவூலமாகத் திகழ்வதைக் கருத்திற்கொண்டு முனைவர் சு.சௌந்தரபாண்டியனின் முயற்சியால் 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்' என்று பெயர் மாற்றப்பட்டுத் தற்போது இப்பெயரிலேயே இது இயங்கிவருகிறது.

இம்மையத்தில் தற்போது தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னட மலையாளம், பாரசீகம், அரபு, உருது, சிங்களம் ஆகிய மொழிகளிற் சுவடிகள் உள்ளன. சுவடிகளில் ஓலைச்சுவடிகளும், தாள் சுவடிகளும் அடங்கும்.

காலின் மெக்கன்சி (1754-1821), லேடன் (Dr.LeYdan), சி.பி.பிரௌன் (Mr.C.P.Brown) ஆகிய மூவரின் தொகுப்புக்களே இந்நூலகம் உருவாவதற்கு ஆதாரமாகும். இம்மையத்தில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, தத்துவம், அறிவியல், வானியல் முதலான பிரிவுகளைச் சேர்ந்த சுவடிகள் உள்ளன. தமிழ்நாடு, ஆந்திர மாநில வரலாறுகளைக் கூறும் கைபீதுகளும் (Kaifyats) இருக்கின்றன.

## கன்னிமாரா பொது நூலகம்

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் (**Connemara Public Library**) இந்தியாவின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகும். ஆதலால் இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றின் ஒரு படி (பிரதி) இங்கு பெறப்படும். 1890-இல் நிறுவப்பட்ட இந்நூலகத்தில் நாட்டின் மதிக்கத்தக்க, புகழ்பெற்ற பழமையான புத்தகங்கள்

பாதுகாக்கப்படுகின்றன. மேலும் இது ஐக்கிய நாடுகளின் களஞ்சிய நூலகமாகவும் உள்ளது.

பிரிட்டிஷ் அருங்காட்சியக நூலக மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்நூலகம் 1890 வரை அருங்காட்சியகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. அன்றைய மதராசு மாகாணத்தின் ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு, மாகாணத்துக்கான பொது நூலகம் அமைக்கும் தேவையை உணர்ந்து 1890 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் நாள் அடிக்கல் நாட்டினார். 1896 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாள் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. திறக்கப்பட்டபோது அவர் ஆட்சியில் இல்லாவிடினும் அவருடைய பெயரே நூலகத்திற்கு சூட்டப்பட்டது.

1948-ஆம் ஆண்டு மதராசு பொது நூலகச் சட்டத்தின்படி, (இச்சட்டமே இந்தியாவிலேயே முதன் முதலில் பொது நூலகங்களை அங்கீகரித்து, அமைத்து, நிர்வகித்தல் சம்பந்தமான முக்கிய செயல்பாடு ஆகும்) கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாயிற்று.

## திருவள்ளுவர் சிலை

திருக்குறள் எழுதிய திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக் கடலில், கடல் நடுவே, நீர் மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது 133 அடி உயரச் சிலையை வடிவமைத்துள்ளது. இந்த சிலை அமைக்கும் பணி 1990, செப்டம்பர் 6 இல் தொடங்கப்பட்டு 2000, சனவரி 1 இல் திறக்கப்பட்டது.

### சிலை அமைப்பு

- திருவள்ளுவர் சிலை பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் போன்ற அமைப்பு கொண்டதாகும். உலகில் இதுபோன்ற கருங்கற்களால் ஆன சிலை கிடையாது.
- சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது. இந்த வெற்றிடம் சிலையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும்

நுட்பமுடையது. கல்லால் ஆன உத்திரங்களும், கட்டாயங்களும் பரவப்பட்டு சிலை எப்பக்கத்திலும் சாய்ந்து விடாது நேரே நிற்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.

- பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாகத் திகழ்கின்றது.
- மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

1. சிலை குறிப்புகள்-மொத்த சிலையின் உயரம் - 133 அடி
2. சிலையின் உயரம் - 95 அடி
3. பீடத்தின் உயரம் - 38 அடி
4. சிலையின் உருவாக்கம் - 3 டன் முதல் 8 டன் வரை எடையுள்ள 3681 கருங்கற்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.
5. சிலையின் மொத்த எடை - 7,000 டன்
6. சிலையின் எடை - 2,500 டன்
7. பீடத்தின் எடை - 1,500 டன்
8. பீடத்தைச் சுற்றி அமைந்துள்ள மண்டபத்தின் எடை - 3,000 டன்

## உலகத் தமிழ்ச் சங்கம்

உலகத் தமிழ்ச் சங்கம் என்பது தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ,ஆய்வுக்கும் தமிழ்நாடு அரசால் மதுரையில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு அரசு நிறுவனமாகும். இவ்வளாகத்தை தமிழக முதல்வர் 1 மார்ச் 2016 அன்று காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வரங்கம், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியவை இதில் இடம்பெற்றுள்ளன. இவ்வளாகச் சுற்றுச் சுவர்களில் 1330 திருக்குறள்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

காந்தி அருங்காட்சியகம் எதிரே செயல்படும் பழந்தமிழர் பெருமைகளை விளக்கும் சங்கத் தமிழ் காட்சிக் கூடம் இவ்வமைப்பின் ஓர் அலகாகச் செயல்படுகிறது.

## தமிழர் சிறப்பு
## பொங்கல் திருவிழா

1.தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் விழா எது? பொங்கல் விழா

2.பண்பாட்டுப் பெருவிழா எது? பொங்கல் விழா

3."பழையன கழிதலும் புதியன புகுதலும்"
"வழுவல கால வகையினானே" என்ற வரிகள் இடம்பெறும் நூல்
எது? நன்னூல்

4.வீடும் நாடும் தூய்மைப்படுகிற, சுற்றுப்புறச்சூழலைப் போற்றுகின்ற இனிய திருநாள் எது? போ(க்)கித் திருநாள்.

5.மக்களுக்கு வாடையின் வாட்டத்தைப் போக்கி இன்பத்தைப் பரிசாக தந்திடும் வேனிற்கால விடியலுக்கு நன்னாள் எது? பொங்கல் நாள்.

6."காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்
கட்டி அரிச அவல் அமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்.......... வணங்குகின்றேன்" என்று
பாடியவர் யார்?ஆண்டாள்.

7.உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றிடும் திருநாள் எது? மாட்டுப்பொங்கல்

8. பாரதி காட்டும் நன்றியுணர்வுக்கான பாடல் எது?

“பாலைப்பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வயலில் உழுதுவரும்மாடு - இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா !”

9. உலகில் தோன்றிய தொன்மைக்குடிகள் யார்?

தமிழர்கள்.

10.பண்டைய மரபையும், பண்பாட்டையும் பறைசாற்றி நிற்பது எது?

உழவர் திருநாள்.

11.“சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை” (குறள் -1031) என்று கூறியவர் யார்?

திருவள்ளுவர்.

12. மாட்டுப்பொங்கலைத் தொடர்ந்து நடைபெறுவது எது?

எருது விடும் திருவிழா.

13.எருதுவிடும் திருவிழா இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் என்ன பெயரால் வழங்கப்படுகிறது? மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு.

14.எருது விடும் திருவிழா தமிழ்நாட்டு வட மாவட்டங்களில் என்ன பெயரால் வழங்கப்படுகிறது? எருதுகட்டு

15.எருதுவிடும் திருவிழாவை பண்டைய தமிழர் எவ்வாறு அழைத்தனர்?

ஏறு தழுவுதல்

16.தமிழரின் வீரத்தை வெளிப்படுத்தும் விழா எது?
எருதுவிடும் விழா

17.பொங்கலுக்கு மூன்றாம் நாள் எது?
காணும் பொங்கல்

18. நம்மைச் சுற்றியுள்ள மக்களை, பெரியவர்களை, உறவினர்களை, நண்பர்களை அவர்தம் இல்லம் சென்று வணங்கி அன்பொழுக உரையாடும் நாள் எது? காணும் பொங்கல்

19.மண்ணின் மணத்தை உணர்த்தவல்ல நாட்டுப்புறக்கலைகள் யாவை?
கோலாட்டம், கும்மி

20.பொங்கல் விழா (அ) உழவர் திருநாள் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் என்ன பெயரால் கொண்டாடப்படுகிறது?
மகரசங்கராந்தி

21.பொங்கல் விழா(அ) உழவர் திருநாள் ஜப்பான், ஜாவா முதலிய நாடுகளில் என்ன பெயரால் கொண்டாடப்படுகிறது?
அறுவடைத்திருவிழா.

22.தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, மொரீசியசு, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற கடல் கடந்த நாடுகளில் கொண்டாடப்படும் திருவிழா எது? பொங்கல் திருவிழா

## உலகளாவிய தமிழர்

1. ”கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி“ எனத் தமிழினத்தின் தொன்மையைக்கூறும் நூல் எது?

   புறப்பொருள் வெண்பாமாலை

2. உலகில் முதன்முதலில் தோன்றிய மனிதன் தமிழனே என்பது யாருடைய கருத்து?

   மானிடவியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்து

3. குமரிக்கண்டத்தில் தோன்றிய இனம் எது?

   தமிழினம்

4. உலகில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற மொத்த நாடுகள் எத்தனை?

   192 நாடுகள்+43 ஆட்சிப்புலங்கள்,  மொத்த நாடுகள்-235

5. ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமை பெற்ற 235 நாடுகளில் தமிழினம் பரவியுள்ள நாடுகள் எத்தனை?

   154

6. தமிழினம் பரவியுள்ள 154 நாடுகளில் எவ்வளவு தமிழர்கள் வாழ்கிறார்கள்?

   10 தமிழர்கள் முதல் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் தமிழர்கள் வரை

7. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகளில் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழும் நாடுகள் எத்தனை?

   20 நாடுகள்

8. எதன் காரணமாக தமிழர்கள் அயல்நாடு சென்றனர்?
வாணிகம், வேலைவாய்ப்பு ஆகிய காரணங்களுக்காக.

9. “திரைகடலோடியும் திரவியம் தேடு“ என்று பாடியவர் யார்?
ஔவையார்

10. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல்கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் உள்ளது?
மணிமேகலை

11. சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத்தீவு ஆகியநாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருபவர்கள் யார்?
தமிழர்

12. பரப்பளவில் சிறியதான ரியூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மையாக உள்ள மக்கள் யார்? தமிழர்

13. பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இருந்து ஒப்பந்தக்கூலிகளாகத் தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட தீவு எது?
ரியூனியன் தீவு

14. தமிழருள் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி பயிலும் நாடு எது?
இலங்கை

15. தமிழ் ஒரு பாடமாக கற்பிக்கப்படும் நாடுகள் யாவை?
சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென்அமெரிக்கா, கனடா, பிரிட்டன்

16. தமிழுக்கு அரும்பணியாற்றிய அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் யாவர்?

வி.எஸ்.இராஜன், ஜார்ஜ் எல்.ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம்.லிண்ட் ஹோம், இந்திரா, நார்மன், ஹால்சிப்மேன், டபிள்யு குளோத்தி, ஜேம்ஸ் பிராங்கா, மறைந்த பேராசிரியர் ஏ.கே.இராமானுஜம்

17. அயல்நாடுகளில் தமிழை வளர்க்கும் ஊடகங்கள் யாவை?

வானொலி, தொலைக்காட்சி, இணையதளம்

18. தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்வன எவை?

வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் போன்ற ஊடகங்கள்.

19. தமிழ் ஆட்சிமொழியாகத் திகழும் நாடுகள் யாவை?

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா

20. அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களை உலகெங்கும் நடத்தி வருபவர்கள் யார்? தமிழர்

21. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்நோக்கோடு வாழ்ந்து வருபவர்கள் யார்?

தமிழர்

22. தமிழர்கள் எந்த நாடுகளில் உள்ளாட்சி தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சிப்பொறுப்புகளை வகித்து வருகின்றனர்?

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்

23. எந்தெந்த நாடுகளில் குடியரசுத்தலைவர்களாக தமிழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்?

சிங்கப்பூர்,மொரிசியசு

24. ரியுனியன் தீவில் கோவில் திருவிழாவின் போது நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவை?

காவடி எடுப்பது, தேர் இழுப்பது

25. ”தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு என்பதற்கிணங்க” தங்களது பண்பாட்டு அடையாளங்களை மறவாமலும், மாற்றிக்கொள்ளாமலும் வாழ்பவர்கள் யார்?

தமிழர்

26. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று பாடியவர் யார்?

கணியன்பூங்குன்றனார்

*******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழர் வணிகம்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# கடற்பயணம்

- ✓ கடலைக்குறிக்கும் தமிழ்ச்சொற்கள் யாவை?
  ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.

- ✓ மரக்கலத்துக்குத் தமிழில் வழங்கப்படும் பல்வேறு பெயர்கள் யாவை?
  கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில்,புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம்.

- ✓ உப்பளங்களில் செலுத்தப்படும் கலத்திற்கு பெயர் என்ன?
  சிறியபடகு

- ✓ கடலில் செல்லும் பெரிய கப்பலுக்கு என்ன பெயர் ?
  நாவாய்

- ✓ "புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியால் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்தன , அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின" என எந்த நூல் கூறுகின்றது?
  பட்டினப்பாலை

- ✓ பெரிய நாவாய்கள் எதன் துணைகொண்டு இயங்கின?
  காற்றின் துணைகொண்டு.

- ✓ காற்றின் துணை கொண்டு இயங்கும் பெரிய நாவாய்கள் என்ன பெயரால் அழைக்கப்பட்டன?
  பாய்மரக்கப்பல்கள்

- ✓ கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என்ற செய்தி இடம் பெறும் நூல் எது?
  புறநானூறு

- ✓ தமிழகத்தில் நடைபெற்று வந்த வாணிகத்தின் பயனாகக் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கிய துறைமுகங்களுள் குறிப்பிடத்தக்கவை எவை? காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை

- ✓ சேரமன்னர்களுக்குரிய துறைமுகம் எது?
  முசிறி

- ✓ ஆற்றுத்துறைகள் கலங்கிட வந்திறங்கிய யவனர்களின் மரக்கலங்கள் வந்து நின்ற இடம் எது?
  சுள்ளி ஆறு

- ✓ சுள்ளி ஆற்றில் கலங்களில் வந்திறங்கிய யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்ற செய்தியை கூறும் நூல் எது?
  அகநானூறு

- ✓ பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் எது ?
  கொற்கை

- ✓ பண்டைய ஏற்றுமதிப் பொருள்களில் முதலிடம் பெற்ற பொருள் எது?
  முத்து

- ✓ கொற்கை முத்தினைச் சிறப்பிக்கும் நூல்கள் யாவை?
  மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை

- ✓ கொற்கை முத்தினை "விளைந்து முதிர்ந்த விழுமுத்து" எனக்கூறும் நூல் எது?
  மதுரைக்காஞ்சி

- ✓ கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களை என்னவென்று அழைத்தனர்?
  பட்டினம், பாக்கம்

- ✓ பட்டினம், பாக்கம் ஆகிய ஊர்களில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலானோர் யாவர்?
  வணிகர்கள்

- சோழநாட்டின் துறைமுகம் எது? காவிரிப்பூம்பட்டினம்
- காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தவை யாவை?
  சுங்கச்சாலையும், கலங்கரை விளக்கமும்

- காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் வந்து சேர்ந்த பொருள்கள்?
  கடல் வழியே வந்த குதிரைகள், தரைவழியே வந்த மிளகுப் பொதிகள், இமயத்திலுண்டான மணிகள், பொன்னும் குடகுமலையிற் பிறந்த சந்தனமும், அகிலும்.

- பழந்தமிழகத்தின் வாணிகப் பொருள்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படும் நூல்கள் யாவை?
  பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி

- பழந்தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியான பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை யாவை?
  இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு,சந்தனம், வெண்துகில் , அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி

- தமிழகத்திற்கு இறக்குமதியான சீனப்பொருள்கள் யாவை?
  சீனப்பட்டும், சர்க்கரையும்

- தமிழகத்தில் யாருடைய முன்னோர் காலத்தில் கரும்பு சீனாவிலிருந்து கொண்டு வந்து பயிரிடப்பட்டது?
  அதியமானின் முன்னோர்கள்.

- “மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்” என்று பாடியவர் யார்?
  பாரதியார்

- கடல் பயணத்தை “முந்நீர் வழக்கம்” என்று குறிப்பிடும் நூல் எது?
  தொல்காப்பியம்

# தமிழர் வணிகம்

- உள்நாட்டு வணிகத்தை விட அயல்நாட்டு வணிகம் வருவாய் மிகுதி.
- அயல்நாட்டு வணிகத்தில் நிலவழி வணிகத்தை விட நீர்வழி வணிகத்தில் வருவாய் மிகுதி.
- நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, திணை, சாமை, வரகு ஆகிய தானியங்கள் உள்நாட்டு வணிகத்திற்கு சிறந்தன.
- உளுந்து, கடலை, அவரை, எள், கொள், துவரை, தட்டை, பச்சை ஆகிய பருப்பு வகைகள் உள்நாட்டு வணிகத்திற்கு சிறந்தன.
- உப்பு உள்நாட்டு வணிகத்தில் முதன்மை பெற்றிருந்தது.
- பொன், மணி, முத்து, பவளம், சந்தனம், யானைத்தந்தம், அகில், வெண்துகில், ஏலக்காய், போன்ற வாசனைப் பொருள்கள் வெளிநாட்டு வணிகத்தில் முதன்மை பெற்றிருந்தன.
- மயில் என்ற பறவை வெளிநாட்டு வணிகத்தில் முதன்மை பெற்றிருந்தது.
- தமிழர்கள் பாபிலோன், சுமேரியா, கிரீஸ், எகிப்து, மெசபடோமியா, மடகாஸ்கர் போன்ற மேலை நாடுகளுடனும் , சீனா, மலேசியா, ஜாவா, கம்போடியா போன்ற கீழை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

  "யவனர் தந்த விளைமான் நன்கலம்
  பொன்னோடு வந்து கறியொடு பெயரும்"

  என்னும் தொடர் கிரேக்கத்துடன் நடந்த ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைக் குறிக்கிறது.

- தமிழர்கள், கிரேக்கர்களையும், உரோமானியர்களையும் யவனர் என்றனர்.
- பின் மேலை நாட்டவர் அனைவரையும் யவனர் எனக் குறித்தனர்.
- மேலை நாட்டு வணிகத்தால் அரிசி என்ற சொல் ஒரைஸா என்று கிரேக்க மொழிக்குச் சென்றது .பின் அதிலிருந்து ஆங் கில மொழிக்கு ரைஸ் என சொல்லாடல் பெற்றது.
- சீனத்துப்பட்டும் சர்க்கரையும் சீனாவிலிருந்து இறக்குமதி ஆயின.
- சீனக்களிமண், சீனப்பட்டு, சீனக்குடை போன்ற சொற்கள் இன்றும் வழக்கில் உள்ளன.
- இதனால் தான் சர்க்கரைக்கு "சீனி" என்ற பெயர் உள்ளது.

- கி.மு.10 ம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து யானைத்தந்தம், மயில்தோகை மற்றும் வாசனைப் பொருட்கள் அனுப்பப்பட்டன.

## இலக்கியத்தில் வணிகர்கள்

- வணிகத்தைப் பரம்பரையாகச் செய்துவரும் வணிக மரபினர் வைசியர் எனப்படுவர்.
- இவர்களை விட இப்பர் , கவிப்பர், பெருங்குடி வணிகர் போன்ற வகையினர் தாம் கொண்ட பொருளால் பெயர் பெற்றனர்.

## தாம் செய்யும் வியாபாரத்தால் பிரிக்கப்பட்டவர்கள்.

- கூல வணிகர் (கூலம் - நவதானியம்)
- பொன் வணிகர்
- அறுவை வணிகர் (துணி)
- மணி வணிகர்
- இவர்களை விட சேனை வணிகர் என்ற உத்தியோகப் பிரிவினரும் உண்டு.
- தொல்காப்பியத்தில் வணிகருக்குரிய ஐந்து தொழில்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

அவையாவன:

- தமக்குரிய நூல்களை ஓதுதல்
- தமக்குரிய யாகங்களைச் செய்தல்
- தாம் பெற்ற பொருட்களை நல்வழியில் ஈதல்
- உழவு செய்வித்தல்
- பசுக்களைக் காத்தல் என்பனவாம்.
- வணிகர்கள் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப்பட்டனர்.
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனை வாழ்த்தி குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் “பலவகை உணவுப் பண்டங்களை விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றாய்” என்று பொருள் பட ”கூலம் பகர்நகர் குடிபுறந் தராஅ” என்று பாடியிருக்கிறார்.

# சங்க காலத்து வணிகர்கள்

- சீத்தலைச் சாத்தனார் (கூல வாணிகர்)
- இளவேட்டனார் (அறுவை வாணிகர்)
- ஆயத்தனார் (ஓலைக்கடை வாணிகர்)
- இளம் பொன் வாணிகனார்

# தரைவழி வணிகமும், உள்நாட்டு வணிகமும்

- இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்து தமிழ் நாட்டிற்கு பொருள்கள் வந்தன.
- வடமலையில் பிறந்த பொருட்களும் , குடகுமலையில் பிறந்த சந்தனமும், அகிலும் வந்தன.
- கங்கைக்கரைப் பொருள்கள் மற்றும் தென்கடல் முத்தும் , குணக்கடல் பவளம் இறக்குமதி செய்யப்பட்டது.
- உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் வண்டிகளில் நடைபெற்றது.
- தமிழகத்தில் பல வணிகக் கூட்டங்கள் “வணிகச் சாத்து ” என்ற பெயரில் இருந்தன.
- அயல்நாட்டு, உள்நாட்டு வணிகத்திற்குப் பட்டினப்பாலை என்ற நூல் சிறந்த சான்றாக உள்ளது.

  “நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
  காலின் வந்த கருங்கறி மூடையும்
  வடமலை பிறந்த மணியும் பொன்னும்
  குடமலை பிறந்த ஆரமும் அகிலும்
  தென்கடல் முத்தும் குணக்கடல் துகிரும்
  கங்கை வாரியும் காவிரிப் பயனும்
  ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
  அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
  வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு”.
  என்கிறது பட்டினப்பாலை.

- வணிகவரி, பண்டமாற்று, காசுமாற்று, வணிக அளவுகள் , அடையாளக் கொடிகள் , சின்னங்கள் போன்றனவும் வணிக மேம்பாட்டினை எடுத்தியம்பும்.

## நேர்மையான வணிகம்

- வணிகர்கள் அதிக இலாபம் கருதாது வணிகம் செய்தனர்.
- தங்கள் பொருளையும், பிறர் பொருளையும் சமமாகப் பார்த்தனர்.
- வணிகத்தில் தராசு என்ற துலாக் கோல் முதன்மை பெற்று விளங்கியது.

  "தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
  கொள்வதூஉம் மிகை கொளாது
  கொடுப்பதூஉம் குறை கெடாது
  பல பண்டம் பகர்ந்து வீசும் இருக்கை"

  என்ற பாடல் வரிகள் அக்காலத்தில் இருந்த வணிக நேர்மையை எடுத்து கூறுகின்றது.

## தொல்லியல் ஆய்வுகள்

- தொல் பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்வது தொல்லியல் அல்லது தொல்பொருளியல் ஆகும்.
- தொல்லியல் என்பது கல்வெட்டுகள் , கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள், பயன்படுத்திய பொருள்கள் , இலக்கியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.
- தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை , தொழில்கள், வணிகம், வேளாண்மை, அரசியல், நுண் கலைகள் போன்றவற்றை ஆராய்வதே தொல்லியலின் நோக்கமாகும்.
- மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்து வரலாற்றுக்கு முந்தைய காலம் வரை உள்ள காலம் தொன்மைக் காலம் எனப்படும்.
- தொல்பழங்காலத்தை தொல்லியல் ஆய்வாளர்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கின்றனர். பழைய கற்காலம் , நுண்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகியவையாகும்.
- மதுரையில் கிடைத்த காசுகளில் தலை சிறந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சங்ககாலக் காசு "பெருவழுதி" என்று பெயர் பொறிக்கப்பட்ட காசாகும்.
- திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, சித்தன்ன வாசல், மாங்குளம், மகேந்திரவாடி, வல்லம், குடுமியான் மலை போன்ற இடங்களில்

கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் தொல்லியல் ஆய்வுக்கு மிகவும் பயன்படுகின்றன.

- அரிக்க மேடு , ஆதிச்ச நல்லூர் போன்ற இடங்களில் நடந்த அகழ்வாய்வுகள் பண்டைய காலத்தைப் பற்றி அறிய பெருந்துணைபுரிந்தன.
- பூம்புகார் அருகே உள்ள கீழார்வெளி என்ற ஊரில் 1963 - ல் மேற்கொள்ளப்பட்ட கடலின் ஆய்வின் மூலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிட இடிபாடுகள் , படகுத்துறை, அரைவட்ட வ டிவ நீர்த்தேக்கம் , புத்த விஹார ம் ,புத்தர் பாதம் போன்றவை கிடைத்தன.
- இதனால் தமிழ் இலக்கியங்கள் கூறும் காவிரிபூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட்டது.
- பண்டைய காலத்தைப் பற்றி அறிய புறநானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி , மூவர் உலா , பெரிய புராணம் ஆகிய வரலாற்றுடன் தொடர்புடைய இலக்கியங்கள் துணைபுரிகின்றன.
- பழமையான இலக்கியங்கள் , வெளிநாட்டவரின் பழைய குறிப்புகள், செவிவழிச் செய்திகள் , மக்களின் வலுவான நம்பிக்கை ஆகியவற்றின் மூலம் அக ழ்வாய்வு செய்ய வேண்டிய இடத்தைத் தேர்வு செய்கின்றனர்.
- அகழ்வாய்வின் போது மண்ணை எந்திரங்களால் தோண்டாமல் மிக நுட்பமாக பொறுமையுடன் சிறுகச் சிறுகத் தோண்டுவர்.
- அகழ்வாய்வில் வெவ் வேறு மணல் அடுக்குகளில் பல்வேறு காலக்கட்டங்களில் மக்கள் பயன்படுத்திய பொருள்கள் கிடைப்பதுண்டு.
- இப்பொருள்களின் அடிப்படையில் ஒரு நாகரிகத்தின் கூறுகளை அறிந்து கொள்ள முடியும்.
- ஓரிடத்தில் எந்த இ னத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்தார்கள் , எப்போதிலிருந்து மக்கள் வாழத் தொடங்கி னர், எத்தகைய பண்பாட்டைக் கொண்டிரு ந்தனர் போன்ற வினாக்களுக்கு அகழ்வாய்வு விடை தருகிறது.
- திட்டமிட்டுச் செய்யப்படும் அகழாய்வுகளில் கிடைக்கும் பொருள்கள் மட்டுமின்றி மக்கள் கிணறு வெட் டும்போதும், வீடுகட்டும்போதும், ஏரிகளைத் தூர்வா ரும்போதும் தற்செயலாகக் கிடைக்கும் தடயங்கள், எச்சங்கள் உதவியுடனும் தொன்மைக்கால நிகழ்வுகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிகின்றனர்.

- இறந்தவர்களை அவர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் ஒருதாழியில் இட்டுப் புதைக்கும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. இவ்வகைத் தாழிகளை “முதுமக்கள் தாழி” என்பர்.
- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரி ல் 1876 மற்றும் 2003-ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட அக ழ்வாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- அவை கி .மு.300 முதல் கி .பி.300 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்தவை.
- அம்முதுமக்கள் தாழியுள் இறந்தோரின் எலும்புகள் , தங்க நெற்றிப்பட்டைகள், செம்பாலான ஆண் , பெண் தெய்வ உருவங்கள், இரும்பாலான கத்திகள் , விளக்குகள் போன்ற பொருள்கள் இருந்தன.
- தருமபுரி, கரூர், மதுரை மாவட்டங்களில் நடந்த அக ழ்வாய்வில் கி.மு.3ம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலக் கட்டங்களைச் சார்ந்த காசுகள் கிடைத்தன.
- இக்காசுகள் தங்கம் , வெள்ளி, செம்பு, இரும்பு ஆகிய உலோகங்களால் செய்யப்பட்டவை.
- இவற்றின் ஒரு பக்கத்திலோ அல்லது இருபக்கத்திலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன.
- சூரியனின் மலைமுகடு , ஆறு, காளைமாடு, ஸ்வஸ்திகம், கும்பம் போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
- கும்பம் என்பது சிறு கலசம் போன்ற பாத்திரம் . அதன் மேல் மாவிலை, அதன் மேல் தேங்காய் , அதன் மேல் பூ வைக்கப்பட்டிருந்தது.
- இக்கும்பமே தமிழர்களின் மிகப் பெருமைக்குரிய மங்கலப் பொருள் ஆகும்.
- 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவண்ணாமலைக் கல்வெட்டு ஒன்று சங்க கால மன்னன் நன்னனையும் அவன் மீது பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலைப் பற்றியும் குறிப்பிடுகிறது.
- சிந்து சமவெளியில் கிடைத்த மொகஞ்சதாரோ முத்திரை ஒன்று தமிழர்களின் வீர விளையாட்டான ஏறுதழுவுதலைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

## தமிழரின் கடற்பயணங்கள்:

- “நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக களியியல் யானைக் கரிகால் வளவ ” என்று வெண்ணிப்பறந்தலைப் போரில் வெற்றி பெற்ற முதல் கரிகாலனைப் பாடிய பெண்பாற்புலவர் வெண்ணிக்குயத்தியார்.
- தமிழரின் நீர்வழி அயல்நாட்டுத் தொடர்பு மிகவும் பழமையானது.
- “திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்கிறார் ஔவையார்.
- “யாதும் ஊரே யாவரும் கேளிர் ” என்கிறார் கணியன் பூங்குன்றன். இவ்விரு தொடர்கள் தமிழரின் பன்னாட்டுத் தொடர்புக்குச் சான்றுகளாகும்.
- தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள “முந்நீர் வழக்கம்” என்ற தொடர் தமிழரின் கடற்பயணத்தைக் கூறுகிறது.
- அகவாழ்க்கை முறையுள் ஒன்றான “பொருள் வா யிற் பிரிவு ” என்பதில் காலில் (வண்டியில்) தரைவழிப் பிரிதல், கலத்தில் (கப்பலில்) நீர்வழிப் பிரிதல் என்ற இருவகை உண்டு.
- தமிழர்கள் கிரேக்கம் , ரோம், எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா போன்ற மேலைநாடுகளுடன் கடற்பயணத்தால் தொடர்பு கொண்டிருந்தனர்.
- சீனம், ஜாவா, இலங்கை, மலேசியா, கலிபோர்னியா, பிலிப்பைன் தீவுகள் போன்ற கீழை நாட்டுடனும் கடற்பயணத்தால் தொடர்பு கொண்டிருந்தனர்.
- சங்க காலத்திற்கு முன்பு தமிழர்கள் மேலை நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.
- மேலைநாட்டுத் தொடர்பு குறைந்த போது , கீழை நாட்டுத் தொடர்பை அதிகமாக்கிக் கொண்டனர்.
- வணிகத்தின் காரணமாகவே தமிழர்கள் கடற்பயணங்களை மேற்கொண்டார்கள்
- கடற்பயணமாகத் தமிழகம் வந்த அயல்நாட்டவர்களையு ம் வரவேற்றனர். அரிக்கமேடு முதலான இடங்களில் அயல் நாட்டார் குடியிருப்புகள் இருந்தமை இதற்குச் சான்றாகின்றன.
- கடலைக் குறிக்கத் தமிழி ல் - ஆழி, ஆர்கலி, முந்நீர், வாணரம், பௌவம், பரவை, புணரி ஆகிய சொற்கள் உள்ளன.
- இவை தமிழரின் கடல் குறித்த அறிவினை உணர்த்தும்.

- யவணர்களின் கலங்கள் பொன்னைச் சுமந்து வந்து அதற்கு ஈடாக மிளகை ஏற்றி சென்றன.
- “விளைந்து முதிர்ந்த விழுமுத்து ” என்று கொற்கை முத்தைச் சிறப்பிக்கிறது மதுரைக்காஞ்சி. சங்க காலத்தில் நடந்த முத்துக் குளித்தல் 13 ம் நூற்றாண்டிலும் சிறப்பாக நடந்ததை மார்கோபோலோ (வெனிஸ் நகரப் பயணி ) குறிப்புகள் மூலம் அறியலாம்.

## கப்பல்கள்

- மரக்கலத்திற்குத் தமிழில் கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தெப்பம், திமில், அம்பி, வங்கம், தோணி, மிதவை, பஃறி, ஓடம் ஆகிய சொற்கள் உள்ளன . இவை தமிழரின் கப்பல் கட்டும் அறிவை உணர்த்துகின்றன.
- உப்பங்கழிகளில் செல்வதற்கு உரிய சிறிய படகுகளும் , ஆழ்கடலில் செல்வதற்கு ரிய பெரிய நாவாய்களும் அன்றே இருந்தன.
- கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்பட்டது.
- பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டு இயங்கின . எனவே இவை பாய்மரக்கப்பல்கள் என்றும் அழைக்கப்பட்டன.
- கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என்று புறுநானூறு கூறுகிறது.
- புகார் நகரத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள் அலைகள் மோதுவதால் தறியில் கட்டப்பட்ட யானைகள் அசைவது போல் அசைந்தன என்றும் அவற்றின் உச்சியில் கொடிகள் ஆடின என்றும் பட்டினப்பாலை கூறுகிறது.
- அக்காலத்தில் கப்பல் செய்யும் தொழிலாளர்கள் தமிழகத்தில் இருந்தனர். அவர்களுக்குக் “கலம் செய் இம்மியர்” என்று பெயர்.
- கலம் செய் இம்மியர்கள் பெரிய கோட்டையைப் போலக் கப்பல் கட்டினர்.
- மருத நிலத்தில் நான்கு பக்கமும் அகண்ட வயல் வெளிகள் உள்ளன. நடுவே பெரிய கோட்டை நிற்கிறது . அதன் உச்சியில் கொடி அசைகிறது . இக்கோட்டையின் தோற் றம் நடுக்கடலில் செல்லும் கப்பல் போல் உள்ளது என்று புறநானூறு கூறுகிறது.

## துறைமுகங்கள்

- ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் ஏற்ற துறைமுகங்கள் பல தமிழ்நாட்டில் இருந்தன.
- மூவேந்தர்களும் தங்கள் துறைமுகப்பட் டினங்களைச் சிறப்பாக உருவாக்கினர்.
- காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகிய ன பண்டைக் காலத்தில் சிறப்புற்றிருந்த துறைமுகங்களாகும்.
- காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாகவும், சோழநாட்டின் பண்டைய தலைநகரமாகவும் விளங்கியது . இது பட்டினப்பாக்கம், மருவூர்பாக்கம் என்ற இருபகுதிகளைக் கொண்டிருந்தது.

## காவிரிப்பூம்பட்டினம் என்ற புகார் நகரம்

- பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டிய பகுதியாகும் . இங்கு பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்தனர்.
- காவிரிப்பூம்பட்டினத்தில் சுங்கச்சாவடியும் கலங்கரை விளக்கமும் இருந்ததாகப் பட்டினப்பாலை என்ற நூல் கூறுகிறது.
- இந்நகரில் தெய்வத்திற்கு எடுத்த கொடிகளும் , விற்கும் பொருட்களை அறிவிப்பதற்குக் கட்டிய கொடிகளும் , பட்டிமண்டபத்தில் அறிஞர்கள் வாதம் செய்ய வைத்த கொடிகளும், கப்பலின் கூம்பில் உள்ள கொடிகளும் கலந்து காணப்பட்டன.
- சேர மன்னர்களுக்கு உரிய துறைமுகம் முசிறி ஆகும்.
- கள்ளி என்ற ஆற்றங்கரையில் அது அமைந்திருந்தது.
- கொற்கைத் துறைமுகம் பாண்டிய மன்னர்களுக்கு உரியது.
- பாண்டிய வம்சத்தில் மூத்தவன் மதுரையில் இருந்து நாட்டை ஆள்வான். இளையவன் கொற்கையிலிருந்து முத்து வணிகத்தைக் கவனிப்பான்.
- கடற்பயணம் பற்றிய கல்வி அறிவு கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகக் கற்பிக்கப்படுகிறது.
- “மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம் ” என்ற பாரதியின் கனவு நினைவாகியுள்ளது.

*********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழில் சிறுகதைகள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழில் சிறுகதைகள்

## சிறுகதையின் தொன்மை:

- தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு ‘களம்’ அமைத்துக் கொடுத்தது ‘மணிக்கொடி’ என்ற சிற்றிதழ் ஆகும். இது டி.எஸ்.சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன் ஆகியோரால் நடத்தப்பட்டது. இதில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, மௌனி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதி வெளியிட்டனர்.

## சிறுகதை முதன்மைகள்:

- முதலில் சிறுகதை இலக்கியமாகத் தோன்றிய நாடு அமெரிக்கா.
- உலகின் முதல் சிறுகதை “ரிப் வான் விங்க்லே” இதன் ஆசிரியர் இர்விங். இடம் : வாசிங்டன்
- உலகின் முதல் சிறுகதைத் தொகுதி “த ஸ்கெட்ச் புக்” ஆண்டு 1819.
- சிறுகதை உலகின் தந்தை செகாவ்
- சிறுகதை தோன்றிய முதல் இந்திய மொழி வங்காளம்
- உலகச் சிறுகதை முன்னோடிகள் ஆலன்போ, கோகல்.

## தமிழில் சிறுகதை முன்னோடிகள்:

- தமிழில் முதல் சிறுகதை “குளத்தங்கரை அரசமரம்” (ஆசிரியர் : வ.வே. சுப்ரமணிய ஐயர்)- இது தாகூரின் “காட்டேர் இது கதா” என்ற வங்க மொழியின் கதைத் தழுவல்.
- முதல் சிறுகதைத் தொகுதி “மங்கையர்க்கரசியின் காதல்” (ஆசிரியர் : வ.வே.சு. ஐயர்)
- சிறுகதையின் தந்தை “வரகனேரி வேங்கட சுப்ரமணிய ஐயர்”.
- சிறுகதை மன்னன் “புதுமைப்பித்தன்”
- தமிழ்நாட்டு மாப்பசான் புதுமைப்பித்தன் (சொ.விருத்தாச்சலம்)
- தமிழ்ச்சிறுகதை முன்னோடி “வீரமா முனிவர்”
- சிறுகதையின் திருமூலர் மௌனி (சுப்ரமணியம்), ந.பிச்சமூர்த்தி

என்றும் கூறுவர்.

- தமிழ்நாட்டின் “வால்டர் ஸ்காட்” கல்கி (இரா.கிருஷ்ணமூர்த்தி).
  இவர் திரு.வி.கலியாண சுந்தரத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால் ‘கல்கி’ என மாற்றிக் கொண்டார்.
- கரிசல் கதைகளின் தந்தை கி.இராஜநாராயணன்.

## தமிழில் அயல் நாட்டினர் எழுதிய சிறுகதைகள்:

- 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் பிரெஞ்சு மொழியில் இருந்து மொழி பெயர்த்து எழுதியது “பரமார்த்த குரு கதை”.
- இசுலாமிய மதத்தின் சூஃபிகள் என்பவர் சித்தர்களோடு ஒப்பாக பேசப்படுவார்கள். அவர்கள் கூறிய கதைகளுள் ஒன்று “சூஃபிக் கதைகள்”.

## சிறுகதை ஆசிரியர்கள் – படைப்புகள்:

வ.வே. சுப்ரமணிய ஐயர்

குளத்தங்கரை அரசமரம்

- மங்கையர்கரசி காதல் – இது 8 சிறுகதைகளைக் கொண்ட ஒரு சிறுகதைத் தொகுப்பு நூல் ஆகும்.
- இதில் அடங்கியசிறுகதைகளின் பெயர்கள்
  1. மங்கையர்க்கரசியின் காதல்
  2. குளத்தங்கரை அரசமரம்
  3. கமலா விஜயம்
  4. காங்கேயம்
  5. எதிரொலியாள்
  6. அனார்கலி
  7. லைலா மஜ்னு
- 

## பாரதியார்

**நவதந்திரக் கதைகள், கதைக்கொத்து, பூலோக ரம்பை, திண்டிம சாஸ்திரி, ஸ்வர்ண குமாரி ஆறில் ஒரு பங்கு. மேலும் ரவீந்திரநாத் தாகூர் 11 சிறுகதைகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.**

## புதுமைப்பித்தன்

1. **ஆற்றங்கரைப் பிள்ளையார் (முதல் சிறுகதை)**
2. **ஞானக்குகை**
3. **கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்**
4. **ஒருநாள் கழிந்தது**
5. **பொய்க்குகை**
6. **சங்குத் தேவரின் தருமம்**
7. **கட்டில் பேசுகிறது**
8. **விநாயகர் சதுர்த்தி**
9. **கயிற்றிரவு**
10. **பொன்னகரம்**
11. **திருக்குறள் குமரேச பிள்ளை**
12. **பால்வண்ணப்பிள்ளை**
13. **துன்பக்கேணி**
14. **அகல்யை சாப விமோசனம்**
15. **காஞ்சனை**
16. **மனக்குகை ஓவியங்கள்**
17. **கபாடபுரம்**
18. **புதிய நந்தன்**
19. **செல்லம்மாள்**
20. **வழி**
21. **நிகும்பலை**
22. **நினைவுப்பாதை**
23. **திருக்குறள் செய்த கூத்து**
24. **பக்த குசேலா**

25. காலனும் கிழவியும்
26. தெய்வம் கொடுத்த வரவு
27. மனித இயந்திரம்
28. உலகத்துச் சிறுகதைகள்
29. கல்யாணி
30. அன்று இரவு

## சிறுகதைத் தொகுதிகள்:

1. புதுமைப்பித்தன் கதைகள்
2. புதிய ஒளி
3. ஆண்மை
4. விபரீத ஆசை
5. சித்தி

## கு.ப. ராஜகோபாலன் (கிராம ஊழியன் இதழ் ஆசிரியர்)

1. நூருன்னிசா (முதல் சிறுகதை)
2. விடியுமா
3. திரை
4. பெண் மனம்
5. கிராம ஊழியன்
6. வசந்தம்
7. மன்னிப்பு
8. உண்மைக் கதை
9. கலை மகள்
10. கலா மோகினி

## சிறுகதைத் தொகுதிகள்

1. **கனகாம்பரம்**
2. **புனர்ஜென்மம்**
3. **காணாமலே காதல்**
4. **சிறிது வெளிச்சம்**
5. **காஞ்சன மாலை**

## ந. பிச்ச மூர்த்தி

1. **பதினெட்டாம் பெருக்கு**
2. **ஞானப்பால்**
3. **மாயமான்**
4. **இரும்பும் புரட்சியும்**
5. **பாம்பின் கோபம்**
6. **முள்ளும் ரோஜாவும்**
7. **கொலுபொம்மை**

## ஜெயகாந்தன்

1. **அக்னிப் பிரவேசம்**
2. **புதுச் செருப்பு கடிக்கும்**
3. **உண்மை சுடும்**
4. **பிரமோபதேசம்**
5. **இருளைத் தேடி**
6. **பிரளயம்**
7. **ஒரு பகல் நேர பாசஞ்சர் வண்டி**
8. **திரிசங்கு சொர்க்கம்**
9. **இரவில் ஆண்மை**
10. **கல்யாணி**
11. **சட்டை**
12. **முன்நிலவும் பின்பணியும்**

13. ஒரு பிரமுகர்
14. யாருக்காக அழுதான்?
15. நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க
16. ஓவர் டைம்
17. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
18. பாரிசுக்குப் போ
19. சில நேரங்களில் சில மனிதர்கள்
20. ரிஷிமூலம்
21. ஜய ஜய சங்கரா!
22. சுந்தர காண்டம்
23. கோகிலா என்ன செய்து விட்டாள்
24. ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்
25. வளைகரம்
26. உன்னை போல் ஒருவன்
27. சினிமாவுக்குப் போன சித்தாளு

## சிறுகதைத் தொகுதிகள்

1. உதயம்
2. ஒரு பிடி சோறு
3. தேவன் வருவாரா?
4. இனிப்பும் கரிப்பும்
5. சுமை தாங்கி
6. யுக சாந்தி
7. புதிய வார்ப்புகள்
8. சுயதரிசனம்
9. குருபீடம்
10. சக்கரங்கள் நிற்பதில்லை

## கல்கி (இரா.கிருஷ்ணமூர்த்தி)

1. **வீணை வாணி**
2. **திருடன் மகன் திருடன்**
3. **சாரதியின் தந்திரம்** (**முதல் சிறுகதை**)
4. **கேதாரியின் தாயார்**
5. **காரிருள் ஒரு மின்னல்**
6. **அபலையின் கண்ணீர்**
7. **மாடத் தேவன் சுனை**
8. **மயில்விழிமான்**
9. **கனையாழியின் கனவு**
10. **ஸ்வப்ன லோகம்**
11. **திருவெழுந்தூர் சிவக்கொழுந்து**
12. **ஒற்றை ரோசா**

## அறிஞர் அண்ணா

1. **பலாப் பழம்**
2. **சுடுமூஞ்சி**
3. **அன்னதானம்**
4. **பேய் ஓடிப் போச்சு**
5. **இரு பரம்பரைகள்**
6. **சூதாடி**
7. **செவ்வாழை**
8. **தஞ்சை வீழ்ச்சி**
9. **பிடி சாம்பல்**
10. **புலி நகம்**
11. **ராசாதி ராசா**
12. **சொர்க்கத்தில் நரகம்**
13. **ரங்கோன் ராதா**
14. **தசாவதாரம்**
15. **நீதி தேவன்**

16. மயக்கம்
17. வேலைக்காரி
18. பிரார்த்தனை
19. கன்னிப்பெண் கைம்பெண் ஆன கதை
20. குற்றவாளியோ?

## அகிலன்

1. சத்திய ஆவேசம்
2. ஊர்வலம்
3. எரிமலை
4. பசியும் ருசியும்
5. வேலியும் பயிரும்
6. குழந்தை சிரித்தது
7. சக்திவேல்
8. நிலவினிலே
9. ஆண்பெண்
10. மின்னுவதெல்லாம்
11. வழி பிறக்கும்
12. வெள்ளைச்சோறு
13. விடுதலை
14. நெல்லூர் அரிசி
15. செங்கரும்பு
16. வேங்கையின் மைந்தன்
17. பாவை விளக்கு
18. பெண்
19. வாழ்வு எங்கே?
20. சித்திரப்பாவை – (1975 ஞானபீடவிருது)
21. கங்கா ஸ்நானம்
22. நெஞ்சில் அலைகள்
23. மிஸ்டர் வேதாந்தம்
24. சகோதரர் அன்றோ!

25. கயல்விழி
26. புது வெள்ளம்
27. பெண்மலர்
28. நெஞ்சின் அலைகள்
29. நிலவினிலே
30. எரிமலை
31. எங்கே போகிறோம்?
32. இராஜத்தின் மனோரதம்

## கலைஞர் மு.கருணாநிதி

1. பழக்கூடை
2. தன்னடக்கம்
3. சங்கிலிசாமி
4. கிழவன் கதை
5. அரும்பு
6. முதலைகள்
7. நளாயினி

## ராஜாஜி

1. நிரந்த செல்வம்
2. பிள்ளையார் காப்பாற்றினார்
3. கற்பனைக்கோடு
4. சபேசன் காபி
5. திக்கற்ற பார்வதி

## கி. இராஜ நாராயணன்

1. கதவு
2. கன்னிமை
3. கோமதி

4. பேதை
5. பிஞ்சுகள்
6. கோபல்ல கிராமம்
7. கிடை
8. ஆறு
9. கரிசல் காட்டு கடுதாசி
10. கு.அழகிரி கடிதங்கள்
11. ஜடாயு
12. கரண்டு
13. மக்கள் தமிழ் வாழ்க
14. மாயமான்
15. நாற்காலி
16. புத்தக உலகம்
17. சவத்தொழிலாளர்
18. அங்கணம்
19. தாத்தா சொன்ன கதை

## தி. ஜானகி ராமன்

1. பாயசம்
2. மரப்பசு
3. கொட்டுமேளம்
4. சக்தி வைத்தியம்
5. வடிவேலு வாத்தியார்
6. அன்பே ஆரமுதே
7. மோகமுள்
8. சிவப்பு ரிஷி
9. சிலிர்ப்பு
10. நாலு வேலி நிலம்
11. செம்பருத்தி
12. யாதும் ஊரே
13. கோபுர விளக்கு
14. அம்மா வந்தாள்

## கு.அழகிரிசாமி (1923-70)

1. உறக்கம் கொள்வான் (முதல் சிறுகதை)
2. ஆண்மகன்
3. ஏமாற்றம்
4. அழகம்மாள்
5. ராஜா வந்திருக்கிறார்
6. புது உலகம்
7. திரிபுரம்
8. இருபெண்கள்
9. திரிவேணி
10. ஞாபகார்த்தம்
11. அன்பளிப்பு
12. இரண்டு ஆண்டும்
13. எங்கிருந்தோ வந்தார்
14. சாப்பிட்ட கடன்

## சிறுகதைத் தொகுதிகள்

1. சிரிக்கவில்லை
2. தவப்பயன்
3. காலகண்டி
4. தெய்வம் பிறந்தது
5. இரு சகோதரர்கள்
6. கற்பக விருட்சம்
7. வரப்பிரசாதம்
8. இருவர் கண்ட ஒரே கனவு
9. துறவு
10. கவியும் காதலும்
11. புதிய ரோசா

## டி.எஸ். இராமையா

இவர் மணிக்கொடி இதழை சிறுகதை இதழாக மாற்றியவர்.

1.பணம் பிழைத்தது
2. தழும்பு
3. நினைவு முகம்
4. மறக்கவில்லை
5. காம தகனம்
6. நட்சத்திரக் குழந்தை
7. கொத்தனார் கோயில்
8. மலரும் மணமும்
9. அடிச்சாரைச் சொல்லியழு.

## சுந்தர ராமசாமி

1. பிரசாதம்
2. விகாசம்
3. ரத்னபாயின் ஆங்கிலம்
4. பல்லக்கு
5. செங்கமலத்தின் சோப்பு
6. தண்ணீர்
7. உணவும் உணர்வும்
8. அக்கரைச் சீமையிலே
9. பொறுக்கி வர்க்கம்
10. கோயில் காளையும் உழவு மாடும்
11. முதலும் முடிவும்
12. நாடார் சார்
13. நைவேத்தியம்
14. பிள்ளை வரமா? பிறவா வரமா?

## கண்ணதாசன்

1. **சேரமான் காதலி**
2. **ஆட்டனத்தி ஆதிமந்தி**
3. **மாங்கனி**
4. **தைப்பாவை**

## மு.வரதராசனார்

1. **அந்த நாள்**
2. **செந்தாமரை**
3. **மண்குடிசை**
4. **கயமை**
5. **அகல் விளக்கு**
6. **மலர் விழி**
7. **வாடா மலர்**
8. **பெற்றமனம்**
9. **அல்லி**
10. **கரித்துண்டு**
11. **கள்ளோ காவியமோ**
12. **குறட்டை ஒலி**

## டி.செல்வராஜ்

1. **மலரும் சருகும்**
2. **தோல்**

## இந்திரா பார்த்தசாரதி

1. **குருதிப்புனல்**
2. **திசைகளுக்கு அப்பால்**
3. **ஆகாயத் தாமரை**
4. **மாயமான் வேட்டை**

## தி.சு.செல்லப்பா

1. சரசாவின் பொம்மை
2. மணல் வீடு
3. அறுபது
4. சத்யாகிரகி
5. வெள்ளை

## வல்லிக்கண்ணன்

1. முதற்கதை
2. சந்திர காந்தங்கள்
3. நாட்டியக்காரி
4. ஆண் சிங்கம்
5. வல்லிக்கண்ணன் கதைகள்
6. வாழ விரும்பியவன்

## அசோகமித்திரன்

1. புலி கலைஞன்
2. உரிமை வேட்கை
3. உத்திர ராமாயணம்
4. வாழ்விலே ஒரு முறை
5. அப்பாவின் ஸ்நேகிதர்
6. காலமும் ஐந்து குழந்தைகளும்
7. பிரயாணம்

## சுஜாதா (ரங்கராஜன்)

1. அம்மா மண்டபம்
2. ஒரு அரேபியத் தீவு
3. ஒரு நாள்
4. நகரம்

5. **அந்திம காலம்**
6. **அனாமிகா**
7. **எப்படியும் வாழலாம்**
8. **அரங்கேற்றம்**
9. **நிர்வாண நகரம்**
10. **என்றாவது ஒருநாள்**
11. **சுவடுகள்**
12. **ஜன்னல் மலர்**
13. **காரணம்**
14. **மிஸ்டர் முனுசாமி** 1.2.1
15. **மோதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்**
16. **கொலையுதிர் காலம்**
17. **அரிசி**
18. **அனிதாவின் காதல்கள்**
19. **ஓடாதே**
20. **இளநீர்**
21. **கால்கள்**

## லா.ச. ராமாமிர்தம்

1. **பச்சைக்கனவு**
2. **பாற்கடல்**
3. **மகாபலி**
4. **ஜனவரி இதழ்கள்**

## க.நா. சுப்ரமணியன்

1. **ஒரு நாள்**
2. **வாழ்ந்தவர் கெட்டார்**

## மௌனி (சுப்ரமணியம்)

1. ஏன்? (முதல் சிறுகதை)
2. தவறு (கடைசி சிறுகதை)

## சிறுகதைத் தொகுதிகள்

1. அழியாச் சுடர்
2. மனக்கோலம்
3. காதல் அலை
4. மாறுதல்
5. பிரபஞ்ச கானம்
6. மனத்தேர்

## நா. பார்த்தசாரதி

1. மணி பல்லவம்
2. பெண் விலங்கு
3. நீல நயனங்கள்
4. நெருப்புக் கனிகள்
5. சத்திய வெள்ளம்
6. குறிஞ்சி மலர்
7. சமுதாய வீதி
8. வலம்புரி சங்கு
9. பாண்டிமா தேவி
10. துளசி மடம்

## பின்வரும் இதழ்கள் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின

1. மணிக்கொடி
2. ஆனந்த விகடன்
3. கலை மகள்
4. கல்கி

5. **கணையாழி**
6. **தீபம் போன்ற இதழ்கள் ஆகும்.**

## <u>சிறுகதைத் தலைப்பு - ஆசிரியர் பொருத்துதல்</u>

**I பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1 | **கொலு பொம்மை** | - | **அ.கண்ணதாசன்** |
| 2 | **அக்னிப் பிரவேசம்** | - | **ஆ.கல்கி** |
| 3 | **அபலையின் கண்ணீர்** | - | **இ.ந.பிச்சமூர்த்தி** |
| 4 | **செவ்வாழை** | - | **ஈ.ஜெயகாந்தன்** |
| 5 | **மாங்கனி** | - | **உ.அறிஞர் அண்ணா** |

**விடை : இ ஈ ஆ உ அ**

II

| | | | |
|---|---|---|---|
| 1. | **வெள்ளைச்சோறு** | - | **அ.தி.ஜானகிராமன்** |
| 2. | **கற்பனைக்கோடு** | - | **ஆ.அகிலன்** |
| 3. | **மோகமுள்** | - | **இ.மு.வரதராசனார்** |
| 4. | **கரிசல்காட்டு கடுதாசி** | - | **ஈ.ராஜாஜி** |
| 5. | **மண்குடிசை** | - | **உ.கி.ராஜநாராயணன்** |

**விடை: ஆ ஈ அ உ இ**

III

| | | | |
|---|---|---|---|
| 1. | **மலரும் மணமும்** | - | **அ.சி.சு.செல்லப்பா** |
| 2. | **குருதிப்புனல்** | - | **ஆ.டி.எஸ்.ராமையா** |
| 3. | **சரசாவின் பொம்மை** | - | **இ.இந்திரா பார்த்த சாரதி** |
| 4. | **ஆண் சிங்கம்** | - | **ஈ.அசோகமித்திரன்** |
| 5. | **உரிமை வேட்கை** | - | **உ.வல்லிக்கண்ணன்** |

IV

1. சுவடுகள் - அ.லா.ச.ராமாமிர்தம்
2. பச்சைக்கனவு - ஆ.நா.பார்த்தசாரதி
3. தவறு - இ.சுஜாதா
4. பெண்விலங்கு - ஈ.சி.சு.செல்லப்பா
5. மணல் வீடு - உ.மௌனி

விடை: இ அ உ ஆ ஈ

V

1. சேரமான் காதலி - அ.கு.அழகிரிசாமி
2. கரித்துண்டு - ஆ.தி.ஜானகிராமன்
3. திரிவேணி - இ.மு.வரதராசனார்
4. கோபுர விளக்கு - ஈ.அகிலன்
5. பாவை விளக்கு - உ.கண்ணதாசன்

விடை: உ இ அ ஆ ஈ

VI

1. பிடிசாம்பல் - அ.கல்கி
2. ஒற்றை ரோசா - ஆ.ந.பிச்சமூர்த்தி
3. இருளைத் தேடி - இ.அறிஞர் அண்ணா
4. ஞானப்பால் - ஈ.புதுமைப்பித்தன்
5. பால்வண்ணம்பிள்ளை - உ.ஜெயகாந்தன்

விடை: இ அ உ ஆ ஈ

***********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழின் தொன்மை

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழ் தொன்மை - திராவிட மொழிகள்

- தம் எண்ணங்களையும் , கருத்துக்களையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது எது?
  மொழி
- உலகில் பேசப்பட்டு வரும் பல்வேறு மொழி களில் தனக்கென தனிச் சிறப்பை பெற்று பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி எது?
  மூலமொழி
- ஒரு மூலமொழியிலிருந்து தோன்றி வளரும் மொழிகளுக்கு என்ன பெயர்?
  கிளை மொழிகள்
- இந்தியாவில் மொத்தம் எத்தனை மொழிக் குடும்பங்கள் உள்ளதாக இந்திய மானிடவியல் கணக்கெடுப்புத் தெரிவிக்கின்றது?
  12
- இந்தியாவில் உள்ள 12 மொழிக் குடும் பங்களில் எத்தனை மொழிகள் பேசப்படுவதாக இந்திய மானிடவியல் கணக்கெடுப்புத்துறை தெரிவிக்கிறது?
  325
- இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும் மொழியியல் அறிஞர்கள் எத்தனை மொழிக் குடும்பங்களுள் அடக்குவர்?
  நான்கு மொழிக் குடும்பங்களுள் அடக்குவர்
- நம் நாட்டில் எத்தனைக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன?
  1300க்கும் மேற்பட்ட மொழிகளும் அதன் கிளை மொழிகளும்.
- மொழியியல் அறிஞர்கள் கூறும் நான்கு மொழிக் குடும்பங்கள் யாவை?
  இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ-ஆசிய மொழிகள், சீன-திபெத்திய மொழிகள்.
- இந்திய நாட்டை "மொழிகளின் காட்சி சாலை" எனக் குறிப்பிட்டுள்ள மொழியியல் அறிஞர் யார்?
  மொழியியல் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்.
- இன்று உள்ள திராவிட மொழிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
  23க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன.
- திராவிட மொழிகளை எத்தனை வகையாகப் பிரிப்பர்?
  மூன்று வகையாக பிரிப்பர்.

- மூவகை திராவிட மொழிகள் யாவை?
  1.தென் திராவிட மொழிகள்
  2. நடு திராவிட மொழிகள்
  3. வட திராவிட மொழிகள்.

- தென் திராவிட மொழிகள் யாவை?
  தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா.

- நடு திராவிட மொழிகள் யாவை?
  தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஐதபு.

- வட திராவிட மொழிகள் யாவை?
  குருக், மால்தோ, பிராகுய்.

- திராவிடப் பெருமொழிகள் யாவை?
  தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திராவிட மொழிகள் என அழைக்கப்படுகிறது

- உலக நாடுகளின் பழமையான நாகரிக ங்களுள் இந்திய நாகரீகமும் ஒன்று என்பது எந்த ஆய்வுக்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது?
  மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாய்வுக்குப் பிறகு

- கி.மு.3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த நாகரிகம் எது?
  இந்திய நாகரிகம்.

- உலக நாகரிகங்கள் அனைத்திற்கும் தாயாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய நாகரிகம் எது?
  இந்திய நாகரிகம்.

- இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த பழம்பெரும் நாகரிகமான இந்திய நாகரிகத்தை அறிஞர்கள் எவ்வாறு கருதுகின்றனர்?
  திராவிட நாகரிகம் என கருதுகின்றனர்.

- திராவிடர் பேசிய மொழி எது?
  திராவிட மொழி

- திராவிட மொழிகள் , திராவிட இனம் , திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவி டம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது என கூறியவர் யார்?
  கால்டுவெல்

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
  கால்டுவெல்

- திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் யார்?
  குமரிலபட்டர்

- திராவிடம் என்னும் சொல்லை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் யார்?
  கால்டுவெல்.

- மொழியியல் அறிஞர், தொடக்க காலத்தில் தமிழையும், அதன் கிளை மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும் எவ்வாறு வழங்கினர்?
  தமிளியன் அல்லது தமுலிக்

## தமிழின் சிறப்புகள்

அ) தமிளியன் அல்லது தமுலிக் மொழிகளுள் மிகுந்த சிறப்பும், பழமையும் வாய்ந்தது எது?
தமிழ்

ஆ) திராவிட என்னும் சொல் எந்த மொழியிலிருந்து உருவானது?
தமிழ்

இ) திராவிட மொழி என்றாலே எம்மொழியைக் குறிக்கும்?
தமிழ் மொழி

ஈ) திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான, பண்பட்ட மொழி எது?
தமிழ்

உ) திராவிட மொழிகளுள் மூலத் திராவிட மொழியின் வடிவத்தையும், மொழிக்கூறுகளையும் வேர்களையும் பெருமளவில் கொண்டுள்ள மொழி எது?
தமிழ்

ஊ) முன்னைத் திராவிட மொழி, மூலத் திராவிட மொழி, தொன்மை திராவிட மொழி என பல்வேறு சொற்களால் குறிக்கப்பட்ட மூலமொழி எது?
தமிழ்மொழி

எ)"எண்பது விழுக்காடு" அளவிற்கு திராவிட மொழிக் கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி எது?
தமிழ்.

- தமிளியன் அல்லது தமுலிக் இனமொழிகள் அனைத்தையும் இணைத்து "திராவிட" என்னும் சொல்லை கையாண்டதாக கூறியுள்ள அறிஞர் யார்? கால்டுவெல்

- திராவிட மொழிகள் பாடத்தில் இடம் பெற்றுள்ள ஓலைச்சுவடி அமைந்துள்ள நூலின் பெயர் யாது?அந்நூலில் அது எத்தனையாவது ஓலைச்சுவடி?
  சிறுபஞ்சமூல நூலின் 21வது ஓலைச்சுவடி

- அழிந்து வரும் பண்டையத் தமிழ் ஓலைச்சுவடிகளை புதுப்பித்துப் பாதுகாக்க , பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிறுவனத்தின் பெயர் என்ன?
  யுனெஸ்கோ நிறுவனம்.

- கடல் கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம் எது?
  இலெமூரியாக் கண்டம்.

- திராவிட என்னும் சொல் தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவாயிற்று எனக் கூறும் மொழியியல் அறிஞர் யார்? ஈராஸ் பாதிரியார்

- தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்க செய்துள்ளது எது? தமிழின் தொன்மைச் சிறப்பும், தலைமைச் சிறப்பும்.

- தமிழ் மொழியில் இன்று நமக்கு கிடைத்துள்ள நூல்களுள் மிகப்பழமையான நூல் எது? தொல்காப்பியம்.

- செவ்வியல் மொழி எனப்படுவது யாது?
  தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனை வளம், கலைவளம், பண்பாட்டு வளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மை பெற்ற மொழி செவ்வியல் மொழி எனஅழைக்கப்படும்.

- நம் தாய்மொழியாம் தமிழ் எவ்வாறு ஒளிர்கிறது?
  செவ்வியல் மொழியாக ஒளிர்கிறது.

- மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையாகும் மொழி எது?
  மூலமொழி

- பாரதிதாசன் எவற்றை சாடினார்?
  மூடநம்பிக்கையை

- உரைநடைக் காலம் என எந்த நூற்றாண்டைக் கூறுகிறோம்?
  இருபதாம் நூற்றாண்டு.

********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தேவநேயப் பாவாணர்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தேவநேயப் பாவாணர்

- காலம் - 7.2.1902 முதல் 15.01.1981 வரை
- பிறந்த ஊர் - சங்கரன்கோவில்
- பெற்றோர் - ஞானமுத்து, பரிபூரணம்
- தேவநேயப் பாவாணர் சிறப்பு பெயர்கள் - மொழி ஞாயிறு, செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங்காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்.
- தேவநேயப் பாவாணர் எழுதிய நூல்கள் - தமிழ் வரலாறு , முதல் தாய்மொழி , தமிழ்நாட்டு விளையாட்டுகள்தமிழர் திருமணம், வடமொழி வரலாறு , உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் , திருக்குறள் மரபுரை முதலான நாற்பத்து மூன்று நூல்களைப் படைத்தார்.

## பணி

- பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டார்.
- பாவாணர் மதுரையில் 5.1.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மாந்தர் தோற்றமும், தமிழர் மரபும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

## தமிழுக்காக தேவநேயப் பாவாணர் ஆற்றிய பணிகள்

- தனித் தமிழ் ஊற்று , செந்தமிழ் ஞாயிறு , இலக்கியப் பெட்டகம், இலக்கணச் செம்மல், தமிழ் மானங்காத்தவர், தமிழ், தமிழர் நலம் காப்பதையே உயிர் மூச்சாகக் கொண்டவர்.

- உலக முதன்மொழி தமிழ் , இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ் , திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவியவர்.

- உலகின் முதல் மனிதன் தமிழன் . தமிழன் தோன்றிய இடம் குமரிக் கண்டமே என்பதும் , மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகம் என்பதையும் ஆய்வுப் புலத்தின் இரு கண்களாகக் கொண்டவர்.

- தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறியவர்.

- கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெறவேண்டும் என்றும், பிறப்பு இறப்பு தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தியவர்.

- தமிழ் வளர்த்தால் பசியும் பட்டினியும் பஞ்சாய் பறந்துவிடும் என்று எண்ணியவர்.

- தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் - கால்டுவெல்

- தனித்தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற் கலைஞர்

- தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் - மறைமலை அடிகள்

- தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப் பாவாணர்

- வறுமையில் வாடினாலும் கையில் பணம் கிடைத்தால் நூல்கள் வாங்கியவர் தேவநேயப் பாவாணர்

- சென்னை அண்ணா சாலையில் உள்ள நூலகம் தேவநேயப் பாவாணர் பெயரில் செயல்பட்டு வருகிறது.

- பாவாணர் கோட்டம், அவரின் முழு உருவச் சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை இராசப் பாளையத்திற்கு அருகில் உள்ள முறம்பில் நிறுவப்பட்டுள்ளது

## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

- பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் - துரை.மாணிக்கம்

- பெருஞ்சித்திரனார் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் என்னும் ஊரில் 10.3.1933 அன்று பிறந்தார்.

- பெருஞ்சித்திரனாரின் பெற்றோர் - துரைசாமி - குஞ்சம்மாள்

- சிறப்பு பெயர் - பெருஞ்சித்திரனார்
- பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்கள் - கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம்

- இதழ்கள் - தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்

- மறைவு - 11.6.1995

## தொடர்புடைய வினாக்கள்

- ஓய்வாக இருக்கும்போது சிறுவர்கள் எதைப் பழக வேண்டும்?
  ஓவியம் வரைந்து பழக வேண்டும்

- இசையால் மறைந்து போவது எது?
  துன்பம்

- உலக நிகழ்வுகளை அறிந்தால் எது மேம்படும்?
  அறிவுத்திறன்

- ஓய்வும் பயனும் என்னும் தலைப்பில் உள்ள சிறுவர் பாடலை எழுதியவர் யார்?
  பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

- ”ஓய்வாக இருக்கையில் தம்பி” என்னும் பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது? பள்ளிப்பறவைகள் என்னும் பாடல் தொகுப்பில் இரண்டாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

- குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என்னும் மூன்று பிரிவாக அமைந்துள்ள நூல் எது?
  பள்ளிப்பறவைகள்

- ஏட்டுக்கல்வியறிவுடன் தேவையான கல்வியறிவு எது?
  தொழிற்கல்வியறிவு

********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - நாடகக்கலை

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## நாடகக்கலை

தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முப்பெரும் பாகுபாடு கொண்டது.

1. நாடகம் என்னும் சொல் நாடு + அகம் எனப் பிரியும்.

2. நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதனால், நாடகம் எனப் பெயர் பெற்றது.

3. நாடகம் என்பது உலக நிகழ்ச்சியைக் காட்டும் கண்ணாடி.

4. கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக்காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் எனப்படும்.

5. நாடகத்திற்கு கூத்துக்கலை என்னும் பெயரும் உண்டு.

6. தமிழின் தொன்மையான கலை வடிவம் - நாடகம்.

7. தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியல், நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறது.

8. ”கூத்தாட்டவைக்குழாத் தற்றே” என்னும் குறள் வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது.

9. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ”நாடகமேத்தும் நாடகக் கணிகை” என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார்.

10. தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதே - நாட்டியம் ஆகும்.

11. ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம்புனைந்து ஆடுவதற்கு நாடகம் என்று பெயர்.

12. நாட்டியம், நாடகம் இரண்டிற்கும் பொதுவாகக் கூத்து என்னும் சொல்லே வழக்கில் இருந்தது.

13. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் - அடியார்க்கு நல்லார்.

14. சிலப்பதிகாரம் - நாடகக் கலையைப் பற்றியும் காட்சித் திரைகளைப் பற்றியும் நாடக அரங்கின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளது.

15. பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய நாடகவியல் என்னும் நூலில், நாடகம், அதன் விளக்கம், வகைகள் எழுதப்படவேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

16. சுவாமி விபுலானந்தர் எழுதிய நூல் - மதங்க சூளாமணியும் மறைமலையடிகள் எழுதிய சாகுந்தலமும் நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும்.

17. தமிழ்நாடகத் தந்தை, நாடகப் பேராசிரியர் என்ற அடைமொழிகளால் அழைக்கப்படுவர் பம்மல் சம்பந்தனார்.

18. பம்மல் சம்பந்தனார் நாடகத்தமிழ் என்னும் தம்நூலில்

தொழில்முறை நாடக அரங்குகளைப் பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார். சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார். இவரது "மனோகரா" நாடகம் எழுபது ஆண்டுகளாகத் தமிழ் நாடகமேடையில் புகழ்பெற்று விளங்கியது.

19. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் "மத்தவிலாசம்" என்னும் நாடக நூலை எழுதியுள்ளான்.

20. பதினோராம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக் காலத்தில் இராசராஜேஸ்வர நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

21. காசி விசுவநாதர் "டம்பாச்சாரி விலாசம்" என்னும் நாடகம் எழுதியுள்ளார்.

22. பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் கவிதை நாடகக் காப்பியத்தை கி.பி. 1891 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

23. மனோன்மணியம் என்னும் கவிதை லார்ட் லிட்டன் எழுதிய மறைவழி என்னும் ஆங்கிலக்கதையைத் தழுவி எழுதப்பட்டது.

25. தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம் - கதரின் வெற்றி.

24. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள். இவர் நாடக உலகின் இமயமலை என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றும் அழைக்கப்பட்டார்.

25. சங்கரதாசு சுவாமிகள் - பிரகலாதன், சிறுத்தொண்டர், இலவகுசா,

பவளக்கொடி, அபிமன்யு-சுந்தரி முதலான நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

26.“தமிழ் நாடகத் தந்தை” என்று அழைக்கப்பட்டவர் பம்மல்சம்பந்தனார். இவர் தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

27.மதுரையில் 1942 ஆம் ஆண்டில் புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் அரங்கேறியது. நாடகம் முழுவதும் ஔவையாராக நடிக்கும் வாய்ப்பை தி.க.சண்முகனார் பெற்று சிறந்த முறையில் நடித்ததால் அவரை ஔவை சண்முகனார் என மக்கள் அழைத்தனர்.

28. ’நாடகச் சாலையொத்த நற்கலா சாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து” - எனக் கூறியவர் கவிமணி

29. மறைமலையடிகள் எழுதிய நாடகம் - சாகுந்தலம்

## இசைக் கலை

- இசை என்பதற்கு இசைத்தல் என்பது பொருள்.
- இசைத்தல் என்பதற்கு பொருந்துதல், ஒன்றாதல் என்று பொருள்.
- “இயைபே புணர்ச்சி” என்பது தொல்காப்பிய உரையியல் நூற்பா.
- இசை என்னும் சொல் “இயை” என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது.
- இசையானது “கந்தருவ வேதம்” என்று அழைக்கப்படும் சிறப்பினை உடையது.
- இடைக்காலத்தில் சமயங்களின் அரவணைப்பில் வளர்ந்தது “இசை”

- நாயக்கர்கள் காலத்தில் “தெலுங்கிசை” செல்வாக்குற்றது. தமிழிசை வீழ்ந்தது.

## தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் இசை

- பண்டைத் தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.
- தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் சிலப்பதிகார இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- ஐந்திணைக்குரிய கருப்பொருள்களில் யாழ், பறை ஆகிய இசைக் கருவிகளையும் தொல்காப்பியர் கூறுகிறார்.
- ‘நரம்பின் மறை’ என்று தொல்காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கண நூல் உண்டென உணரமுடிகிறது. “இசையோடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர்” (தொல்காப்பியர்)
- மன்னர்களின் வாயிலில் நின்று துயிலெடை பாடும் “பாணர்கள்” இருந்தனர். இதனை இடைக்காலத்தில் “திருப்பள்ளியெழுச்சி” என்றனர்.

## இலக்கியங்களில் இசை

- பரிபாடல் தூக்கு வண்ணம் குறித்துக் கூறுகிறது.
- கலித்தொகையின் ‘தாழிசை’ என்பது இசைப்பாட்டே என்கிறது.
- குறப்பெண் பாடிய ”குறிஞ்சிப் பண்” கேட்டு ”யானையொன்று தினையுண்ண மறந்து நின்றது” என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

- பண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பதற்கு காஞ்சிப் பண்ணைப் பாடினர் என்றும் விளரிப் பண்ணைப் பாடி நரியைத் துரத்தினர் என்றும் புறநானூறு பேசுகிறது.
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தும் அக்காலத்து நிலவியதற்கு ஒப்ப வழங்கிய இசை வகைகளாகும்.
- செவ்வழி என்பது முல்லைக்கும், நெய்தலுக்கும் உரிய மாலைப் பண்ணாகும். (மாலை நேரத்திற்குரிய பண்ணாகும்)
- மருதப்பண் காலை நேரத்திற்கு பாடப்பட்டது
- ”யாழோர் மருதப் பண்ணை பாடப் பொழுது விடிந்தது” என மதுரைக் காஞ்சிபேசுகின்றது.

  ”விறலியர் கரிய கோட்டையுடைய கீறியாழிலே” என மருதப் பண்ணை பாடினார்.
- மாலை நேரத்து செவ்வழிப் பண்ணை “ஆகுறி”, “முழவு” என்னும் கருவிகளோடு இசைத்ததை மதுரைக் காஞ்சி மூலம் அறியலாம்.
- பண்டின் ஓசைக்குக் காமரம் என்னும் பண் ஒப்பிடப்பட்டதை, “காமர் பண்டு காமரம் செய்யும்” என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.
- இசைக் கலைஞர்கள் பாணர் எனப்பட்டனர்.
- பாணர்களுக்கு பரிசளித்துக் காத்த வள்ளல்கள் பாண்பசிப் பகைவர் எனப்பட்டனர்.
- இசையைக் குறிக்கும் பண் என்ற சொல்லிலிருந்து பாணர் என்ற சொல் தோன்றி இருக்கலாம் என்பர், வள்ளல்களைச் சார்ந்து இருந்த பாணர்கள், பாணர் பெருமக்கள் என புகழப்பட்டனர். பாணர்கட்கு –

பொற்றாமரையும், பாணிகட்கு – பொன்னரி மாலையையும் வள்ளல்கள் பரிசளித்தனர்.

- சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையிலுள்ள கானல் வரி ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி குன்றக்குரவை பகுதிகள் இசையைப்பற்றியன.
- ”தமிழ் கலைக்களஞ்சியம்” என சிலப்பதிகாரம் அழைக்கப்படுகிறது.
- குழலைச் செய்யும் முறைப் பற்றி சிலம்பு அரங்கேற்றக் காதையின் ஆறாம் அடிக்கான உரையில் காணலாம்.
- பேரியாழ் – 21 நரம்புகள்
- மகரயாழ் – 19 நரம்புகள்
- சகோடயாழ் – 14 நரம்புகள்
- செங்கோட்டுயாழ் – 7 நரம்புகள்

## பக்தி இலக்கியம்

- காரைக்கால் அம்மையார் – திருவண்ணத்தந்தாதி பதிகம் இசையுடன் பாடினார்.
- மூவர் முதலிகள் – இசையை நன்கு வளர்த்தனர்.
- சம்பந்தர் – யாழ்முறி பதிகம் பாடினார்
- நம்மாழ்வார் எழுதிய ‘திருவாய்மொழி’ நூல் இசையை மேலும் வளர்த்தது.

## பறை முழக்கம்

1.தொண்டகப்பறை – குறிஞ்சி நிலத்துப் பறை

2.கினைப்பறை – பாணர்கள் பயன்படுத்திய பறை

3.நெய்தல்பறை – சாவில் அடிக்கப்பட்ட சாப்பறை

4.ஏறுகோட்பறை – முல்லை நிலத்தின் தழுவுதலின் போது ஒலித்த பறை

## இசை நூல்கள்

- முதற்சங்கத்தில் பெருநாரை பெருகுருகு ((முதுநாரை, முதுகுருகு) என்ற நூல்கள் இருந்தன.
- பெருநாரை என்பது இசைப்பற்றிய நூல். நரம்பு – நார் – நாரை
- பெருகுருகு என்பது துணைக்கருவிகள் பற்றிய இசைநூல்
- அடியார்க்கு நல்லார் கூறும் பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம் என்னும் இசைநூல்களும் குறிப்பிடத்தக்கவை.
- "பஞ்சபாரதீயம்" நாதராலும் "இசைநுணுக்கம்" சய்ந்தன் என்னும் பாண்டிய இளவரசரால் இயற்றப்பட்டது என்பார் அடியார்க்கு நல்லார். அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் மற்றொரு இசை நூல் "இந்திர காவியம்".
- இடைச்சங்கத்தில் பேரிசை சிற்றிசை என்ற இசை நூல்கள் இருந்தன.
- கடைச்சங்கத்தில் இசைமரபு இசை நுணுக்கம் ஐந்தொகை அல்லது பஞ்சமரபு என்னும் இசை நூல்கள் இருந்தன.
- சேக்கிழார் – 'பெரியபுராணம்' – ஆனாயநாயனார் புராணத்தில் யாழ்த்திறம் பற்றியும் குறிப்புகள் உள்ளன.
- அருணகிரிநாதர் – 'திருப்புகழ்பாடல்கள்' தாளக் கலைக்கு வேதமாகத் திகழ்கிறது.

## இசைக் கருவிகள்

- தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என இசைக்கருவிகளை நான்காகப் பகுத்துக் கூறுகிறது.
- கஞ்சக்கருவி என்பது உலோகக் கருவிகளைக் குறிக்கும்.
- நான்கு இசைக்கருவிகளோடு பாடுவோரின் மிடற்று ஓசையையும் சேர்த்து ஐந்தையும் "பஞ்சமா சத்தம்" என்பர்.
- துளைக்கருவிகள் – மரபு, சூழல், கோடு, தூம்பு.
- தோற்கருவிகள் – முழவு, முரசு, பதலை ,பறை , துடி
- கஞ்சக்கருவி – கைமணி தாளம் கஞ்சதாளம் கொண்டி
- நரம்புக்கருவி – யாழ், வீணை, கின்னரி
- ஆண்களின் திரண்ட தோளுக்கு உவமையாகக் கூறப்படும் 'முழவு' ஆந்தையின் குரல் போல் ஒலிக்கும்.
- 'ஆகுனி' தேரையின் ஒலி போல் ஒலிக்கும்.
- 'தட்டை' ஆமை போன்ற உருவமுடையதென்றும் மதிபோல் வடிவமும் உடையது என்றும் கூறப்படும்.
- தடாரி போர்க்களத்தில் சங்கோடு சேர்ந்து முழக்கப்படும்.
- வயிர் (அன்றிலின் குரல் போல் ஒலிக்கும்) என்று சங்ககாலத்தில் பல்வேறு இசைக்கருவிகள் உண்டு.
- இசையை ஏழிசை என்பர்.

## நாட்டுப்புறப்பாடல்கள்

- நாட்டுப்புறப்பாடல்கள் எழுதப்படாத , எல்லாருக்கும் தெரிந்த கதை – வாய்மொழி இலக்கியம்

- நாட்டுப்புறப்பாடல்களை 7 வகையாக பிரிக்கலாம்.
- குழந்தைக்கு – தாலாட்டு
- வளர்ந்த குழந்தைக்கு – விளையாட்டுப்பாடல்கள்
- களைப்பு நீங்க வேலை செய்வோர் பாடுவது – தொழில் பாடல்கள்
- திருமணம் (ம) பிற சடங்குகளில் பாடுவது – சடங்கு (அ) திருமணப்பாடல்
- சாமி கும்பிட – வழிபாட்டுப்பாடல்
- இறந்தோர்க்கு பாடுவது – ஒப்பாரி
- சுதந்திர காலத்தில் உருவான நாட்டுப்புற பாடல் - 'ஊரான் ஊரான் தோட்டத்திலே'

*******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - புதுக்கவிதை

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# புதுக்கவிதை

## ந. பிச்சமூர்த்தி

- ✓ **காலம்** : 1900 – 1976
- ✓ **ஊர்** : கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்)
- ✓ **இயற்பெயர்** : ந.வேங்கட மகாலிங்கம்
- ✓ **புனைப்பெயர்** : ந.பிச்சமூர்த்தி
- ✓ **தொழில்** :
    - 1924 – 1938 வரை வழக்குரைஞர்
    - 1938 – 1954 வரை கோவில் நிர்வாக அலுவலர்.
- ✓ **படைப்பு** : கதைகள் மரபு கவிதைகள், புதுக்கவிதைகள் ஓரங்க நாடகங்கள்
- ✓ புதுக்கவிதைக்குத் தோற்றுவாய் செய்ததால் 'புதுக்கவிதையின் பிதாமகர்' எனப் போற்றப்படுகிறார்.
- ✓ தமிழ்ப் புதுக்கவிதை இயக்கத்தை தோற்றுவித்தவர்.
- ✓ தமிழில் வந்த முதல் கவிதை தொகுதி இவருடையது – புதுக்குரல்கள் என்ற கவிதைத் தொகுதி
- ✓ இவருடைய முதல் கவிதை – நடுத்தெரு நாராயணன்
- ✓ இவருடைய முதல் சிறுகதை – சயன்சுக்குப் பலி
- ✓ இவருடைய முதல் வசனக்கவிதை – காதல் (1934)
- ✓ 1933 – "முள்ளும் ரோஜாவும்" என்ற சிறுகதை கலைமகள் பத்திரிக்கை நடத்திய சிறுகதை போட்டியில் பரிசு பெற்றது.

## புதுக்கவிதை நூல்கள்

- காட்டுவாத்து (1962)
- பூக்காரி
- வழித்துணை
- கிளிக் குஞ்சு
- கிளிக் கூண்டு (1937)
- நெருப்புக் கோழி
- காட்டுவாத்து

- புதுக்குரல்கள்

## பணி

கலைமகள் – சிறுகதை ஆசிரியர்
ஹனுமன் – துணை ஆசிரியர்
நவ இந்தியா – ஆசிரியர்
மணிக்கொடி – கவிதை, சிறுகதை ஆசிரியர்

## சிறுகதை

- பதினெட்டாம்பெருக்கு
- மோகினி
- மாங்காய் தலை
- காபூலிக் குழந்தைகள்
- விஜயதசமி
- இரட்டை விளக்கு சம்பரும் வேட்டியும்

## மேற்கோள்

"நீயின்றி மண்ணுண்டோ விண்ணுண்டோ ஒளி உண்டோ நிலவும் உண்டோ" என்று பொங்கல் வழிபாடு பாடலொன்றில் சூரியனைப் பாடுகிறார்.

## சி.சு. செல்லப்பா

- காலம் : 1912 – 1997
- ஊர் : சின்னமனூர் (தேனி மாவட்டம்)
- எழுத்து என்ற இலக்கிய இதழைத் தொடங்கியவர் - (1958)
- தமிழ் சிறுபத்திரிக்கையின் முன்னோடி "எழுத்து"
- 'சுதந்திர தாகம்' நாவலுக்கு சாகித்திய அகாடமி விருது கிடைத்தது.
- இதழாசிரியர், எழுத்தாளர், திறனாய்வாளர், நாடக ஆசிரியர்.
- சுதந்திர சங்கு என்ற இதழில் முதன் முதலாக எழுதத் தொடங்கினார்.

- மணிக்கொடி இதழ் இவரின் படைப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியது.
- “சரசாவின் பொம்மை” சிறுகதை இவரை சிறந்த எழுத்தாளராக அறிமுகப்படுத்தியது.
- 1947-1953 -இல் தினமணிக் கதிரில் பணிபுரிந்தார்.

## நூல்கள்

- ஜீவனாம்சம் சுதந்திர தாகம் – புதினம்
- வாடிவாசல் – குறும் புதினம்
- மாற்று இதயம் – கவிதைத் தொகுதி
- இன்று நீ இருந்தால் – குறுங்காப்பியம்
- சரசாவின் பொம்மை, மணல் வீடு, வெள்ளை, சி.சு.செல்லப்பா
- அறுபது (7-தொகுதிகள்), சத்தியாகிரகி – சிறுகதை தொகுதிகள்

## தருமு சிவராமு

- பிறப்பு : 1939 – 1997
- புனைபெயர் : பிரமிள், பானுசந்திரன், அரரூசிவராம்
- ஊர் : திரிகோணமலை (இலங்கை கிழக்கு மாகாணம்)
- படிம கவிஞர், ஆன்மீகக் கவிஞர்
- ‘படிமச் சிற்பி’ ‘யுனிக் இமேஜிஸ்ட்’ என்று சி.சு.செல்லப்பா இவரை குறிப்பிடுவார்.
- ‘கைப்பிடி அளவு கடல்’ என்னும் புகழ்பெற்ற கவிதைத் தொகுப்பைத் தந்துள்ளார்.
- புதுக்கவிதையில் அறிவியலைப் புகுத்தியவர்.

## விருதுகள்

- நியூயார்க் விளக்கு அமைப்பு இவருக்கு “புதுமைப்பித்தன்” விருது வழங்கியது.
- கும்பகோணம் சிலிக்குயில் “புதுமைப்பித்தன் வீறு” என்ற விருது வழங்கியது.

## நூல்கள்

- ஆயி பிரசன்னம், லங்காபுரிராஜா – குறுநாவல்

## கவிதைத் தொகுதிகள்

- கண்ணாடியுள்ளிருந்து
- கைப்பிடியளவு கடல்
- பிரமிள் கவிதைகள்
- மேல் நோக்கிய பயணம்

## சிறுகதைகள்

- காடன் கண்டது
- நீலம்
- பாறை
- அசரீரி
- கோடாரி
- சந்திப்பு
- சாமுண்டி
- கிசுகிசு
- கருடனூர் ரிப்போர்ட்
- அங்குலி மாலா
- நாடகம்
- நட்சத்திரவாசி

## பசுவய்யா

1. பிறப்பு : 1931 – 2005
2. இயற்பெயர் : சுந்தர ராமசாமி
3. புனைபெயர் : பசுவய்யா
4. பிறந்த ஊர் : மகாதேவர் கோயில் கிராமம் (நாகர்கோவில் மாவட்டம்)
5. தொடங்கிய இதழ் : காலச்சுவடு
6. இவரை "புதுக்கவிதை வரலாற்றில் ஒரு துருவ நட்சத்திரம்" என்பர்.

7. ‘தமிழ் கணினிக்கான விருது’, ‘இளம் படைப்பாளர் விருது’ இவர் பெயரில் வழங்கப்படுகிறது.

## எழுதிய நூல்கள்

## கவிதை

- நடுநிசி நாய்கள் (1975)
- யாரோ ஒருவனுக்காக (1987)

## நாவல்கள்

- ஒரு புளிய மரத்தின் கதை
- ஜே.ஜே. சில குறிப்புகள்
- குழந்தைகள், பெண்கள், ஆண்கள்
- மொழிபெயர்ப்பு நூல்கள்
- செம்மீன் (மலையாளம் – புதினம்) – தகழி சிவ சங்கரம்பிள்ளை
- தேரோட்டியின் மகன் (மலையாளம் – புதினம்) – தகழி சிவ சங்கரம்பிள்ளை
- தொலைவிலிருக்கும் கவிதைகள்

# இரா. மீனாட்சி

- பிறப்பு : 1941
- ஊர் : திருவாரூர்
- பெற்றோர் : இராமச்சந்திரன் – மதுரம்
- மீனாட்சி அல்லது ராமச்சந்திரன் என அழைக்கப்படுகிறார்.

## கவிதை நூல்கள்

- உதய நகரிலிருந்து
- மீனாட்சி கவிதைகள்
- தீபாவளிப் பகல்

- செம்மண் மடல்கள்
- சுடு பூக்கள்
- மறுபயணம்
- வாசனைப் புல்
- கொடி விளக்கு
- நெருஞ்சி
- ஆங்கிலப் படைப்பு
- 'இந்திய பெண்கவிகள் பேசுகிறார்கள்'

## தொகுப்பு நூல்கள்

- கொங்குதேர் வாழ்க்கை
- பறத்தல் அதன் சுதந்திரம்
- சிற்றகல்

## சி. மணி

- பிறப்பு : 1936 – 2009
- இயற்பெயர் : எஸ். பழனிசாமி
- புனைப்பெயர் : சி.மணி, வே.மாலி
- பணி : ஆங்கிலப் பேராசிரியர்
- 'எழுத்து' என்ற இதழில் எழுதிய கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

## நூல்கள்

- கவிதை
- வரும் போகும்
- ஒளிச் சேர்க்கை
- இதுவரை
- நகரம்
- விமர்சனம்
- யாப்பும் கவிதையும்
- மொழிபெயர்ப்பு
- டேனியா செயல்முறைத் திட்டம்

- தாவோதேஜிஸ்

## விருதுகள்

- இருமுறை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் விருது (1983, 1985)
- ஆசான் கவிதை விருது
- கவிஞர் சிற்பி விருது
- விளக்கு இலக்கியப் பரிசு (2002)

## சிற்பி பாலசுப்பிரமணியம்

- பிறப்பு : 1936
- ஊர் : "ஆத்துப் பொள்ளாச்சி" (கோவை மாவட்டம்)
- இயற்பெயர் : பாலசுப்பிரமணியம்
- புனைப்பெயர் : சிற்பி
- பெற்றோர் : பொன்னுசாமி, கண்டியம்மாள்
- பெற்றோர் இட்ட பெயர் : நடராச பாலசுப்பிரமணிய சேதுராமசாமி
- வானம்பாடி இதழின் பொறுப்பாசிரியர்
- படிமக் கவிஞர், வானம்பாடி, இதழ்க்கவிஞர்
- பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தவர்
- சிற்பியின் கவிதைகள், ஆங்கிலம், கன்னடம், இந்தி, மலையாளம், மராத்தி மொழிகளில் வெளிவந்துள்ளன.

## கவிதை நூல்கள்

- சிரித்த முத்துக்கள் (கதைக் கவிதை)
- நிலவுப்பூ
- புன்னகை பூக்கும் பூக்கள்
- சர்ப்பயாகம்
- பூஜ்ஜியங்களின் சங்கிலி
- மௌன மயக்கங்கள் (காதல் சிறுகதைக் கவிதை)
- சூரிய நிழல்
- மார்கழிப் பாவை

- பாரதி கைதி எண் 203
- இறகு
- ஒரு கிராமத்து நதி (2002 – சாகித்திய அகாடமி விருது)
- பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு
- சிற்பி கவிதைப் பயணங்கள்
- கவிதை வானம்
- மூடு பனி
- தேவயானி
- மகாத்மா
- நீலக் குருவி
- சிறுவர் நூல்கள்
- சிற்பி தரும் ஆத்திச்சூடி
- வண்ணப் பூக்கள்
- புதினங்கள்
- அக்னி சாட்சி
- ஒரு சங்கீதம் போல
- வாரணாசி
- பகுத்தாய்வு நூல்கள்
- பாரதி மற்றும் வள்ளத்தோள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு
- இராமலிங்க வள்ளலாரின் அருட்பா திரட்டு

## உரைநடை நூல்கள்

- இல்லறமே நல்லறம்
- அலையும் சுவடும்
- படைப்பும் பார்வையும்
- நேற்றுப் பெய்த மழை
- மின்னல் கீற்று
- காற்று வரைந்த ஓவியம்
- மகாகவி
- புதிர் எதிர்காலம்
- மனம் புகும் சொற்கள்
- கவிதை நேரங்கள்

## தொகுப்பு நூல்

- நதிக்கரை சிற்பங்கள்

## விருதுகள்

- தமிழக அரசு விருது – மௌன மயக்கங்கள் என்ற கவிதைக்கு கிடைத்தது
- பாவேந்தர் விருது
- கபிலர் விருது
- பாஸ்கர சேதுபதி விருது
- தமிழ்நெறிச் செம்மல் விருது
- சொல்கட்டு கவிஞர் விருது
- மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது
- சாகித்திய அகாடமி விருது
- ராணா விருது

## மு. மேத்தா

- பிறப்பு : பெரியகுளம் (தேனி மாவட்டம்) – 1945
- முழுப்பெயர் : முகமது மேத்தா
- பணி : கல்லூரிப் பேராசிரியர், திரைப்படப் பாடலாசிரியர்,
- கதை, வசனகர்த்தா.
- தமிழாசிரியராக இருந்து ‘வானம்பாடி’ என்ற இதழை எழுதினார்.
- உவமை மற்றும் உருவகங்களில் பழமையையும், புதுமையையும் இணைத்தவர்.

## படைப்புகள்

- ஊர்வலம் (தமிழக அரசு பரிசு)
- மனச்சிறகு (மரபு கவிதை)
- அவளும் நட்சத்திரம் தான் (கவியரங்கக் கவித் தொகுதி)
- சோழ நிலா (வரலாற்று நாவல்)
- ஆகாயத்துக்கு அடுத்த வீடு (சாகித்ய அகாடமி விருது – 2006)

- கண்ணீர்ப் பூக்கள்
- முகத்துக்கு முகம்
- வெளிச்சம் வெளியே இல்லை
- அவர்கள் வருகிறார்கள்
- நடந்த நாடகம்
- காத்திருந்த காற்று
- திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்
- நந்தவன நாட்கள்
- ஒரு வானம் ஒரு சிறகு
- இதயத்தின் நாற்காலி

## ஈரோடு தமிழன்பன்

- காலம் : 1940
- ஊர் : சென்னிமலை (ஈரோடு மாவட்டம்)
- இயற்பெயர் : ஜெகதீசன்
- புனைப்பெயர் : விடிவெள்ளி, ஈரோடு தமிழன்பன்
- பெற்றோர் : நடராஜா – வள்ளிம்மாள்
- பணி : தமிழ் பேராசிரியர்
- முனைவர் பட்டம் : தனிப்பாடல்கள் பற்றிய ஆய்வாகும்.
- **விருது மற்றும் பரிசு**
    - சாகித்திய அகாடமி விருது – “வணக்கம் வள்ளுவா” (கவிதை)
    - தமிழக அரசு பரிசு – “தமிழன்பன் கவிதைகள்”
- அரசு தொலைக்காட்சியில் தமிழ்ச் செய்தி வாசிப்பாளராக இருந்தவர்.
- “அரிமா நோக்கு” என்ற ஆய்வு இதழின் ஆசிரியர்
- ஆயிரம் அரங்கம் கண்ட கவியரங்கக் கவிஞர்

## படைப்புகள்

- சூரியப் பறவைகள்
- தோணி வருகிறது
- தீவுகள் கரையேறுகின்றன

- விடியல் விழுதுகள்
- நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம்
- காலத்திற்கு ஒரு நாள் முந்து
- சிலிர்ப்புகள்
- பொதுவுடைமைப் பூபாளம்

## அப்துல் ரகுமான்

- பிறப்பு : 1937 மதுரையில் பிறந்தவர்
- பணி : தமிழ்த்துறைப் பேராசிரியர்
- (வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி)
- முனைவர் பட்ட ஆய்வு : புதுக்கவிதையில் குறியீடு
- "மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்
  புதுக் கவிதையில் மலர் பார்த்தவர்"

## கவிதை நூல்கள்

- பால் வீதி
- ஆலாபனை
- நேயர் விருப்பம்
- வசன கவிதை
- சுட்டுவிரல்
- முட்டைவாசிகள்
- மரணம் முற்றுப்புள்ளி அல்ல
- அவளுக்கு நிலா என்று பெயர்
- ஆல்போல் விழுந்தவன்
- உன் கண்ணால் தூங்கிக் கொள்கின்றேன்
- பாலை நிலா
- காக்கைச் சோறு
- ஆய்வு நூல்
- புதுக்கவிதையில் குறியீடு
- 1999 – சாகித்திய அகாடமி விருது – "ஆலாபனை" என்ற கவிதை நூலுக்கு கிடைத்தது
- 'கவிக்கோ' என்று அழைக்கப்பட்டார்

- ‘கவிக்கோ’ இதழை இவர் நடத்தினார்.

## விருதுகள்

- தமிழன்னை விருது
- அட்சரா விருது
- பாரதிதாசன் விருது
- கலைமாமணி விருது
- முரசொலி அறக்கட்டளை விருது

## கலாப்பிரியா

- பிறப்பு : 1950 – (திருநெல்வேலி)
- இயற்பெயர் : டி.கே. சோமசுந்தரம்
- பெற்றோர் : கந்தசாமி – சண்முகவடிவு
- பணி : வங்கி அதிகாரி
- கசடதபற, கணையாழி, தீபம், வானம்பாடி, தெறிகள், சுவடு, ‘ழ’ ஆகிய இதழ்களில் கவிதை எழுதியவர்.
- “பொருநை” என்ற இதழின் ஆசிரியர், முழு உறுப்பினர்
- “ஆண்பிள்ளைக் கவிதைகள் அல்லது பெண்கவிதைகள்” என்று கலாப்பிரியாவின் கவிதைகள் தி.ஜானகிராமனால் பாரட்டப்பெற்றது.

## கவிதை நூல்கள்

- வெள்ளம்
- தீர்த்த யாத்தரை
- உலகெல்லாம் சூரியன்
- மற்றாங்கே
- எட்டயபுரம்
- சுயம்வரம்
- அனிச்சம்
- வனம் புகுதல்
- எல்லாம் கலந்த காற்று
- நான், நீ, மீன்

- ஞானபீடம்

## கட்டுரை நூல்கள்

- நினைவின் தாழ்வாரங்கள்
- ஓடும் நதி
- உருள்பெருந்தேர்

## விருதுகள்

- கலைமாமணி
- கவிஞர் சிற்பி இலக்கிய விருது
- விகடன் விருது

# கல்யாண்ஜி

- இயற்பெயர் : எஸ். கல்யாண சுந்தரம்
- பிறப்பு : 1946
- ஊர் : திருநெல்வேலி
- புனைப்பெயர் : கல்யாண்ஜி, வண்ணதாசன்
- பணி : வங்கி அதிகாரி
- இவரின் தந்தையார் புகழ்பெற்ற இலக்கிய விமர்சகர் – தி.க. சிவசங்கரன்
- இவர் 'தீபம்' என்ற இதழில் எழுதத் துவங்கியவர்
- தமிழக அரசின் "கலைமாமணி" விருது பெற்றவர்.

## புதினங்கள்

- சின்னு முதல் சின்னு வரை
- கவிதை நூல்கள்
- புலரி
- இன்று ஒன்று நன்று
- கல்யாண்ஜி

## கவிதைகள்

- மணலுள்ள ஆறு
- மூன்றாவது
- அந்நியமற்ற நதி
- முன்பின்
- ஆதி
- நடுகை
- கட்டுரை
- அகமும் புறமும்

## சிறுகதை நூல்கள்

- கலைக்க முடியாத ஒப்பனைகள்
- உயரப் பறத்தல்
- தோட்டத்து வெளியிலும் சில பூக்கள்
- சமவெளி
- பெயர் தெரியாமல் ஒரு பறவை
- கனிவு
- நடுகை
- ஒளியிலே தெரிவது
- சில இறகுகள் சில பறவைகள்
- கடிதம்
- வண்ணதாசன் கடிதங்கள்

## ஞானக்கூத்தன்

- பிறப்பு : 1938 – திரு.இந்தளூர் (தஞ்சை மாவட்டம்
- மயிலாடுதுறை அருகில் உள்ளது)
- இயற்பெயர் : ரங்கநாதன்
- புனைப்பெயர் : ஞானக்கூத்தன் (1960)
- முதல் கவிதை : 'பிரச்சனை' (1968)

- திருமூலரின் திருமந்திரத்தைப் படித்த பின் தனது பெயரை ஞானக்கூத்தன் என மாற்றிக் கொண்டார்.
- இவரைக் ‘கவிஞர்களின் கவிஞர்’ என்பர், ‘அன்று வேறு கிழமை’ என்பது இவரது புகழ்பெற்ற கவிதைத் தொகுப்பாகும்.
- 2010 ல் சாரல் விருது பெற்றுள்ளார்.
- 1998 – ல் “ஞானக்கூத்தன் கவிதைகள்” வெளியிடப்பட்டது

## கவிதை நூல்கள்

- அன்று வேறு கிழமை
- சூரியனுக்குப் பின்பக்கம்
- கடற்கரையில் சில மரங்கள்
- மீண்டும் அவர்கள்

## இதர நூல்கள்

- இரட்டை நிழல்
- திருப்தி
- சொன்னதைக் கேட்ட ஜன்னல் கதவு
- அலைகள் இழுத்த பூ மாலை
- அங்கத கவிதைகள்
- தோழர் மோசிகீரனார்
- அதனால் என்ன?

### தேவதேவன்

- இயற்பெயர் : பிச்சுமணி கைவல்யம்
- புனைப்பெயர் : தேவதேவன்
- பிறப்பு : 1948 – இராஜாகோயில் (விருதுநகர் மாவட்டம்)
- பணி : இடைநிலை ஆசிரியர் (தூத்துக்குடி நகராட்சி பள்ளி)
- ஈ.வே.ராமசாமி இவருக்கு கைவல்யம் என்ற பெயரை இட்டார்.
- இவரின் முதல் கவிதை தொகுப்பு ‘குளித்துக் கரையேறாத கோபியர்கள்’ (1982)

- இரண்டாவது கவிதை தொகுப்பு 'மின்னார்பொழுதே தூரம்' பிரமிள் முன்னுரையுடன் வெளிவந்தது.
- 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறைப் பரிசானது 'தேவதேவன் கவிதைகள்' என்ற கவிதை நூலுக்கு வழங்கப்பட்டது.
- 1970 – 80 களில் தூத்துக்குடியில் கலைப் படங்களுக்கான திரைப்பட சங்கம் ஒன்றையும் நடத்தி வந்தார்.

## கவிதை நூல்கள்

- விடிந்தும் விடியாத பொழுது
- நுழைவாயிலிலேயே நின்று விட்ட கோலம்
- புல்வெளியில் ஒரு கல்
- சின்னஞ் சிறிய சோகம்
- விண்ணளவு பூமி
- குளித்துக் கரையேறாத கோபியர்கள்
- நட்சத்திர மீன்
- மின்னார்பொழுதே தூரம்
- பூமியை உதறி எழுந்த மேகங்கள்
- மாற்றப்படாத வீடு

## சாலை இளந்திரையன்

- காலம் : 1930 – 1998
- ஊர் : சாலைநயினார் பள்ளிவாசல் (திருநெல்வேலி மாவட்டம்)
- இயற்பெயர் : வ. இரா. மகாலிங்கம்
- பெற்றோர் : இராமையா - அன்னலட்சுமி
- பணி :தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகி பின் தமிழ்த்துறைத் தலைவராக உயர்ந்தார்.
- முனைவர் பட்டம் : "தமிழ்ப் பழமொழிகளும் சமுதாயமும்" என்ற தலைப்பில் ஆய்வு
- விருது : 1991 – இல் தமிழக அரசின் பாவேந்தர் விருது மற்றப்பெயர்.

## நூல்கள்

- பூத்தது மானுடம்
- காக்கை விடு தூது
- புரட்சி முழக்கம்
- அன்னை நீ ஆட வேண்டும்
- சிலம்பின் சிறுகதை
- கொட்டியும் ஆம்பலும் நெயதலும் போலவே.
- நஞ்சருக்க பஞ்சணையோ?
- உரைவீச்சு

புரட்சி முழக்கம் உரைவீச்சு – நூல்களுக்கு தமிழக அரசு சிறந்த நூலுக்கான பரிசு வழங்கியது.

## மேற்கோள்

"இன்றிளைப்பாறுவம் என்றிருந்தால்வழி
என்னென்னவாகுமோ ஓரிரவில்
சென்றிளைப்பாறுக முற்றிடத்தே தம்பி
தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே"
பூத்தது மானுடம் – "நிற்க நேரமில்லை"

## சாலினி இளந்திரையன்

- காலம் : 1933 – 2000
- ஊர் : விருதுநகர்
- இயற்பெயர் : கனகசௌவுந்தரி
- பெற்றோர் : சங்கரலிங்கம், சிவகாமியம்மாள்
- கணவர் : சாலை இளந்திரையன்
- பணி : புதுடில்லி திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முதல்வராக உயர்ந்து ஓய்வு பெற்றவர்.
- முதுவர் பட்டம் : "சிலப்பதிகாரச் சொல்வளம்" என்ற தலைப்பில் ஆய்வு
- முனைவர் பட்டம் : "தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் ஆய்வு

- முதல் கட்டுரை : வாடா மலர்

## இதழ்

- ஆனந்த போதினி – இதழில் கட்டுரை எழுதினார்
- மனித வீறு – நடத்திய இதழ் (1987)

## படைப்புகள்

- பண்பாட்டின் சிகரங்கள் (நாடக இலக்கியத் திறனாய்வு)
- வாழ்க்கை வரலாற்று இலக்கியம்
- களத்தில் கடிதங்கள்
- சங்கத்தமிழரின் மனித நேய நெறிமுறைகள்.
- ஆசிரியப் பணியில் நான்
- குடும்பத்தில் நான்

## நாடக நூல்கள்

- படுகுழி
- எந்திரக் கலப்பை
- புதிய தடங்கள்
- சாலை இளந்திரையனுடன் சேர்ந்து எழுதிய நூல்கள்
- இரண்டு குரல்கள்
- தமிழ்க் கனிகள்
- தமிழனே தலைமகன்
- தமிழ் தந்த பெண்கள்

## ஆலந்தூர் மோகனரங்கன்

- பிறப்பு : 1942 ஆலந்தூர் (சென்னை அடுத்து உள்ளது)
- பெற்றோர் : ம.கோபால் மற்றும் கோ. மீனாம்பாள்
- பட்டம் : கவிவேந்தர்
- தமிழக அரசு பரிசு : ‘இமயம் எங்கள் காலடியில் என்ற நூல்.

## படைப்புகள்

- காப்பிய நூல் – கனவுப்பூக்கள்

## கவிதை நூல்

- இமயம் எங்கள் காலடியில்
- மோகனரங்கன் கவிதைகள்
- சித்திரப் பந்தல்
- காலக்கிளி

## கவிதை நாடகங்கள்

- வைரமூக்குத்தி
- புதுமனிதன்
- யாருக்குப்பொங்கல்
- கயமையைக் கறைவோம்
- மனிதனே புனிதனாவாய்
- வாழ்க்கை வரலாற்று நூல்
- வணக்கத்துக்குரிய வரதராசனார்
- சிறுவர் கவிதை நூல்கள்
- பள்ளிப் பறவைகள்

*******

## தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - பெரியார்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# பெரியார்

- இயற்பெயர் - ஈ.வெ.ராமசாமி
- காலம் - 1879
- ஊர் - ஈரோடு
- பெற்றோர் - வெங்கட்ட நாயக்கர் - முத்தம்மாள் (எ) சின்னத்தாயம்மாள்
- மனைவி - நாகம்மாள்
- அடிக்கடி கூட்டங்களை நடத்தினார், சாதி உயர்வு தாழ்வுகளையும், மத வேறுபாட்டையும் அகற்ற வேண்டும் என்றார்.
- அதற்காக ஒரு சங்கமும் அமைத்தார்; அதற்குப் 'பகுத்தறிவாளர் சங்கம்' என்பது பெயர்.
- பிறரை மதித்தல் வேண்டும் - அது மரியாதை. தன்னைத்தானே மதிப்பதும், தன் மரியாதையைத் தக்கவைத்துக் கொள்ளுவதும் - சுயமரியாதை.
- பெரியார் மரியாதையையும், சுயமரியாதையையும் தம்மிரு கண்களாகக் கருதினார்.
- கேரளாவில் வைக்கம் என்னும் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்கள், கோவில் சுற்றுத்தெருவில் நடப்பதற்குத் தடை இருந்தது. அதனை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றதனால், 'வைக்கம் வீரர்' என்று அழைக்கப்பட்டார்.
- "மனிதர்களை மனிதர்களாக மதிக்கவேண்டும் என்பதனை ஏற்கிறீர்கள். அதுபோல, மனிதர்களில் சரிபாதியாக உள்ள பெண்களையும் மதித்தல் வேண்டும். ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் பெண்களும் செய்தல் வேண்டும்; அவர்களால் செய்யவும் இயலும். பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கியம் இல்லை. அறிவும், சுயமரியாதையும் தான் மிக முக்கியம்." என்றார்.

❖ இதனால் தாய்மார்கள் இராமசாமிக்குப் 'பெரியார்' எனப் பட்டம் வழங்கினார்கள்.

## சிறப்புக் குறிப்புகள்

❖ 24.12.1973 -இல் மறைந்த பெரியார் தம் வாழ்நாளில் 8600 நாள், 13,12,000 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து, 10,700 கூட்டங்களில் 21,400 மணிநேரம் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.

❖ 1970-ஆம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அவையின் 'யுனெஸ்கோ விருது' பெரியாருக்கு வழங்கப்பட்டது.

❖ நடுவண் அரசு 1978-ஆம் ஆண்டு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

## முத்துராமலிங்கத்தேவர்

❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் பிறந்தவர் முத்துராமலிங்கர்.

❖ தந்தையார் உக்கிர பாண்டியனார் - தாயார் இந்திராணி அம்மையார்.

❖ முத்துராமலிங்கருக்கு இசுலாமியப் பெண்மணி ஒருவர் தாயாகிப் பாலூட்டி வளர்த்தார்.

❖ இவருக்குக் கற்பித்த ஆசிரியர் "குறைவற வாசித்தான் பிள்ளை" என்பவர் ஆவார்.

❖ வங்கச் சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைத் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொண்டார்.

- ‘தேசியம் காத்த செம்மல்’ எனத் திரு. வி. கலியாண சுந்தரனார் இவரைப் பாராட்டியுள்ளார்.

- தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இரு கண்களாகப் போற்றியவர் பசும்பொன்னார்.

- இவர், `வீரம் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்’ என எடுத்துரைத்தவர்.

- ‘சுதந்தரப் பயிரைத் தண்ணீர் விட்டோ வளர்த்தோம்; கண்ணீரால் காத்தோம்’ என்பது பாரதி வாக்கு.

- வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்த சமய மேதை எனப் பலவாறாகப் பாராட்டப் பெற்றவர்.

- சமயம், சமுதாயம் பற்றிய இவருடைய சிந்தனைகள் மனிதகுலத்திற்கு வழிகாட்டுவனவாகும்.

- இறப்பு என்பது எவ்வகையிலும் வரலாம். இதனையே இவர், “பனைமரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு” எனக் கூறியுள்ளார்.

- மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிடுகிறார்.

- ஐம்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இப்பெருமகனார், 1963-ஆம் ஆண்டு அக்டோபர் முப்பதாம் நாளில் இயற்கை எய்தினார்.

# சிறப்புத் தகவல்கள்

- முத்துராமலிங்கரின் விருப்பத்திற்கு இணங்க 06.09.1939- இல் மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வருகை தந்தார்.
- நடுவண் அரசு 1995- இல் முத்துராமலிங்கருடைய அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## பெருந்தலைவர் காமராசர்

- காலம் - 15.-07.1903 - 02.10.1975
- பெற்றோர் - குமாரசாமி, சிவகாமி
- சிறப்பு பெயர்கள் - தன்னலமற்ற தலைவர், கர்மவீரர், கல்விக்கண் திறந்தவர், ஏழைப்பங்காளர்
- காமராசர் தமிழ் எழுத்துக்களை திண்ணைப் பள்ளியில் கற்றார்
- காமராசர் தமிழ்ப் பாடத்தை ஓர் ஆண்டு கற்றார்
- காமராசருக்கு 12ம் வயதில் பள்ளிக்குச் செல்ல இயலாநிலை ஏற்பட்டது
- காமராசர் பள்ளி செல்லாத போதும் நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும், அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும் தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்
- காமராசர் மெய்கண்டான் புத்தகச்சாலை நூல்நிலையத்திற்குச் சென்று இலெனின், கரிபால்டி, நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் திறமையாகப் பேசவும், வாதம் செய்யவும் தொடங்கினார்
- அரசியல் வாழ்க்கை
  - இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார்.
  - சைமன்குழு எதிர்ப்பு, உப்புச்சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போராட்டங்களில் பங்கு கொண்டார்

- காமராசர் சிறையில் 11 ஆண்டுகள் இருந்தார்
- காமராசரின் அரசியல் குரு - சத்தியமூர்த்தி
- சத்தியமூர்த்தி காமராசரின் தன்னலமற்ற உழைப்பைக் கண்டு காங்கிரஸ் கட்சியின் செயலாளராக நியமித்தார்
- காமராசர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு - 1937
- காமராசர் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு -1939
- காமராசர் 12 ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராகப் பதவி வகித்தார்

- 1945ல் பிரகாசம், 1947-இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949-இல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதவி ஏற்பதற்குக் காமராசர் காரணமாக இருந்தவர்
- நேருவின் மறைவுக்குப்பின் லால்பகதூர் சாஸ்திரியையும், லால்பகதூர் சாஸ்திரி மறைவுக்குப்பின் இந்திராகாந்தியையும் முதன்மைஅமைச்சராகஆக்கினார்.
- இதனால் தலைவர்களை உருவாக்குபவர் (கிங் மேக்கர்) என அழைக்கப்பட்டார்
- 1954 - 1963 வரை காமராசர் முதலமைச்சராக இருந்தார்

## ஆட்சி சிறப்புகள்

- காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன
- காமராசர் ஆட்சிக்காலத்தில் கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை போன்ற ஊர்களில் பெரிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன
- வேளாண்மைக்கென பாசன வசதிகளும், அணைகளும் அமைக்கப்பட்டன
- தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்னும் நிலை உருவானது

- நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைச் சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை முதலியவை தொடங்கப்பெற்றன.

<u>கல்வி சாதனைகள்</u>

- காமராசர் ஆட்சிக்காலத்தில் கட்டாயக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது
- காமராசரின் நோக்கம் - தெரு தோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி.
- பள்ளி வேலைநாட்களை 180-லிருந்து 200 ஆக உயர்த்தினார்
- தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் காமராசர் தொடங்கினார்
- பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படைப் பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன
- காமராசர் ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று மாநாடுகள் கூட்டினார்
- தொழில்நுட்பக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகளும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் காமராசர் ஆட்சியில் திறக்கப்பட்டன
- காமராசர் காலத்தில் மருத்துவக்கல்லூரி முதலான தொழில் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லா கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது

❖ சமுதாய அமைப்பின் அடித்தளத்தில் உள்ளவர்களை கைதூக்கிவிட முற்போக்கு நடவடிக்கைகள் பல எடுத்தவர் காமராசர்

- தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு 60 விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தவர் காமராசர்

- நிலச்சீர்திருத்தம் காமராசரால் கொண்டு வரப்பட்டது

- நில உச்ச வரம்பு 30 ஏக்கர் என குறைக்கப்பட்டு நில முதலாளிகளிடமிருந்து உபரி நிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டது
- காமராசர் ஆட்சிக்காலத்தில் மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- காமராசரின் மக்கள் நலத்திட்டங்கள் - ஓய்வூதியம், நகர்ப்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவ வசதி காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதிவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என காமராசர் வலியுறுத்திய திட்டத்திற்கு காமராசர் திட்டம் என்று பெயர்
- காமராசர் திட்டத்தின்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகியவர்கள் - காமராசர், மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி.
- காமராசர் அகில இந்திய காங்கிரசு தலைவராக புவனேசுவர் நகரில் 1963-ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில் பதவியேற்றார்.
- இந்தியப்பிரதமர் நேரு 1964-ஆம் ஆண்டில் காலமானார்.
- இந்திராகாந்தி பிரதமர் ஆவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கியவர் காமராசர்.

## சிறப்புகள்

- காமராசருக்கு நடுவணரசு வழங்கிய விருது - பாரதரத்னா (இந்திய மாமணி) விருது

- நடுவணரசு காமராசரின் ஆளுயர வெண்கலச் சிலையை நாடாளுமன்றத்தில் நிறுவியது
- காமராசரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு மதுரை பல்கலைக்கழகத்தின் பெயரை மதுரை காமராசா் பல்கலைக்கழகம் என்று மாற்றியது
- காமராசரின் மணிமண்டபத்தை தமிழக அரசு கன்னியாகுமரியில் அமைத்துள்ளது.
- காமராசா் பிறந்தநாளான ஜூலை-15 -ஐ கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

## அண்ணா

### இளமைக் காலம்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செப்டம்பர் மாதம் 15, 1909- ஆம் ஆண்டு நடுத்தரவர்க்க நெசவாளர் குடும்பத்தினரான திரு. நடராசன் மற்றும் பங்காரு அம்மாளுக்கு மகனாகப் பிறந்தார்.

### பத்திரிக்கை பணி

1937 முதல் 1940 வரை தந்தை பெரியார் அவர்களின் இதழ்களான குடியரசு,விடுதலை, பகுத்தறிவு போன்ற பத்திரிக்கைகளில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

### அரசியலில் நுழைவு:

அண்ணாதுரை அரசியலில் ஈடுபாடு கொண்டு நீதிக்கட்சியில் 1935- இல் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பிறகு நீதிக்கட்சி பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பொறுப்

பேற்றிருந்தார். பின்பு விடுதலை மற்றும் அதன் துணை பத்திரிகையான குடியரசு பத்திரிகைக்கு ஆசிரியரானார்.பிறகு தனியாக திராவிட நாடு என்ற தனி நாளிதழைத் தொடங்கினார்( தனி திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தி துவங்கப்பட்டது). 1944 இல் பெரியார் நீதிக்கட்சியை திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.

## மறைவு

அண்ணாதுரை முதலமைச்சரான இரண்டு வருடத்திற்குள் புற்று நோய் தாக்குதலுக்குள்ளாகி, மருத்துவ பராமரிப்பிலிருக்கும் பொழுது 3 பிப்ரவரி, 1969- இல் மரணமடைந்தார்.

- **அண்ணாவின் பொன்மொழிகள்**
  - "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு"
  - "ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

## அம்பேத்கர்

- ✓ இயற்பெயர் : பீமாராவ் ராம்ஜி
- ✓ பிறந்த இடம் : மராட்டிய மாநிலம் கொங்கண் மாவட்டம்
- ✓ ( அம்பவாடே)
- ✓ பிறந்த ஆண்டு : 1891 ஏப்ரல் 14
- ✓ தந்தை : ராம்ஜி சக்பால்
- ✓ தாய் : பீமா பாய்

## இளமைக் காலம்

- ✓ 14வது பிள்ளையாகப் பிறந்தார்.
- ✓ 1908-இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளி படிப்பை முடித்தார்.
- ✓ 1912- இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- ✓ 1915- இல் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றார்.
- ✓ 1916- இல் லண்டனில் பொருளாதாரத்தில் ஆய்வுப் பட்டம் பெற்றார்.
- ✓ மும்பையில் பொருளாதார பேராசிரியராக சில காலம் பணியாற்றினார்
- ✓ பின், லண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார் .

## பணி

- ✓ இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.
- ✓ 1924-ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கம் என்னும் இடத்தில் பெரியார் ஒடுக்கப் பட்டோர் ஆலய நுழைவு முயற்சியை மேற்கொண்டார்.
- ✓ 1927-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்தினார்.
- ✓ விடுதலைக்குப் பின் அம்பேத்கர் சட்ட அமைச்சராக பொறுப்பேற்றார்.

- ஒவ்வொருவரும் முழு மனித நிலையை அடைய கல்வி , செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. "செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம் .உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்" என்று கூறினார்.
- "கற்பித்தல் அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்; விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல் வேண்டும் ; மாணவனுக்குள் தகவல்களை த் திணிப்பதாகக் கல்வி இருத்தல் கூடாது அது அவனது ஊக்கத்தை த் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக்கொணர்வதாக இருத்தல் வேண்டும் " என்று கற்றல் , கற்பித்தலின் குறிக்கோள்கள் பற்றி அண்ணல் அம்பேத்கர் கூறியுள்ளார்.
- 1946- ஆம் ஆண்டு மக்கள் கல்வி கழகத்தைத் தோற்றுவித்தார்.
- சித்தார்த்தா உயர் கல்வி நிலையத்தை மும்பையில் உருவாக்கினார்.
- "இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்" என்ற பொருளா தார நூலை எழுதினார்.
- "சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியது அன்று. சில குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூக வாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும் . சாதி களையப்பட வேண்டிய களை" என்று அம்பேத்கர் கூறினார்.
- "ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம் , சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" எனக் கூறினார்.
- "இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்கு சாதி என்பது நன்மை தராது இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது . அது மக்களிடையே ஒருமைப்பாட்டை

சீர்குலைத்துவிட்டது. இதை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் போதும். அதுவே எனக்கு நிறைவு தரும்" என்று அம்பேத்கர் கூறினார்.

- ✓ "ஜனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம் . சுதந்திரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை , உயிரையும் உடமையையும் பாதுகாக்கும் உரிமை அது . எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமமாகும்" என்று சனநாயகத்திற்கு விளக்கம் தந்தவர் அம்பேத்கர்.
- ✓ அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர் பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம் , மக்களின் மாபெரும் வழிகாட்டி .இப்பெரும் தலைவரைப் போல வேறு யாரையும் நாம் காண முடியாது என்று அம்பேத்கரை புகழ்ந்தவர் பெரியார்.
- ✓ "பகுத்தறிவு துறையில் அவருக்கு இணை அவரே . ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்" என்று அம்பேத்கரைப் புகழ்ந்தவர் நேரு.
- ✓ அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர் . மிகவும் ஆர்வத்துடனும் வேகத்துடனும் தன்னந்தனியாக செயல்பட்டவர் .தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் எனப் பாராட்டியவர் இராஜேந்திரப் பிரசாத்.
- ✓ 1990-ஆம் ஆண்டு பாரத ரத்னா விருதை அம்பேத்கர் பெற்றார்.
- ✓ இறப்பு : டிசம்பர் 6, 1956.

***********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - மரபுக் கவிதை

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# மரபுக் கவிதை

## முடியரசன்

- இயற்பெயர் - துரைராசு
- ஊர் - தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம்
- பெற்றோர் - சுப்பராயலு, சீதாலட்சுமி
- காலம் - 7.10.1920 - 3.121998
- ஆசிரியர் பணி - காரைக்குடியில் உள்ள மீனாட்சி சுந்தரனார் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்
- நூல்கள் - பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள் முதலியன.
- சிறப்பு பெயர் - கவியரசு

## சிறப்புகள்

- பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஆகியோரிடம் நெருங்கி பழகியவர்.
- முடியரசனின் பூங்கொடி என்ற நூல் 1966-இல் தமிழக அரசின் பரிசு பெற்றது.
- பறம்பு மலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது.

## தொடர்புடைய கேள்விகள்

1. யார் கவிஞன் என்ற பாடலின் ஆசிரியர் யார்?

   முடியரசன்

2. காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன் என்று பாடியவர் யார்?

   முடியரசன்

3. கைம்மாறு என்பதின் பொருள் என்ன?

   பயன்

4. மாசற்ற என்பதின் பொருள் என்ன?

   குற்றமற்ற

5. தேட்டை என்பதின் பொருள் என்ன?

   திரட்டிய செல்வம்

6. மீட்சி என்பதின் பொருள் என்ன?

   மேன்மை

7. மாள என்பதின் பொருள் என்ன?

   நீங்க

## சுரதா

- இயற்பெயர் - இராசகோபாலன்
- காலம் - 23.11.1921 - 19.06.2006
- ஊர் - தஞ்சை மாவட்டம் பழையனூர் (சிக்கல்)
- பெற்றோர் - திருவேங்கடம்-செண்பகம் அம்மையார்
- சிறப்பு பெயர்கள்

- கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக்கொண்டார். சுப்புரத்தினதாசன் என்பதன் சுருக்கமே சுரதா ஆகும்.

## இவர் இயற்றிய நூல்கள்

- தேன்மழை
- துறைமுகம்
- சிரிப்பின் நிழல்
- அமுதும் தேனும்
- சுவரும் சுண்ணாம்பும்

- **சிறப்புகள்**
  - தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர்.
  - செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை ”உவமைக் கவிஞர்” என்று சிறப்பித்துக் கூறுவர்.
  - தமிழக இயலிசை நாடகமன்றத்தின் ”கலைமாமணி” பட்டம் பெற்றவர்.

## தொடர்புடைய கேள்விகள்

- “இன்பம்” என்னும் தலைப்பில் வரும் பாடலின் ஆசிரியர் யார்?

  சுரதா

- இசைபட - பொருள் தருக?

  புகழுடன்

- கயவர் - பொருள் தருக?

  கீழ்க்குணமுடையோர்

- தளிர்க்கை - இலக்கணக்குறிப்புத் தருக?

  உவமைத்தொகை

- பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - இலக்கணக்குறிப்பு தருக?

  பண்புத்தொகைகள்

- வழங்கி - இலக்கணக்குறிப்பு தருக?

  வினையெச்சம்

- கற்றல், பெறுதல், வாழ்தல் - இலக்கணக்குறிப்பு தருக?

  தொழிற்பெயர்கள்

- தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்ற சுரதாவின் கவிதை நூல் எது?

  தேன்மழை

- தமிழக அரசின் பாவேந்தர் விருதினைப் பெற்றவர் யார்?

  சுரதா

- தேன்மழை நூலில் மொத்தம் எத்தனை பகுதிகள் உள்ளன?

  16 பகுதிகள்

- தேன்மழை நூலின் முதல்பகுதியின் பெயர் என்ன?

  இயற்கையெழில்

- தேன்மழை நூலின் இறுதிப்பகுதியின் பெயர் என்ன?

  ஆராய்ச்சி.

- “இன்பம்” என்னும் கவிதைத் தலைப்பு தேன்மழை நூலில் எந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளது?

- பாரதிதாசனிடம் பயின்ற மாணவர்களுள் தலை மாணாக்கர் யார்?

  சுரதா

## சுரதாவின் தேன்துளிகள்

- குழந்தையின் தளிர்க்கை பட்ட கூழினை உண்பது இன்பம்.
- கற்றவர் முன் தாம் கற்ற கல்வியைக்கூறல் இன்பம்.
- வெற்றியை வாழ்வில் சேர்க்கும் வினைபலபுரிதல் இன்பம்
- யாரோடு சேராது வாழ்தல் இன்பம்?

  சிற்றினக் கயவரோடு சேராது வாழ்தல் இன்பமாகும்.

## கண்ணதாசன்

- இயற்பெயர் : முத்தையா
- காலம் : 24.06.1927
- ஊர் : சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிறுகூடல்பட்டி
- பெற்றோர் : சாத்தப்பன், விசாலாட்சி

## சிறப்பு பெயர்கள்

- காரை முத்துப் புலவர்,
- வணங்காமுடி,
- கமகப்பிரியா,
- பார்வதிநாதன்,
- ஆரோக்கியசாமி

## பணி

- இதழ்கள்

தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ்மலர்

### நூல்கள்

➢ கண்ணதாசன் படைத்த புதினங்கள் - ஆயிரம் தீவு , அங்கயற்கண்ணி, வேலங்குடித் திருவிழா.

➢ காவியம் காவியம் கண்ணதாசன் படைத்த நெடுங்கவிதை நூல்கள்

ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசு காவியம்.

➢ சாகித்ய அகாடமி பரிசு பெற்ற கண்ணதாசனின் புதின நூல் எது?

சேரமான் காதலி - வரலாற்று புதினம்

- **பாடல்கள்**

➢ ”வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்,

வாசல்தோறும் வேதனை இருக்கும்"

- "பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே"
- "முத்தான முத்தல்லவோ"
- "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் - இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"
- "காளை மணியோசை, களத்துமணி நெல்லோசை"
- "உண்மையை சொல்லி நன்மையை செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும்"
- "நான் நிரந்தரமானவன் அழிவதில்லை , எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை"

**சிறப்புகள்**

- "இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிஞர்கள் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையை பதித்தவர்
- எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றியவர்
- "செந்தமிழ் சொல்லெடுத்து இசை தொடுப்பேன் - வண்ணச்சந்தத்திலே கவிதைச் சரம் தொடுப்பேன்" என தமிழுணர்வு தோன்றப் பாடியவர்.
- வாழ்க்கையையும், வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளையும் கவிதைக்குரிய பொருள்களாக கொண்டவர்

- "இன்பமும் துன்பமும் நிறைந்தவைதாம் வாழ்க்கை , இரண்டனையும் ஏற்கும் மனவுறுதி பெறுவதே அமைதியான வாழ்வுக்கு வழி என்று பாடியவர்
- ”சுரண்டல், வறுமை ஆகியன நீங்கவும் , சமத்துவம் ஓங்கவும் பொதுமை உணர்வே ஏற்றது ” என்பதனை வலியுறுத்திப் பாடியவர்
- கவிதையிலும், உரைநடையிலும், சொற்பொழிவிலும், திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழியினை வகுத்துக் கொண்டு தலைநிமிர்ந்து நின்றவர்.

## தொடர்புடைய கேள்விகள்

- உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்குவது எது?

  ஞாயிறு
- கவிதை நடை என்பது எதில் அமைந்துள்ளது?

  கவிதையின் பொருளிலும் , அதனை வெளிப்படுத்தும் மொழியிலும் அமைந்துள்ளது.
- கவிதைக்கு மூலப்பொருள் எது?

  சொற்கள்
- இனிய தமிழ்ச் சொற்களாகிய மணிகள் யாரால் கையாளப்படும்போது அவை பட்டை தீட்டப்பெற்று ஒளிவீசுகின்றன?

  கவிஞர்களால்.

- இராசதண்டனை என்றால் என்ன?

  இராசதண்டனை என்பது கம்பர் - அம்பிகாவதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கண்ணதாசன் இயற்றிய நூல்.

- கவிதைகளால் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறவர் யார்?

  கண்ணதாசன்

- ஆண்டுதோறும் இந்திய மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களை தெரிவு செய்து விருது வழங்கி வ ரும் நடுவணரசு நிறுவனம் எது?

  சாகித்ய அகாதமி

## உடுமலை நாரயண கவி

- உடுமலை நாராயணகவி (செப்டம்பர் 25, 1899 - மே 23, 1981) என்கிற நாராயணசாமி முன்னாள் தமிழ்த் திரைப் பாடலாசிரியரும், நாடக எழுத்தாளரும் ஆவார்.
- விடுதலைப் போராட்டத்தின் போது தேசிய உணர்வு மிக்க பாடல்களை எழுதி மேடை தோறும் முழங்கியவர்; ஆரம்ப காலத்தில் நாடகங்களுக்கு பாடல் எழுதினார். இவருடைய

பாடல்கள் நாட்டுப்புற இயலின் எளிமையையும், தமிழ் இலக்கியச் செழுமையையும் கொண்டிருந்தன.

- பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர்.
- “பகுத்தறிவுக் கவிராயர்” எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்.
- 1933-ல் திரைப்படங்களுக்கு பாடல் எழுத ஆரம்பித்தவர். நாராயணகவி என்று பெயர் சூட்டிக்கொண்டு கவிஞர் இனமென்று தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர்.
- கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்கு `கிந்தனார்’ கதாகாலட்சேபம் எழுதியதால் கலைவாணரின் குருவாக விளங்கியவர்.
- அறிஞர் அண்ணா எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி போன்ற நாடங்களுக்கும், கலைஞர்.மு. கருணாநிதி கதை வசனம் எழுதிய பராசக்தி, மனோகரா திரைப்படங்களுக்கும், பிரபாவதி, காவேரி, சொர்க்க வாசல், தூக்குத்தூக்கி, தெய்வப்பிறவி, மாங்கல்ய பாக்கியம், சித்தி, எங்கள் வீட்டு மகாலட்சுமி, ரத்தக் கண்ணீர், ஆதிபராசக்தி, தேவதாஸ் போன்ற படங்களுக்கும் பாடல்கள் எழுதியவர்.

# வாணிதாசன்

- காலம் : 1915 – 1974
- ஊர் : வில்லியனூர் (புதுவை)
- இயற்பெயர் : அரங்கசாமி என்ற எத்திராசலு
- சிறப்பு பெயர்கள்: "கவிஞரேறு" "பாவலர் மணி" "புதுமைக்கவிஞர்" என அழைக்கப்படுகிறார்.
- 'தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த்' எனப் புகழப்படுகிறார்.
- புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் மாணவர்
- பிரெஞ்சு குடியரசுத்தலைவர் இவருக்கு "செவாலியர்" என்ற விருதினை வழங்கினார்.
- 1979 – பாவேந்தர் விருது பெற்றார்.
- பணி : தமிழாசிரியர்

## இயற்றிய நூல்கள்

- தமிழச்சி
- கொடிமுல்லை
- தொடு வானம்
- ➢ "புலனழுக்கற்ற அந்தணாளன்","பொய்யா நாவிற் கபிலன்" என மாறோக்கத்து நப்பசலையாரும் புகழ்ந்துள்ளனர்.

யாரு மில்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீ ராரல் பார்க்கும்

குருகு முண்டுதான் மணந்த ஞான்றே

- கபிலர்

- திணை - குறிஞ்சி
- துறை - வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

## ஐங்குறுநூறு

- ஐந்து+குறுமை+நூறு = ஐங்குறுநூறு.
- எட்டுத் தொகையுள் மூன்றாவதாக வைத்துக் கூறப்படும் நூல்.
- இது அகத்திணை நூல்.
- **மூன்று அடி** முதல் **ஆறு அடி** வரை பாடப்பட்ட நூல்.
- இந்நூல் **ஐந்நூறு** பாடல்களைக் கொண்டுள்ளது.

- மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசை முறையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
- இவை முறையே

  - **ஓரம்போகியார்,**
  - **அம்மூவனார்,**
  - **கபிலர்,**
  - **ஓதலாந்தையார்,**
  - **பேயனார்**

  ஆகிய ஐந்து ஆசிரியர்கள் பாடியுள்ளனர்.

| **திணை** | **பாடலாசிரியர்** |
|---|---|
| மருதம் | ஓரம்போகி |
| நெய்தல் | அம்மூவன் |
| குறிஞ்சி | கபிலர் |
| பாலை | ஓதலாந்தை |
| முல்லை | பேயன் |

➢

➢ **மருதமோ ரம்போகி நெய்த லம்மூவன்**
**கருதுஞ் குறிஞ்சி கபிலன் - கருதிய**
**பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலையோ தைங்குறு நூறு.**

- இந்நூலைத் தொகுத்தவர் '**புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்**'.
- தொகுப்பித்தவர் **கோச்சேரமான்** '**யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை**'.
- இந்நூலில் ஒவ்வொரு திணையிலும் உள்ள 100 பாடல்கள் பத்துப்பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனித் தலைப்புக்களின் கீழ்ப்பகுக்கப்பட்டுள்ளன.

- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் **பாரதம் பாடிய பெருந்தேவனார்**.
- இக் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூல், ஐந்து திணைகளிலும் தனித்தனியே நூறு நூறு பாடல்களால் பாடப்பட்ட, ஐந்து நூறுகளின் தொகுதி என்பதால் இதற்கு ஐங்குறுநூறு எனப்பட்டது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர்.

## கலித்தொகை

- இது **கலிப்பாவால்** ஆன நூல்
- சங்க நூல்களில் ஓசை நயம் மிக்க பாட்டுகள் அமைந்த நூல்.
- இது அகப்பொருள் சார்ந்த நூல்.
- 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்ற சிறப்பைப் பெற்ற நூல்.
- இதனைத் தொகுத்தவர் **நல்லந்துவனார்**.
- தொகுப்பித்தவர் யார் எனத் தெரியவில்லை.
- கலித்தொகைப் பாடல்கள்

    - '**பாலைக்கலி**,
    - **குறிஞ்சிக்கலி**,
    - **மருதக்கலி**,
    - **முல்லைக்கலி**,
    - **நெய்தல்கலி**'

    என்ற வரிசை முறையில் ஐந்துப் பிரிவுகளைக் கொண்டு அமைகிறது.

- இதனைப் பாடியவர்கள் ஐவர் ஆவார்.

| **திணை** | **பாடியவர்** | **பாடல் எண்ணிக்கை** |
|---|---|---|
| பாலை | பெருங்கடுங்கோன் | 35 |
| குறிஞ்சி | கபிலர் | 29 |
| மருதம் | மருதன் இளநாகனார் | 35 |
| முல்லை | சோழன் நல்லுருத்திரன் | 17 |
| நெய்தல் | நல்லந்துவனார் | 33 |

- இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடலோடு சேர்த்து 150 பாடல்களைக் கொண்டுள்ளது.
- கடவுள் வாழ்த்தைப் பாடியவர் நல்லந்துவனார். இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இனிய ஓசையோடு நாடக முறையில் காதல் நிகழ்ச்சிகள் அமைந்திருப்பதும் இந்நூலின் சிறப்பியல்பாகும்.
- இதற்கு **நச்சினார்க்கினியர்** விரிவான உரை எழுதியுள்ளார்.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.
- இந்நூலை நல்லந்துவனார் என்ற புலவர் மட்டுமே பாடியிருக்கக் கூடும் எனக் கருதுபவர்கள் சி.வை. தாமோதரம் பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, கே.என். சிவராஜப் பிள்ளை.

## கலித்தொகை:

“ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை

முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்”

**ஆசிரியர் குறிப்பு:**

- நல்லந்துவனார் சங்க காலத்தவர்
- இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.
- இவர் நெய்தல் கலியில் முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.
- கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே.

**அகநானூறு**

- அகம்+நான்கு+நூறு = அகநானூறு.
- இதனை ‘அகப்பாட்டு’ எனவும் ‘அகம்’ எனவும் கூறுவர்.
- இது ஒரு அகத்தினை நூல்.
- 400 பாடல்களைக் கொண்டநூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இந்நூல்
    - **களிற்றுயானை** 120 (1 - 120) **பாடல்கள்**
    - **மணிமிடைப்பவளம்**, 180 (121 - 300) **பாடல்கள்**
    - **நித்திலக்கோவை** 100 (301 - 400) **பாடல்கள்**

    என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- இது 13 அடி சிறுமையும் 31 அடி பெருமையும் கொண்டது.
- இதற்கு நெடுந்தொகை என்ற வேறுபெயரும் உண்டு.
- இந்நூலில்
    - 1,3,5,7,9 என வரும் ஒற்றைப்படை எண்களாக வரும் பாடல்கள் அனைத்தும் பாலைத்திணைப் பாடல்கள்.
    - 2,8 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் குறிஞ்சித்திணைப் பாடல்கள்.

- 4,14,24 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் முல்லைத்திணைப் பாடல்கள்.
- 6,16,26 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் மருதத்திணைப் பாடல்கள்.
- 10,20,30 என வரும் எண்களைக் கொண்ட பாடல்கள் அனைத்தும் நெய்தல்திணைப் பாடல்கள்.

- இவ்வமைப்பில் தொகுக்கப்பட்ட சங்க இலக்கிய நூல் இது மட்டுமே.
- இந்நூல்,
  - பாலைத்திணையில் 200 பாடல்களும்,
  - குறிஞ்சித் திணையுல் 80 பாடல்களும்,
  - முல்லைத் திணையில் 40 பாடல்களும்,
  - மருதத் திணையில் 40 பாடல்களும்,
  - நெய்தல் திணையில் 40 பாடல்களும் கொண்டுள்ளது.

- இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திர சன்மனார் ஆவார்.
- தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிர பெருவழுதி.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் வே. ராசகோபால ஐயங்கார்.
- இந்நூலுக்கு உரை எழுதியவர்கள் நா.மு. வேங்கடசாமி நாட்டார், இரா. வேங்கடாசலம் பிள்ளை.

## பாலை

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த

வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன

ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை

மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த

துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்

பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை

அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்

நெறிபடு கவலை நிரம்பா நீளிடை

வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்

செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து

உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்

தோளும் தொல்கவின் தொலைய நாளும்

பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி

மருந்துபிறி தின்மையின் இருந்துவினை இலனே

- ஔவையார்

- திணை- பாலை
- துறை- செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

## புறத்திணை நூல்கள்

- எட்டுத்தொகை நூல்களுள் புற இலக்கியங்களாக விளங்குவன இரண்டு. அவை, பதிற்றுப்பத்து, புறநானூறு என்பனவாகும்.
- மக்களின் புற வாழ்க்கையோடு இயைந்த கல்வி, ஒழுக்கம், அறம், கொடை, வீரம், வெற்றி, ஆட்சிமுறை, புகழ், அறிவு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகிய புறப்பொருள் பற்றிப் பாடப்பட் பாடல்கள் ஆகையால் புறப்பாட்டு எனப்பட்டது.

## பதிற்றுப்பத்து

- பத்து x பத்து = நூறு
- பத்து+இன்+இற்று+பத்து = பதிற்றுப்பத்து
- இன், இற்று என்பன சாரியைகள்.
- சேர அரசர்கள் பத்துப் பேரை பத்து புலவர்கள் தலா பத்துப் பாடல்கள் வீதம் பாடியதால் இதற்குப் பதிற்றுப்பத்து எனப்பட்டது.
- சேர அரசர்களைப் பற்றிப் பாடும் எட்டுத்தொகை நூல் பதிற்றுப்பத்து.
- இந்நூல், தமிழ் மூவேந்தருள் சேர மன்னர்களின் செயல் நலன்கள் மட்டும் வரைந்து கூறுகிறது.
- இந்நூலில், முதல் பத்துப் பாடல்களும் கடைசிப் பத்துப் பாடல்களும் கிடைக்கப்பெறவில்லை.
- ஏனைய 80 பாடல்களே இடம்பெற்றுள்ளன.
- இதில் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் காணப்படுகிறது. இந்நூலைத் தொகுத்த ஒருவரால் இப்பதிகம் பாடப்பட்டிருக்கலாம்.
- இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதர்.
- உரை இயற்றியவர் சு. துரைசாமிப் பிள்ளை
- இப்போதுள்ள பதிற்றுப்பத்தில் எட்டு சேர மன்னர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

- பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பத்துப் பாடல்களின் ஈற்றிலும் ஒரு பதிகம் அமைந்துள்ளது.
- இப்பதிகத்தில் பாடப்பட்ட மன்னன் பெயர், அவர் செய்த போர், கொடைத்திறம், பாடிய புலவர் பெயர், அவர் பெற்ற பரிசுப்பொருள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அப்பாடலின் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்ற பாட்டியல் கூறுகளைப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார்.
- பதிற்றுப்பத்துப் பாடல்களை அனைத்தும் பாடண்திணையைச் சார்ந்தவை.
- பரிபாடலைப் போலவே பதிற்றுப்பத்தும் இசையோடுப் பாடுதற்குரியது

| வ. எண் | நூல் | ஆசிரியர் | பாடுடைத் தலைவன் |
|---|---|---|---|
| 1 | முதல் பத்து | கிடைக்கப் பெறவில்லை | |
| 2 | இரண்டாம் பத்து | குமட்டூர் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| 3 | மூன்றாம் பத்து | பாலைக் கௌதமனார் | பல்யானைக் செல்கெழுங் குட்டுவன் |
| 4 | நன்காம் பத்து | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் |
| 5 | ஐந்தாம் பத்து | பரணர் | கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் |
| 6 | ஆறாம் பத்து | காக்கைபாடினியார்(எ) நச்செள்ளையார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| 7 | ஏழாம் பத்து | கபிலர் | செல்வக் கடுங்கோ வாழியாதன் |
| 8 | எட்டாம் பத்து | அரிசில் கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| 9 | ஒன்பதாம் பத்து | பெருங்குன்றூர் கிழர் | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை |
| 10 | பத்தாம் பத்து | கிடைக்கப் பெறவில்லை | |

## புறநானூறு

- புறம்+நான்கு+நூறு = புறநானூறு.
- இதனைப் 'புறப்பாட்டு', 'புறம்', 'புறம்பு', 'தமிழ்க் கருவூலம்' எனவும் வழங்குவர்.
- 400 பாடல்களைக் கொண்ட இந்நூல், ஆசிரியப்பாவால் பாடப்பட்டுள்ளது.
- இதனை 158 புலவர்கள் பாடியுள்ளனர்.
- இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்'. இக்கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது.
- இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.
- புறநானூற்றில் சில பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
- தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், கடையெழு வள்ளல்கள், வீரர்கள், புலவர்கள், சான்றோர்கள் எனப் பலருடைய வரலாற்றுக் குறிப்புகளும், அக்கால மக்களின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியனவும் இந்நூலின் மூலம் அறிய முடிகிறது.
- புறநானூற்றுப் பாடல்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என வழங்கப்பெறும் புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் கொண்டு அமைந்தவையாகும்.
- திணை - ஒழுக்கம், நெறி.
- துறை - திணையின் உட்பிரிவு. (அவ்வத்திணையில் கூறப்படும் பொருளைப் பாகுப்படுத்திக் கூறுவது.)
- இந்நூலில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் கூறப்பட்டுள்ளன.

## புறநானூறு - ஔவையார்

"நாடாகு ஒன்றோ காடாகு ஒன்றேர்
அவலாகு ஒன்றேர் மிசையாகு ஒன்றேர்
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே! "- ஔவையார்

**ஆசிரியர் குறிப்பு:**

- ஔவையார் சங்கப் புலவர், அதியமானின் நண்பர்.
- அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர்
- சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தும் அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார்.
- சங்கப்பாடல்கள் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர் வேறு வேறானவர்.

## புறநானூறு - மோசிகீரனார்

"நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."- மோசிகீரனார்

**ஆசிரியர் குறிப்பு :**

- தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரன் என்பது குடிப்பெயராகக் குறிப்பிடப்படுகிறது.
- உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கிய போது, சேரமான் பெருஞ்சேரல் இரும் பொறை என்ற அரசனால் கவரி வீசப் பெற்ற பெருமைக்குரியவர்.

- இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

## புறநானூறு - நக்கீரனார்

"தென்கடல் வளாகம் பொதுமை இன்றிவெண்குடை நிழற்றிய ஒருமை
யோர்க்கும் நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே".-

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

### ஆசிரியர் குறிப்பு:

- மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.
- இவர் இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்
- பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல் வாடையையும் இயற்றியவர்
- இவ் உலகியல் உண்மையை இப்பாடலில் கூறியுள்ளார்
- மகனார் நக்கீரனார்.

## புறநானூறு - கண்ணகனார்

### ஆசிரியர் குறிப்பு:

- இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
- கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான்.

- அவருடன் இருந்தவர் கண்ணகனார் ஆவார்.
- அவன் உயிர் துறந்த பொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இப்பாடலைப் பாடினார்.

## அகப்புற நூல்

- அகமும் புறமும் கலந்து பாடப்பட்ட எட்டுத் தொகை நூல் பரிபாடல்.
- 'வேம்பு தலை யாழ்த்த நோன்காழ் எஃகம்' என்ற குறிப்பே இதனைப் புற இலக்கியமாக்கியது.

## பரிபாடல்

- இசைப்பாட்டு வகையைச் சார்ந்த நூல்.
- தமிழின் முதல் இசைப்பாடல் நூல்.
- பாவகையால் பெயர்பெற்ற நூல்.
- எட்டுத் தொகையுள் அகத்திற்கும் புறத்திற்கும் உரிய நூல்.
- பாண்டிய நாட்டைச் சிறப்பிக்கவே பாடப்பட்ட நூல் பரிபாடல்.
- பரிபாடலைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 13.
- இதன் சிற்றெல்லை 25 அடி, பேரெல்லை 400 அடி..

| வ. எண் | நூல் | பாடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | பாடல் எண்ணிக்கை | யாப்பு | அடிய ளவு | திணை | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | கடவுள் வாழ்த்துப் பாடியவர் | கடவுள் வாழ்த்தில் பாடப்பட்ட தெய்வம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | 175 | 400 | ஆசிரியப் பா | 9-12 | அகம் | தெரியவில்லை | பன்னாடு தந்த மாறன் வழுதி | பாரதம் பாடிய பெருந்தேவனார் | திருமால் |
| 2 | குறுந்தொகை | 205 | 401 | ஆசிரியப் பா | 4-8 | அகம் | பூரிக்கோ | | பாரதம் பாடிய பெருந்தேவனார் | முருகன் |
| 3 | ஐங்குறுநூறு | 5 | 500 | ஆசிரியப் பா | 3-6 | அகம் | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 4 | கலித்தொகை | 5 | 150 | கலிப்பா | | அகம் | நல்லந்துவனார் | | நல்லந்துவனார் | சிவன் |
| 5 | அகநானூறு | 145 | 400 | ஆசிரியப் பா | 13-31 | அகம் | உருத்திரசன்ம னார் | பாண்டியன் உக்கிர பெருவழுதி | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 6 | பதிற்றுப்பத்து | 8 | 80 | ஆசிரியப் பா | | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | கிடைக்கவில்லை | |
| 7 | புறநானூறு | 158 | 400 | ஆசிரியப் பா | | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சிவன் |
| 8 | பரிபாடல் | 13 | 22 | பரிபாட்டு | 25-400 | அகப்பு றம் | தெரியவில்லை | தெரியவில்லை | | |

- இது, திருமால்(8), முருகன்(31), கொற்றவை(1), வையை(26), மதுரை நகர்(4) ஆகிய தலைப்புகளில் 70 பாடல்களைக் கொண்டுள்ளது.

**திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டு காடுகிழாட் கொன்று - மருவினிய**
**வையை இருபத்தா(று) மாமதுரை நான்கென்ப**
**செய்ய பரிபாடல் திறம்.**

- ஆயினும் இன்று திருமால் (6), முருகன் (8), வையை (8) ஆகிய தலைப்புகளில் அமைந்த 22 பாடல்களே பழைய உரையுடன் கிடைக்கின்றன.
- வேறுவகையால் இரண்டு பாடல்களும், சிதறிய நிலையில் சில பாடல்களும் கிடைத்திருக்கின்றன.
- இவற்றுள் திருமாலுக்கு ஏழு பாடலும், முருகனுக்கு எட்டு பாடலும், வையைக்கு ஒன்பது பாடலும், மதுரையைப் பற்றி ஆறு பாடலும் சிதைவுகளாகக் கிடைக்கின்றன.
- முதல் 22 பாட்டுக்கும் துறை, பாடியோர் பெயர், பாடப்படும் பாணி, பண் வகுத்தோர் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கின்றன. வேறு வகையால் கிடைக்கப்பெற்றவைகளுக்கு இக்குறிப்புகள் இல்லை.
- இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறாமையால் இதனைத் தொகுத்தோர் பெயரும் பிறவும் அறிய முடியவில்லை.
- கிடைத்தவை மட்டும் வைத்து நோக்கும்போது நல்லந்துவனார் முதலாக 13 பேர் பாடி இருப்பதாகத் தெரிகிறது.
- வையைப் பற்றிய பாடல்கள் அகம் சார்ந்தன.
- கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் புறம் சார்ந்தன.
- பாடலைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை.
- பரிபாடலுக்கு பரிமேலழகர் உரை இயற்றியுள்ளார்.
- இதனை முதன் முதலில் தொகுத்தவர் உ.வே.சாமிநாதர்.

## பத்துப்பாட்டு

- எட்டுத் தொகையில் அடி நீண்டு வரும் பாடல்களைத் தனியே தொகுத்து அதற்கு பாட்டு என்று பெயரிட்டுள்ளனர்.
- பாட்டு என்பது பத்துப் பாடல்கள் அடங்கிய பத்துப்பாட்டைக் குறிக்கும்.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோல நெடு(நல்)வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

- இப்பத்துப்பாட்டின் சிற்றெல்லை 103 அடிகள், பேரெல்லை 782 அடிகளாகும்.
- 103 அடிகளைக் கொண்ட பத்துப்பாட்டு நூல் முல்லைப்பாட்டு.
- 782 அடிகளைக் கொண்ட பத்துப்பாட்டு நூல் மதுரைக்காஞ்சி.
- இவற்றுள் ஆற்றுப்படைகளாக வருவன ஐந்து நூல்கள்
- அவை,

    - ❖ திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை),
    - ❖ பொருநராற்றுப்படை,
    - ❖ சிறுபாணாற்றுப்படை,
    - ❖ பெரும்பாணாற்றுப்படை,
    - ❖ கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)

- ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் புறநூல்களாகும்.
- ஏனைய ஐந்து நூல்களும் அகம், புறம் சார்ந்தவைகளாகும்.
- பத்துப்பாட்டில் அகத்திணை நூல்கள் மூன்று.
- அவை,

- முல்லைப் பாட்டு,
- குறிஞ்சிப்பாட்டு,
- பட்டினப்பாலை.

- பத்துப்பாட்டில் புறத்திணை நூல்கள் ஆறு.

- அவை,

- **திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை),**
- **பொருநராற்றுப்படை,**
- **சிறுபாணாற்றுப்படை,**
- **பெரும்பாணாற்றுப்படை,**
- **கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)**

(மேற்கண்ட ஐந்தும்) — **ஆற்றுப்படை**

- **மதுரைக் காஞ்சி** உடன் சேர்த்து ஆறு நூல்களாகும்.

- பத்துப்பாட்டில் அகப்புற நூல் ஒன்று. அது, **நெடுநல்வாடை**..

## 1. திருமுருகாற்றுப்படை

- பத்துப்பாட்டின் முதல் நூலாக அமைவது திருமுருகாற்றுப்படை.
- இது பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்துப் பாடலாகவும் அமைகிறது.
- பத்துப்பாட்டில் காலத்தால் பிந்தைய நூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- திருமுருகாற்றுப்படையைப் புலவராற்றுப்படை என்றும் அழைப்பர்
- இதனை இயற்றியவர் நக்கீரர்.
- இந்நூல் 317 அடிகளைக் கொண்டது.
- இது முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
- ஆபத்தில் மாட்டிக் கொண்ட ஒரு புலவன் அதிலிருந்து மீண்டு வருவதற்கான வழிவகைகளை இந்நூல் குறிப்பிடுகிறது.

- ஏனைய ஆற்றுப்படை நூல்கள் பரிசில் பெறச் செல்வோரின் பெயரால் அமைய, திருமுருகாற்றுப்படை மட்டும் பரிசில் கொடுப்போன் பெயரால் அமைந்துள்ளது.

## 2. பொருநராற்றுப்படை

- பத்துப்பாட்டின் இரண்டாவது நூலாக அமைவது பொருநராற்றுப்படை
- இதன் ஆசிரியர் முதடத்தாமைக் கண்ணியார்.
- பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான்.
- இதில் 248 அடிகள் உள்ளன.
- இது ஆசிரியப்பாவால் ஆன நூல்.
- இவ்வாசிரியப்பாவில் வஞ்சியடிகள் இடையிடையே விரவி வருகின்றன.
- போர்க்களத்தில் பாடுவோன் பொருநன்.

## 3. சிறுபாணாற்றுப்படை

- பத்துப்பாட்டின் மூன்றாவதாக அமைவது சிறுபாணாற்றுப்படை
- இதன் ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.
- 269 அடிகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியப்பாவால் ஆனது.
- இதன் பாட்டுடைத் தலைவன் ஓய்மா நாட்டு நல்லிய கோடன்.
- ஓய்மா நாடு என்பது திண்டிவனத்தை ஒட்டிய பகுதிகள்.
- இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் உள்ள கடற்கரைப் பகுதி.
- உப்பங்கழிக்கும் கடலுக்கும் இடைப்பட்டப்பகுதி இடைக்கழிநாடு எனப்படும்.

## 4. பெரும்பாணாற்றுப்படை

- பத்துப்பாட்டின் நான்காவதாக அமைவது பெரும்பாணாற்றுப்படை.
- இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

- கண்ணன் என்பது இயற்பெயர், உருத்திரன் என்பது தந்தையார் பெயர்.
- 500 அடிகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது.
- இதன் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.

## 5. முல்லைப்பாட்டு

- பத்துப்பாட்டின் ஐந்தாவதாக அமைவது முல்லைப்பாட்டு.
- இது அகத்திணை நூல்.
- அகவற்பவால் ஆனநூல்.
- 103 அடிகளைக் கொண்டது.
- இதனைப் பாடியவர் காவிரிப் **பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகன் நப்பூதனார்.**

## 6. மதுரைக்காஞ்சி

- பத்துப்பாட்டின் ஆறாவதாக அமைவது மதுரைக் காஞ்சி
- இது புறத்திணை நூல்
- 782 அடிகளைக் கொண்டது
- இது ஆசிரியப்பாவால் ஆனநூல். இடையிடையே வஞ்சியடிகள் விரவி வருதலால் இதனை **வஞ்சிப்பாட்டு** என்று கூறுவர்.
- இதனை இயற்றியவர் மதுரைக்காஞ்சி எனப் புகழப்படும் **மாங்குடி மருதனார்** ஆவார்.
- இதன் பாட்டுடைத் தலைவன் **தலையாலங் கானத்து செருவென்ற பாண்டியன் நெருஞ்செழியன்.**

## 7. நெடுநல்வாடை

- பத்துப்பாட்டின் ஏழாவதாக அமைவது நெடுநல்வாடை
- இது அகப்புற நூல்.

- 188 அடிகளைக்கொண்டது.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இது ஒரு அகத்திணை நூல்.
- இதன் ஆசிரியர் **நக்கீரர்**.
- பாடுடைத்தலைவன் **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்.**

## 8. குறிஞ்சிப்பாட்டு

- பத்துப்பாட்டின் எட்டாவதாக அமைவது **குறிஞ்சிப்பாட்டு.**
- இது அகத்திணை நூல்.
- இதற்கு **பெருங்குறிஞ்சி** என்ற பெயரும் உண்டு.
- இதனை இயற்றியவர் **கபிலர்.**
- இதில் **261** அடிகள் உள்ளன.
- **அகவற்பாவால்** இயற்றப்பட்டுள்ளது.
- இதனை ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்காகக் கபிலர் பாடினார் என்ற ஒரு வரலாறும் உண்டு.
- இதில் தமிழ் என்பது அகப்பொருள் என்றும் கூறுவர்.
- இப்பாடல் தோழி செவிலித்தாய்க் கூறுவதாக அமைகிறது.
- 99 வகை பூக்களின் பெயர்களை இந்நூல் குறிப்பிடுகிறது.
- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ குறிஞ்சி.

## 9. பட்டினப்பாலை

- பத்துப்பாட்டின் ஒன்பதாவதாக அமைவது பட்டினப்பாலை.
- இது அகத்திணை நூல். 301 அடிகளைக் கொண்டுள்ளது.
- ஆசிரியப்பாவால் ஆனது. எனினும் வஞ்சியடிகள் நிறைய வருதலின் இதனை **வஞ்சி நெடும்பாட்டு** என்றும் கூறுவர்.
- இதனைப் பாடியவர் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்**.
- பாட்டுடைத் தலைவன் **சோழன் கரிகால் பெருவளத்தான்**.

| வ. எண் | நூல் | பாடல் எண் ணிக் கை | யாப்பு | நூலின் பண்பு | ஆசிரியர் | பாடுடைத் தலைவன் | வேறு பெயர்க ள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருமுருகாற்று ப்படை | 317 | ஆசிரியப்பா | ஆற்றுப்ப டை | நக்கீரர் | முருகன் | புலவாரா ற்றுப்ப டை |
| 2 | பொருநராற்றுப் படை | 248 | ஆசிரியப்பா | ஆற்றுப்ப டை | முடத்தாமக் கண்ணியார் | கரிகால் வளவன் | |
| 3 | சிறுபாணாற்றுப் படை | 269 | ஆசிரியப்பா | ஆற்றுப்ப டை | நல்லூர் நத்தத்தனார் | நல்லிய கோடன் | |
| 4 | பெரும்பாணாற் றுப்படை | 500 | ஆசிரியப்பா | ஆற்றுப்ப டை | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் | பாணாற் றுப் படை |
| 5 | முல்லைப் பாட்டு | 103 | ஆசிரியப்பா | அகத்தி ணை | நப்பூதன் | இல்லை | |
| 6 | மதுரைக்காஞ்சி | 782 | ஆசிரியப்பா | புறத்தி ணை | மாங்குடி மருதனார் | தலையாலங் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் | வஞ்சிப் பாட்டு |
| 7 | நெடுநல்வாடை | 188 | ஆசிரியப்பா | அகப்புற த் திணை | நக்கீரர் | தலையாலங் கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் | |
| 8 | குறிஞ்சிப்பாட்டு | 261 | ஆசிரியப்பா | அகத்தி ணை | கபிலர் | இல்லை | பெருங் குறிஞ்சி |
| 9 | பட்டினப்பாலை | 301 | ஆசிரியப்பா | அகத்தி ணை | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | இல்லை | வஞ்சி நெடும் பாட்டு |
| 10 | மலைபடுகடாம் | 583 | ஆசிரியப்பா | புறத்தி ணை | பெருங்கௌசிக னார் | நன்னன் | கூத்தரா ற்றுப்ப டை |

## 10. மலைபடுகடாம்

- பத்துப்பாட்டின் பத்தாவதாக அமைவது மலைபடுகடாம்.
- கடாம் என்பது மதம். மதம் பிடித்த பெருயாணை முழக்கம். மதம்பிடித்த யானை பிளிறும் ஓசைபோல் மலையில் ஓசை அமைகிறது என்பதே மலைபடுகடாம் என்பதன் பொருள்.
- இதற்குக் **கூத்தராற்றுப்படை** என்ற வேறு பெயரும் உண்டு.
- இதனைப் பாடியவர் **இரணிய முற்றத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.**
- இது **நன்னனைப்** புகழ்ந்து பாடும் நூல்.
- 583 அடிகளைக்கொண்ட நூல்.
- ஆசிரியப்பாவால் ஆனது.
- இசைக்கருவிகளின் பெயர்களைக் கூறும் நூல் இது.
- யாழினைப் புகழ்ந்து இந்நூல் தொடங்குகிறது.

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - உரைநடை

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# மறைமலை அடிகள்

- இயற்பெயர் : வேதாசலம்
- பெற்றோர் : சொக்கநாதர் (இவர் நாகையில் அறுவை மருத்துவர்)
- தாயார் – சின்னம்மையார்
- புனைப்பெயர் : முருகவேல்
- **காலம்** : 15.07.1876 – 15.09.1950

## பணிகள்

- சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்
- தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி தமிழைச் செழுமையாக வளர்த்தவர்.
- தனித்தமிழ் நடையின் தந்தை
- 1905 ல் “சைவ சித்தாந்த சமாஜம்” என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.
- பல்லாவரத்தில் இராமலிங்க வள்ளலாரின் கொள்கைப்படி 22.04.1911ல் “சமரச சுத்த சன்மார்க்க சங்கம்” தொடங்கினார். பின்னர் அதனை ‘பொதுநிலைக் கழகம்’ எனப் பெயர் மாற்றம் செய்தார்.
- திருமுருகன் அச்சுக் கூடத்தை ஏற்படுத்தி பல நூல்களை வெளியிட்டார்.
- ‘மணி மொழி நூல் நிலையம்’ என்ற நூலகத்தை ஏற்படுத்தினார்.
- திருநெல்வேலி சைவ சித்தாந்தம் தோன்றுவதற்கு இவரே காரணமாக இருந்தார்.
- ‘ஞான சேகரம்’ என்ற இதழை நடத்தினார்.
- ‘டிஸ்டிக் மைனர்’, ‘தி ஓரியண்டல் விஸ்டம்’ என்ற ஆங்கில இதழ்களையும் நடத்தினார்.
- 1867-ம் ஆண்டு ஆ. நல்லசாமிப் பிள்ளை என்பவரால் தொடங்கப்பட்ட ‘சித்தாந்த தீபிகை’ என்ற தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கான இரண்டு இதழ்களிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- மறைமலை அடிகள் ”பல்லாவரம் முனிவர் ” என்றும் குறிப்பிடப்பட்டார்

## இவரது படைப்புகள்

1. **பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்** (1921)
2. **மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி** (1927)
3. **மக்கள் நூற்றாண்டு ஊர்வாழ்க்கை இரு தொகுதிகள்** (1933)
4. **யோக நித்திரை** : **அரிதுயில்** (1922)
5. **தொலைவில் உணர்தல்** (1935)
6. **மரணத்தின் பின் மனிதர் நிலை** (1911)
7. **சாகுந்தல நாடகம்** (**சமஸ்கிருதத்தில் இருந்து மொழி பெயர்ந்தது** (1907)
8. **சாகுந்தல நாடக ஆராய்ச்சி** (1934)
9. **ஞான சாகரம் மாதிகை** (1902)

## பரிதிமாற் கலைஞர்

- பரிதிமாற் கலைஞர் : வி.கே. சூரிய நாராயண சாஸ்திரியார்
- பிறந்த இடம் : விளாச்சேரி (மதுரை)
- **காலம்** : 06.07.1870 – 02.11.1903
- பெற்றோர் : கோவிந்த சிவன் – இலட்சுமி அம்மாள்

## இளமைக் காலம் மற்றும் பணிகள்

- 19ஆம் நூற்றாண்டில் தமிழிற்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
- இவர் தனது இயற்பெயரான சூரிய நாராயண சாஸ்திரி என்பதனை ‘பரிதிமாற் கலைஞர்’ எனத் தமிழாக மாற்றினார்.
- பசுமலை பள்ளியில் இளமைப் படிப்பும், மதுரைக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை வகுப்பும் படித்தார்.
- 1892 இல் பி.ஏ. தேர்வில் தமிழிலும், வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக் கழக முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.
- 1893 இல் கிறித்தவக் கல்லூரி நிர்வாகம் அவருக்குத் தத்துவத்துறை பேராசிரியர் பதவி தந்தது. அதனை ஏற்க மறுத்து தமிழாசிரியர் பதவி ஏற்றார். 1895ல் தமிழ்த்துறைத் தலைவரானார்.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்ற அழைப்பு வந்த போது அதனை மறுத்து விட்டார்.

- யாழ்பாணம் சி .வை.தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமை கண்டு ”திராவிட சாஸ்திரி ” என்னும் சிறப்புப்பட்டத்தை வழங்கினார்

## படைப்புகள்

தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் 19 பேருக்கு ரூபாய் 15 இலட்சம் பரிசுத் தொகையாக அளித்து இவரது பதின்மூன்று நூல்களும் 2006 டிசம்பர் 2 அன்று தமிழக அரசால் அரசுடைமையாக்கப்பட்டன.

## நூல்கள்

1. மானவிஜயம்
2. தனிப்பாசுரத் தொகை
3. பாவலர் விருந்து
4. மதிவாணன்
5. நாடகவியல் (நாடக இலக்கண நூல்)
6. தமிழ் வியாசங்கள்
7. தமிழ் மொழியின் வரலாறு
8. சித்திரகவி விளக்கம்

## பதிப்பித்த நூல்கள்

1. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி (1898)
2. மகாலிங்கையர் எழுதிய இலக்கணச் சுருக்கம் (1898)
3. புகழேந்திப் புலவரின் நளவெண்பா (1899)
4. உத்திர கோச மங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் (1901)
5. தனிப்பாசுரத் தொகை (1901)

## இயற்றிய நாடக நூல்கள்

1. ரூபாவதி
2. கலாவதி
3. மானவிஜயம்
4. சூர்ப்பனகை

5.பரிதிமாற் கலைஞர் 'முத்ரராராட்சசம்' என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்து உள்ளார்.

## ந.மு.வேங்கடசாமி நாட்டார்

(நடுக்காவேரி முத்துச்சாமி மகன் வேங்கட சாமி நாட்டார்)

- இயற்பெயர் : சிவப்பிரகாசம்
- பெற்றோர் : முத்துச்சாமி நாட்டார் – தைலம்மை
- **காலம்** : 12.04.1884 – 1944
- பிறந்த ஊர் : நடுக்காவேரி, தஞ்சாவூர் மாவட்டம்

## கல்வி

- திண்ணைப் பள்ளியில் நான்காம் வகுப்பு வரை படித்தார். பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்ற பின் சட்டம் பயின்றார்.
- மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்காலத்தில் 'பிரவேச பண்டிதம்', 'பால பண்டிதம்', 'பண்டிதம்' என்னும் மூன்று தேர்வுகளை நடத்தி வந்தது. ஆறு ஆண்டுகள் படித்து தேர்வு எழுத வேண்டிய அம்மூன்று தேர்வுகளையும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் மூன்றே ஆண்டுகளில் அதாவது 1905, 1906, 1907 ஆண்டுகளில் எழுதி தேர்ச்சி பெற்றார்.
- இத்தேர்வுகளுக்குப் பிறகு 'பண்டிதர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.
- 1940இல் சென்னை மாகாணத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் நாட்டாருக்கு 'நாவலர்' என்ற சிறப்பு பட்டம் அளிக்கப்பட்டது.

## படைப்புகள்

1. கபிலர்
2. கண்ணகி வரலாறு
3. சோழர் சரித்திரம்
4. நக்கீரர்
5. வேளிர் வரலாறு
6. கள்ளர் சரித்திரம்

7. கற்பும் மாண்பும்
8. கட்டுரைத் திரட்டு

## உரைநூல்கள்

- ✓ ஆத்திசூடி,
- ✓ கொன்றை வேந்தன்,
- ✓ இன்னா நாற்பது,
- ✓ களவழி நாற்பது,
- ✓ கார் நாற்பது,
- ✓ வெற்றி வேற்கை
- ✓ மூதுரை,
- ✓ நல்வழி
- ✓ நன்னெறி,
- ✓ சிலப்பதிகாரம்,
- ✓ மணிமேகலை,
- ✓ திருவிளையாடற் புராணம்,
- ✓ யாப்பெருங்கலக்காரிகை,
- ✓ தண்டியலங்காரம்,
- ✓ அகத்தியர் தேவாரத் திரட்டு.

## மறைவு

- 1944 இல் ந.மு.வே நாட்டாருக்கு மணிவிழா கொண்டாடுவதென செயற்குழுவினர் முற்பட்ட போது எதிர்பாராத நிலையில் இவர் திடீரென காலமானர்.
- இவருக்கு சமாதி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு கற்கோயில் எழுப்பப்பட்டது. தமிழ்ப் புலவர் ஒருவர் மறைந்த இடத்தில் கற்கோயில் எழுப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இவருக்கு தமிழகம் முழுவதும் இரங்கல் கூட்டங்கள் நடைபெற்றன.
- இவரது நூற்றாண்டு விழாவை 22.04.1984 இல் தமிழக அரசு தஞ்சையில் கொண்டாடியது.

# இரா.பி.சேதுப்பிள்ளை

- பெயர் : இரா.பி. சேதுப்பிள்ளை
- பெற்றோர் : பிறவிப் பெருமாள் பிள்ளை, சொர்ணம்மாள்
- ஊர் : இராசவல்லிபுரம், திருநெல்வேலி
- **காலம்** : 02.03.1896 – 25.04.1961

## பணிகள்

நெல்லையில் சில ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1930ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 6 ஆண்டுகள் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பேராசிரியர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

## வரலாற்று நூல்கள்

- தமிழ் நாட்டு நவமணிகள்
- கால்டுவெல் ஐயர் சரிதம்
- கிறித்தவத் தமிழ்த் தொண்டர்
- திருக்காவலூர்க் கலம்பகம்

## ஆய்வு நூல்கள்

- திருவள்ளுவ நூல் நயம்
- சிலப்பதிகார நூல் நயம்
- வீரமாநகர்
- தமிழ் விருந்து
- தமிழகம் ஊரும் பேரும்
- தமிழின்பம் (சாகித்ய அகாதமி விருது பெற்ற முதல் தமிழ் நூல்)
- தமிழர் வீரம்
- வழிவழி வள்ளுவர்
- தமிழகம் அலையும் கலையும்

## தொகுப்புக் கட்டுரை நூல்கள்

- ஆற்றங்கரையினிலே
- கடற்கரையினிலே
- வேலும் வில்லும்
- வேலின் வெற்றி
- சிலம்பின் கதை அமைப்பு
- தமிழகப் பெண்மணி

## திரு.வி.க (திருவாரூர் விருத்தாசலனாரின் மகன் கலியாண சுந்தரனார்)

- பெயர் : திரு.வி.கலியாண சுந்தரம்
- பெற்றோர் : விருத்தாசலனார் – சின்னம்மையார்
- பிறந்த ஊர் : துள்ளம் காஞ்சிபுரம் மாவட்டம்
  (இவ்வூர் தற்போது ‘தண்டலம்’ என அழைக்கப்படுகிறது)
- **காலம்** : 26.08.1883 – 17.09.1953

## நூல்கள்

## செய்யுள் நூல்கள்

- ✓ உரிமை வேட்கை,
- ✓ முருகன் அருள் வேட்டல்,
- ✓ திருமால் அருள் வேட்டல்,
- ✓ சிவன் அருள் வேட்டல்,
- ✓ கிறித்துவின் அருள் வேட்டல்,
- ✓ புதுமை வேட்டல்,
- ✓ பொதுமை வேட்டல்,
- ✓ அருகன் அருகே,
- ✓ கிறிஸ்து மொழிக்குறள்,
- ✓ இருளில் ஒளி,
- ✓ இருமையும், ஒருமையும்,
- ✓ முதுமை ஊறல்.

## கட்டுரை நூல்கள்

1.இந்தியாவும் விடுதலையும்
2.மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
3.முருகன் அல்லது அழகு
4.பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணைநலம்
5.சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
6.சைவத்திறவு
7.சைவத்தின் சமரசம்
8.கடவுள் காட்சியும் தாயுமானவரும்
9.இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்
10.தமிழ்நூல்களில் பௌத்தம்
11.தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
12.நாயன்மார்கள்
13.தமிழ்ச்சோலை
14. உள்ளொளி

## குறிப்புகள்

- திரு.வி.க பயணம் என்பதற்கு செலவு என்ற சொல்லைப் பயன்படுத்தி முதன் முதலாக வழக்கிற்குக் கொண்டுவந்தவர்.
- திரு.வி.கவின் வாரிசுகள் என மு.வரதராசனாரும், கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தியும் பாராட்டப்படுகின்றனர்.
- திரு.வி.க. வின் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் ‘தமிழ்த்தென்றல்’.
- திரு.வி.க.வின் பத்திரிக்கைத் தலையங்கத் தொகுப்பு நூல் ‘தமிழ்ச் சோலை’
- திரு.வி.க. வின் மேடைச் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் ‘மேடைத் தமிழ்’
- திரு.வி.க.வின் ‘பொதுமை வேட்டல்’ என்ற நூலில் உள்ள பாக்களின் எண்ணிக்கை நானூற்று முப்பது.

# வையாபுரிப் பிள்ளை

- **பெயர்** : **வையாபுரிப் பிள்ளை**
- **பெற்றோர்** : **சரவணப் பெருமாள் பிள்ளை – பாப்பம்மாள்**
- **காலம்** : 12.10.1891 – 1956
- **ஊர்** : **சிக்கநரசையன், திருநெல்வேலி மாவட்டம்**

## இயற்றிய நூல்கள்

1. கம்பன் காவியம்
2. இலக்கிய தீபம்
3. இலக்கிய உதயம்
4. இலக்கிய சிந்தனைகள்
5. சொற்கலை விருந்து
6. காவிய காலம்
7. தமிழ்ச் சுடர்மணிகள்
8. தமிழர் பண்பாடு
9. இலக்கணச் சிந்தனைகள்
10. உலக இலக்கியங்கள்
11. மாணிக்க வாசகர் காலம்
12. பத்துப் பாட்டின் காலநிலை
13. பவணந்தி காலம்
14. வள்ளுவர் காலம்
15. அகராதி நினைவுகள்
16. இலக்கிய மண்டபக் கட்டுரைகள்

*******

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழகம் - ஊரும் பேரும்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# ஊரும் பேரும்

- நாடு என்னும் சொல் ஆதியில் மக்கள் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது.
- தமிழர் வாழ்ந்த நாடு தமிழ்நாடு எனப் பெயர் பெற்றது.
- மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகள் அவரவர் பெயராலேயே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று அழைக்கப்பட்டன.
- நாளடைவில் முந்நாடுகளின் உட்பிரிவுகளும் நாடு என அழைக்கப்பட்டன. கொங்குநாடு, தொண்டைநாடு முதலியன இதற்குச் சான்றாகும்.
- முரப்புநாடு என்பது பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்று. இப்பொழுது, அப்பெயர் பொருநையாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூரின் பெயராக நிலவுகின்றது. அதற்கு எதிரே ஆற்றின் மறுகரையில் உள்ள மற்றொரு சிற்றூர் வல்லநாடு என்னும் பெயர் உடையது.
- மாயவரத்திற்கு அணித்தாக உள்ள ஓரூர் கொரநாடு என வழங்கப்படுகிறது. கூறைநாடு என்பதே கொரநாடு என மருவிற்று. பட்டுக்கோட்டை வட்டத்தில் கானாடும், மதுராந்தக வட்டத்தில் தென்னாடும் உள்ளன.

**<u>நகரம்</u> :**

- சிறந்த ஊர்கள், நகரம் என்னும் பெயரால் வழங்கப்படும்
- நாட்டின் தலைமை சான்ற நகரம் தலைநகரம் எனப்படும்.
- ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் குருகூர். தம் பழம்பெயரைத் துறந்து, ஆழ்வார்திருநகரியாக திகழ்கின்றது.
- பாண்டி நாட்டிலுள்ள விருதுப்பட்டி, வாணிகத்தால் மேம்பட்டு இன்று விருதுநகராக விளங்குகின்றது.

## சென்னை :

- சென்னையின் பகுதிகளாக இன்று விளங்கும் மயிலாப்பூரும் திருவல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக அந்நாளில் காட்சி அளித்தன.
- மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் சிவாலயம் மிகப் பழைமை வாய்ந்தது. திருஞானசம்பந்தர் அதனைப் பாடியுள்ளர்.
- திருமயிலைக்கு அருகே உள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றது. அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும். அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம்.
- அல்லி மலர்கள் அழகுற மலர்ந்து கண்ணினைக் கவர்ந்த கேணியின் அருகே எழுந்த ஊர் அல்லிக்கேணி எனப் பெயர் பெற்றது. அங்கே பெருமாள், கோவில் கொண்டமையால் திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருவல்லிக்கேணி ஆயிற்று.
- திருவல்லிக்கேணிக்கு வடக்கே மேடும் பள்ளமாகப் பல இடங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று நரிமேடு.

## புரம் :

- புரம் என்னும் சொல், சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும்.
- ஆதியில் காஞ்சி எனப் பெயர் பெற்ற ஊர் பின்னர், புரம் என்பது சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று.
- பல்லவபுரம், கங்கை கொண்ட சோழபுரம், தருமபுரம் முதலியவை மேலும் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

## பட்டினம் :

- கடற்கரையில் உருவாகும் நகரங்கள் பட்டினம் எனப் பெயர் பெறும்.
- காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், சதுரங்கப்பட்டினம் ஆகியவை பட்டினம் எனப் பெயர் பெற்ற ஊர்கள் ஆகும்.

## பாக்கம் :

- கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் எனப் பெயர் பெறும்.
- பட்டினப்பாக்கம், சேப்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் இப்படிப் பாக்கம் எனப் பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

## புலம் :

- புலம் என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக மாம்புலம், தாமரைபுலம், குரவைப்புலம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

## குப்பம் :

- நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் குப்பம் என்னும் பெயரால் வழங்கப்பெறும். காட்டுக்குப்பம், நொச்சிக்குப்பம், மஞ்சக்குப்பம், மந்தாரக்குப்பம், முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

******

தமிழ்நாடு அரசு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழில் கடித இலக்கியம்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழில் கடித இலக்கியம்

## நேரு எழுதிய கடிதம்

- நேரு, இந்திராகாந்திக்கு 1922 முதல் 1964 வரை, மொத்தம் 42 ஆண்டுகள் கடிதம் எழுதினார்.
- இந்திரா காந்தி, மேற்கு வங்காளத்தில், சாந்தி நிகேதன் என்னுமிடத்தில் உள்ள தாகூரின் விஸ்வபாரதி கல்லூரியில் படித்தார்.
- நேரு கடிதம் எழுதியது உத்திராஞ்சல் மாநில அல்மோரா மாவட்ட சிறையில் இருந்து நாள்: 22.02.1935
- நேரு இங்கிலாந்தில் உள்ள கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தார்.
- புத்தகம் வாசிப்பதை கடமையாக்கவோ, கட்டாயப்படுத்தவோ கூடாது என்கிறார் நேரு.
- மேலும் நேரு, பிளேட்டோவின் புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையை தூண்டுபவை என்றும் கூறுகிறார். அவை சுருக்கமாகவும், வாசிக்க எளிதாகவும் இருக்கும்.
- கிரேக்க நாடகங்கள் நம் ஆர்வத்தை தூண்டும் என்றும் கூறுகிறார். காளிதாசரின் சாகுந்தலம் நாடகம் படிக்க வேண்டிய நூல் என்றும் கூறுகிறார்.
- டால்ஸ்டாயின் “போரும் அமைதியும்” என்ற நாவல், உலகில் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று எனவும், பெர்னார்ட்ஷாவின் நூல்கள் வாசிக்க தகுந்தவை என்றும் கூறுகிறார்.
- நேருக்கு மிகவும் பிடித்தமானவர் ஆங்கில சிந்தனையாளரும், கல்வியாளருமான பெட்ரண்ட் ரஸ்ஸல்.
- புத்தக படிப்பு என்பது 1000 முகங்கள் கொண்ட வாழ்க்கையைப் புரிந்து கொள்ள பயன்படும் என்கிறார்.
- கேம்ப்ரிட்ஜ் – இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம்

- சேக்ஸ்பியர் – ஆங்கில நாடக ஆசிரியர்
- மில்டன் – ஆங்கில கவிஞர்
- பிளேட்டோ – கிரேக்கச் சிந்தனையாளர்
- காளிதாசர் – வடமொழி நாடக ஆசிரியர்
- டால்ஸ்டாய் – ரஷ்ய நாட்டு எழுத்தாளர்
- பெர்னார்ட் ஷா – ஆங்கில நாடக ஆசிரியர்
- பெட்ரண்ட ரஸ்ஸல் – சிந்தனையாளர், கல்வியாளர்
- கிருபாளினி – விஸ்வபாரதியில் பணிபுரிந்த ஒரு பேராசிரியர்.

## காந்தியடிகளின் கடிதங்கள்

- 1917-ம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தாய்மொழி வழிக்கல்வி பற்றிய தலைமை உரை மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் கடித வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.
- "பயிற்றுமொழி" குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது அடித்தளமில்லாமல் கட்டடம் எழுப்புவது போன்றது.
- ரவீந்திரநாத் தாகூரின் இலக்கிய நடையின் உயர்வு அவருடைய ஆங்கில அறிவால் மட்டுமின்றி தாய்மொழி மொழிப்புலமையினாலும் வந்ததே ஆகும். முன்சிராம் பேச்சாற்றலுக்குக் காரணம் அவர் தம் தாய் மொழி அறிவே. மதன் மோகன் மாளவியாவின் தாய்மொழி பேச்சு தங்கத்தைப் போல் ஒளி வீசுகிறது, ஆங்கிலப் பேச்சு வெள்ளியைப் போன்று ஒளி வீசுகின்றது.
- வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம்.
- படித்த இந்தியர் அனைவரும் அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதில்லை.

- இந்தியாவில் தாய் மொழிக்கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல ஜெகதீஸ் சந்திர போஸ்களும் , பி.சி.ராய்களும் தோன்றி இருப்பார்கள்.
- பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். தெரிந்தறியாத ஒரு மொழியின் மூலம் கல்வி கற்பது இந்த இணக்கத்தைக் குறைத்து விடும்.
- காந்தியடிகள் தன் கடிதங்களை குஜராத்தி மொழியில் எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.
- காந்தியடிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள் பகுதி – 1 வால்ஜி கோவிந்தஜி தேசாய் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. முதல் பதிப்பு 1962ம் ஆண்டு வெளிவந்தது. ஆசிரம சகோதரிகள் , ஆசிரமக் குழந்தைகள், பணியாட்கள் போன்றோருக்குப் பல தலைப்புகளில் கடிதம் எழுதினார்.

## மு.வரதராசனார் எழுதிய கடிதம்

வளவன் என்னும் பெயரில் தம்பி எழிலுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

### தம்பிக்கு கூறிய அறிவுரைகள்

- தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது.
- ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்கவேண்டும்
- கல்வி மொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும், எல்லா பாடங்களிலும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும்.
- ”ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற செம்மொழியைப் போற்றுவோம்.

- “ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை” என்று பாரதியார் கண்ட கனவைப் போற்று
- ”இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம், ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார், அடங்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால்தான் வீழ்ச்சி நேர்ந்தது“ என்று விவேகானந்தர் கூறியதை தம்பிக்குஅறிவுறுத்துகிறார்.

## நாட்குறிப்பு

- பழங்கால வரலாற்றை அறிய உதவும் காலக்கண்ணாடிகள் - கல்வெட்டுகளும், செப்பேடுகளும்.
- நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி - சாமுவேல் பெப்பிசு.
- “டைஸ்“ என்றும் இலத்தீன் சொல்லுக்குப் பொருள் - நாள்
- “டைரியம்“ என்னும் இலத்தீன் சொல்லுக்குப் பொருள் - நாட்குறிப்பு
- டைரி என்னும் ஆங்கிலச் சொல் டைரியம் என்னும் இலத்தீன் சொல்லிருந்து உருவானது.
- இந்தியாவின் பெப்பிசு, நாட்குறிப்பு வேந்தர், என அழைக்கப்பட்டவர் - ஆனந்தரங்கர்
- வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்வது - ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

- ஆனந்தரங்கர் சென்னைப் பிரம்பூரில் (பெரம்பூர்) 1709ஆம் ஆண்டு பிறந்தார்
- ஆனந்த ரங்கர் மூன்று வயதில் தாயை இழந்தவர்

- ஆனந்த ரங்கர், எம்பார் என்றவரிடம் கல்வி பயின்றார்
- ஆனந்த ரங்கரின் தந்தை பெயர் - திருவேங்கடம்
- ஆனந்த ரங்கரின் மைத்துனர் பெயர் - நைனியப்பர்
- புதுவையில் அரசுப்பணியில் உதவியாளராகச் சேர்ந்து நாளடைவில் திவானாகப் பதவி உயர்வுப் பெற்றார்
- துய்ப்ளே என்னும் ஆளுநரின் மொழிபெயர்ப்பாளர்(துபாசி) இறந்த பிறகு அப்பணிக்கு ஆனந்தரங்கர் நியமிக்கப்பட்டார்
- துபாசி என்பதின் பொருள் - இருமொழிப்புலமையுடையவர் (மொழிபெயர்ப்பாளர்)
- ஆனந்தரங்கர் துபாசியாகப் பணியாற்றிய காலத்தில் 1736 ஆம் ஆண்டு முதல் 1761ஆம் ஆண்டுவரை 25 ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதினார்
- ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்புக்கு இட்டபெயர்கள் - தினப்படி செய்தி குறிப்பு, சொஸ்த லிகிதம்
- அக்கால நிகழ்வுகளை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாக திகழும் நாட்குறிப்பு - ஆனந்தரங்கர் நாட்குறிப்பு
- சொஸ்த என்பதின் பொருள் - தெளிந்த (அ) உரிமையுள்ள
- “லிகிதம்“ என்பதின் பொருள் - கடிதம் (அ) ஆவணம்
- ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் பெரும்பகுதி உள்ள செய்திகள் - வணிகச் செய்திகள்
- பிரெஞ்சுக்காரர்களுக்கும். இந்திய மன்னர்களுக்கும் இடையே பாலமாக இருந்தவர் - ஆனந்தரங்கர்
- சுங்குசேஷாசல செட்டியாரின் பெண்கள் இருவருக்கும் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் ஆளுநர் முசேதுய்ப்ளேயும் அவர்கள் பெண்சாதி மதாம் தெப்ரமேனி ஆகியோர் கலந்து கொண்டதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பு தெரிவிக்கிறது

- செங்கற்பட்டுக்கோட்டைக்குத் தளபதியாகவும், அம்மாவட்டம் முழுமைக்கும் ஜாகிர்தாரராகவும் நியமனம் பெற்றவர் - ஆனந்தரங்கர்

- ஆளுநர் மாளிகைக்குப் பல்லக்கில் செல்லும் உரிமை ஆனந்தரங்கருக்கு வழங்கப்பட்டிருந்தது.

- பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தாலும் தமிழிலேயே கையெழுத்திட்டார்

- ஆனந்தரங்கருக்கு கி.பி.1749ல் மூவாயிரம் குதிரைகள் வழங்கி, மன்சுபேதார் என்னும் பட்டத்தை முசபர்சங் வழங்கினார்

- இராமநாடகத்தை ஆனந்தரங்கர் முன்னிலையில் அருணாசலக்கவிராயர் அரங்கேற்றினார்

- ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு ஓர் இலக்கியமாகவும் வரலாற்று ஆவணமாகவும் மதிக்கப்பெறுகிறது காரணம் - தனிமனிதனின் ஒருநாள் நிகழ்வுப் பதிவும், அன்றைய பணிகளின் குறிப்பும் மட்டும் இல்லாமல் குறித்தநாளில் நிகழ்ந்த சமூக மாற்றங்கள் அரசியல் நிகழ்வுகள், இயற்கையில் ஏற்பட்ட பேரிடர்கள் உலகின் சீரிய நிகழ்வுகள் போன்ற மிகச்சிறந்த நிகழ்வுகளின் பதிவாக அமைந்திருப்பதால் ”ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் அவரது காலத்தில் யாருமே புரிந்திராத அரியதொரு இலக்கியப்பணி” என்று கே.கே.பிள்ளை கூறினார்

- **ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள் - ஆனந்தரங்கக் கோவை - தியாகராச தேசியர், ஆனந்தரங்கன் தனிப்பாடல்கள், கள்வன் நொண்டிச் சிந்து, ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - அரிமதி தென்னகம், ஆனந்தரங்கர் புதினங்கள். ஆனந்தரங்கர் விஜயசம்பு - சீனிவாசக்கவி (வடமொழி), ஆனந்தரங்க ராட்சந்தமு - கஸ்தூரி ரங்கக் கல்வி (தெலுங்கு).**

*********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - கலைகள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# கலைகள்

## இலக்கியத்தில் கலைகள்

நான்கு வேதம், ஆறு சாத்திரம், புராணம் போன்ற ஆரிய வழி (வடநாடு) வந்த இலக்கிய மரபுகள் கலைகள் பற்றி குறிப்பிடுகின்றன. அவை அறுபத்து நான்கு என வரையறுத்துக் கூறுகின்றன. எனினும், ஆரிய மரபிற்கு முன்னதாகவே தமிழர் பண்பாட்டில் 'கலைகள்' நிகழ்த்துக் கலைகள் (கூத்து), நிகழ்த்தாக் கலைகள் (கற்பனை) என்ற இரு வகைகளாக வழக்கத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. அதுவே பிற்காலத்தில் இயல், இசை, நாடகம் என்று கலைகள் தமிழோடு கலந்து முத்தமிழாக தமிழகத்தில் வளர்ச்சி பெற்றது.

## சிற்பம்

சிற்பம் என்பது ஒரு முப்பரிமாண கலை பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருள்களுக்கு உருவம் கொடுப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. பொதுவாகச் சிற்பங்கள் செய்வதற்காகப் பயன்படும் பொருள்களுள் கற்கள், உலோகம், மரம் என்பவை அடங்குகின்றன. சிற்பங்களை உருவாக்குபவர் 'சிற்பி' என்றழைக்கப்படுகிறார்.

## தமிழகத்தின் கலைகள்

கலைகளின் விளைநிலம் சோழநாடு ஆகும். கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் கொழிக்கும் நகரம் கும்பகோணம் . ஒவ்வொரு சிற்பத்திலும் கதையோ காவியமோ பொதிந்திருக்கும். தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை பல்லவர்களையே சாரும். மாமல்லபுரம் பல்லவர்களின் கலைக் கூடமாக விளங்குகிறது.

## பாண்டியர்களின் சிற்பக்கலை

கி.பி. 6,7,8 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர்கள் குகைகளில் அழகிய சிற்பங்களைப் படைத்தனர். உதாரணமாக திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் மற்றும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் கழுகுமலை ஒற்றைக்கல் கோயில் போன்ற இடங்களில் பாண்டியர்களின் கலை உன்னத படைப்புகளைக் காணலாம்.

## சோழர் கால சிற்பங்கள்

பல்லவர்கள் போற்றி வளர்த்த சிற்பக்கலை சோழ மன்னர்கள் காலத்தில் மேலும் வளர்ந்தது. அதிகமாக தெய்வச் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கி.பி.9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்கள் குடந்தைக் கீழ்க் கோட்டம், சீனிவாச நல்லூர், அரங்கநாதர் கோவில், பசுபதி கோவில் அறநெறிசுரம், ஆகியவற்றில் உள்ளன. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என அனைத்து சமய தெய்வங்களுக்கும் சோழர் காலத்தில் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. தொடக்கத்தில் கோயில் கட்டுவதற்கு முதன்மை கொடுத்த சோழர்கள் பின் சிற்பங்களுக்கு முதன்மை கொடுத்தனர். தாராசுரம் கோயிலை ‘கலைகளின் சரணாலயம்’ எனலாம்.

## பல்லவர் கால சிற்பங்கள்

மாமல்லபுரம் பல்லவர்களின் கலைக் கூடமாக விளங்குகிறது. மகிசாசுர மர்த்தினி குகை, ஆதிவராக மண்டபம், மும்மூர்த்தி மண்டபம் ஆகியவற்றிலுள்ள நேர்த்தி மிக்க சிற்பங்கள் நம் கண்களைக் கவர்கின்றன.

## சிற்பங்கள் மிகுதியாக உள்ள ஊர்கள்

திருவாரூர், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், மதுரை, திருவரங்கம், மாமல்லபுரம், திருமயம், தரங்கம்பாடி, செஞ்சி, தீபங்குடி (சமணர் கோவில்) போன்றவை ஆகும்.

# ஓவியம்

## தோற்றம்

மிகப்பழமையான கவின் கலைகளுள் ஒன்று ஓவியக் கலையாகும். இன்றும் காணப்படும் ஓவியங்களில் தொன்மையானவை பல்லவர்கால ஓவியங்கள் ஆகும். தமிழகத்தில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் மான், போர், வேட்டையைக் குறிக்கும் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வரையப்பட்ட ஓவியங்களை முதலில் 'கண்ணெழுத்து' என்று அழைத்தனர். வண்ணம் கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதற்கு 'புனையா ஓவியம்' என்று பெயர்.

## சங்க கால ஓவியம்

- ஓவியங்கள் சங்க காலத்தில் 'வட்டிகைச் செய்தி' என பெயர் பெற்றது.
- "ஓவத்தன்ன இடனுடை வனப்பு" – எனப் பாரியின் அரண்மனைப் புலவர் கபிலர் பாராட்டினார்.
- சிலப்பதிகாரம் 'ஓவிய விதானம்' பற்றி கூறுகின்றது. ஓவியங்கள் வரைய 'துகிலிகை' பயன்பட்டது.

## விஜய நகர பேரரசு கால ஓவியங்கள்

காஞ்சி, காளத்தி, குடந்தை, திருவரங்கம், திருப்பதி, திருவண்ணாமலை, தில்லை, திருவீழிமழலை, ஆரூர், ஓமலூர் முதலான இடங்களில் நாயக்கர் கால ஓவியங்களைக் காணலாம். கி.பி.14ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்கள் திருவரங்கத்தில் வேணுகோபாலன் திருச்சந்நிதியில் வரையப்பட்டுள்ளன. குழலூதும் கண்ணனையும் அவனைச் சூழ நிற்கும் ஆநிரைகளையும், கோகுலத்துப்பெண்களையும் ஓவியமாகக் காணலாம். திருவீழிமழலையிலுள்ள சிவன் கோவில் மண்டபத்து விதானத்தில் கி.பி.15, 16 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன.

## மதுரை நாயக்கர் கால ஓவியங்கள் (கி.பி.1700 – 1800)

தஞ்சை, மதுரை, திருவெள்ளறை, குற்றாலம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம், செங்கம், பட்டீசுவரம் ஆகிய இடங்களில் நாயக்கர் கால ஓவியங்களைக் காணலாம். தஞ்சை கோயிலில் திருமால், இந்திரன், அக்கினி, வாயு, இரம்பை, ஊர்வசி ஆகியோரின் ஓவியங்கள் காட்சியளிக்கின்றன. குறிப்பாக மதுரையில் அங்கயற்கண்ணி, சுந்தரேச பெருமாள் மணக்கோலக்காட்சி, இராணி மங்கம்மாள் ஓவியம், விசய நகர சொக்கநாதர், மீனாட்சி எண்திசைக்காவலர்களுடன் போரிடும் காட்சி, பொற்றாமரைக்குளத்தில் சிவனின் 64 திருவிளையாடல்களும் வரையப்பட்டுள்ளன.

## பேச்சுக் கலை

## அறிமுகம்

நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமையத்தக்க அரிய கலை பேச்சுக் கலை. பேச்சுக் கலை மக்களுக்கு அறிவைப் புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வன்மையுடையது. பேச்சும், மேடைப்பேச்சும் வெவ்வேறு பேச்சு ஆகும். பேச்சு என்பது உணர்ந்ததை உணர்ந்தவாறு பேசுதல் ஆகும். பிறருக்கு எழுதி உணர்த்துவதைக் காட்டிலும் இனிய முறையில் பேசி உணர்த்தும் மேடைப் பேச்சு மிகுந்த பலனைத் தரும்.

## பேச்சுக் கலையில் மொழியும், முறையும்

மேடைப் பேச்சிற்கு கருத்துக்களே உயிர்நாடி பேச்சாளரின் மனதிலே உள்ள கருத்து கேட்பவரின் மனதில் நிலைக்க வேண்டும். பேசும் மொழி அழகியதாகவும், தெளிவாகவும், சிக்கலற்றதாகவும் இருத்தல் வேண்டும். நாம் சொல்ல நினைத்ததை தெளிவாகவும், காலம் அறிந்தும் சொல்லுதல் வேண்டும். “ஆள்பாதி ஆடைபாதி” என்பது பழமொழி. எனவே, சிறந்த உடை உடுத்திச் செல்வது நன்று. மிடுக்கான தோற்றப் பொலிவில் இருக்க வேண்டும்.

“செட்டியார் மிடுக்கோ, கடைச்சரக்கு முறுக்கோ” என்ற பழமொழியும் பொருந்தும். பிறரை அளவுக்கு அதிகமாகப் புகழவும் கூடாது.

# மேடைப் பேச்சாளர்கள்

- மேடைப் பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர். திரு.வி.கலியாணசுந்தரம்,பேரறிஞர்அண்ணா, இரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

# திரைப்படக் கலை

## திரைப்பட வரலாறு

கி.பி.65-ல் லூகரீஸ் என்ற ரோமானியக் கவிஞர் நம் கண்களில் தோன்றுகின்ற 'பார்வை நிலைப்பு' என்ற பண்பைக் கண்டறிந்தார். 200 ஆண்டுகள் கழித்து டாலமி என்ற வானவியல் அறிஞர் அப்பண்பினை பரிசோதனை மூலம் மெய்ப்பித்தார். திரைப்படம் உருவாவதற்கு இதுதான் அடிப்படைப் பண்பாகும். கருத்துப்படத்தைத் தயாரிக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' ஆவார். 1830-இல் போட்டோ எடுக்கும் முறையைக் கண்டுபிடித்த பின்னர் இயக்கத்தைப் படம் பிடிக்க முயன்றார் எட்வர்டு மைபிரிட்ஜ் என்ற ஆங்கிலேயர்.

## திரைப்பட அறிவியல்

நடிப்பாற்றலை எடுத்துக் கூறி சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகள் அமைத்தும் படம் முடியும் வரை உழைக்கும் 'நுண்மான் நுழைப்புலம்' உடையவரை 'இயக்குநர்' என்பர். ஒரு மொழிப் படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு 'மொழிமாற்றம்' என்று பெயர். கதைப்படங்கள் மட்டுமின்றி கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் என பல வளர்ச்சி நிலைகளை திரைப்படத் துறை அடைந்துள்ளது. திரைப்படம் எடுக்கப் பயன்படும் சுருள் 'திரைப்படச்சுருள்' எனப்படும். இதனை ஈஸ்ட்மென் என்பவர் கண்டுபிடித்தார். திரைப்படச் சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது. படம் எடுக்கப் பயன்படும் சுருள் 'எதிர்சுருள்' எனப்படும். ஒலி, ஒளிப் பதிவுகளை தனித்தனிப் படச் சுருளில் அமைப்பர்.

## படம் பிடிக்கும் கருவி

திரைப்படத்தில் ஒளிப்பதிவு செய்ய படப்பிடிப்பு கருவி மிகவும் இன்றியமையாதது. படப்பிடிப்பின் போது படப்பிடிப்பு கருவி அசைந்தால் படம் தெளிவாக இராது. படப்பிடிப்புக் கருவியை உயரமான இடத்தில் பொருத்தி விடுவர். சிலர் படப்பிடிப்புக் கருவியை நகர்த்தும் வண்டியில் பொருத்தி விடுவர். படப்பிடிப்பு கருவியில் ஓரடி நீளம் உள்ள படச்சுருளில் பதினாறு படங்கள் வீதம் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.

## ஒளிப்பதிவு

நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒளிப்பதிவு செய்வர். உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலிப் பெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிப் பெருக்கி ஒலியலைகளை மின் அதிர்வுகளாக மாற்றும். மின் அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒரு வகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. மின்னோட்டத்திற்கு தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இந்த ஒளி படச் சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து அங்கு ஒளிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

## திரைப்படக் காட்சிபதிவு

ஒளி, ஒலிப் படக் கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது. இக்கருவியில் மேற்பக்கம் ஒன்றும், அடிப்பக்கம் ஒன்றுமாக வட்டமான இரு பெட்டிகள் இருக்கும். காட்ட வேண்டிய படச் சுருளை ஒளி ஒலிப்படக் கருவியின் மேல்பெட்டியில் பொருத்துவர். ஒளிமிகு விளக்குகளுக்கும் உருப்பெருக்கிகளுக்கும் இடையில் படம் வரும். முன்புறம் ஒரு மூடி இருக்கும். மூடிக்கு இரண்டு கைகள் உண்டு. மூடி நொடிக்கு எட்டுமுறை சுழலும்.

## பட வகைகள்

படங்களைக் கதைப்படம், கருத்துப்படம், செய்திப்படம், விளக்கப்படம், கல்விப்படம் என்று பல வகைகளாகப் பிரிக்கலாம்.

## கருத்துப் படம்

கருத்துப் படம் அமைக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' ஆவார். இவர் ஒரு ஓவியர். ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைபவர். கதைகளை எழுதுவதற்குப் பதில் பொம்மைகளைக் கொண்டு படங்களைத் தயாரிக்கின்றனர். இந்த இயங்குறு படங்கள் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருப்பதால் குழந்தைகள் மிகவும் விரும்பும்படி இருக்கும்.

## கதைப்படம்

ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் படம் கதைப்படம் ஆகும். இது புராணக்கதை, வரலாற்றுக் கதை, சமூகக் கதை என பல வகைகளில் இருக்கும்.

## செய்திப்படம்

உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் படமாக்கிக் காட்டுவது செய்திப் படமாகும். திரைப்படம் எடுப்பதை விட செய்திப்படம் எடுப்பது கடினமான செயல் ஆகும். உலகப் போரின் போது ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களில் படம் எடுத்தவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும், செய்தி படத்திற்கு உதாரணமாக போர், நிலநடுக்கம், சுனாமி, மக்கள் போராட்டம் போன்றவற்றை படம் எடுப்பதை குறிப்பிடலாம்.

## விளக்கப்படம்

ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப் பற்றிய முழுவிளக்கத்தையும் தருவது விளக்கப்படங்கள் ஆகும். ஒரு கோட்டையைக் காட்டும் போது அதன் அமைவிடம், அமைப்பு, கட்டியவர்

அக்கோட்டையை ஆண்டவர்கள், அங்கு நடந்த போர்கள் என அனைத்தையும் காட்டுவது ஆகும்.

## கல்விப் படம்

கல்வி கற்பிப்பதற்காக உருவாக்கப்படும் படங்கள் கல்விப் படங்கள் எனப்படும். ஆசிரியரின் விளக்கப்படங்கள், பாடம் தொடர்பான விலங்குகளின் வாழ்க்கை, மக்களின் வாழ்க்கை போன்றவை குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்கள் கல்வி அறிவை எளிதில் பெறுவர். வாழ்வில் நேரில் பார்க்க முடியாத பல இடங்களை நேரில் பார்க்கும்படி காட்டுவது கல்விப்படம் ஆகும்.

*******

தமிழ்நாடு அரசு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - சமயப் பொதுமை உணர்த்தியவர்கள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## சமயப் பொதுமை உணர்த்தியவர்கள்

### தாயுமானவர்

- காலம் - 18 ஆம் நூற்றாண்டு
- ஊர் - திருமறைகாடு (வேதாரண்யம்) நாகப்பட்டினம் மாவட்டம்
- பெற்றோர் - கேடிலியப்பர் - கெஜலட்சுமி அம்மையார்
- மனைவி - மட்டுவார் குழலி
- திருச்சிராப்பள்ளி மலை மீது எழுந்தருளியுள்ள இறைவனான தாயுமானவர் திருவருளால் பிறந்தமையால் தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது.
- பணி - திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலராக பணியாற்றினார்
- திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவரின் ஆசிபெற்றவர்.
- முத்தே பவளமே எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலின் ஆசிரியர் தாயுமானவர்
- பராபரம் என்பதின் மேலான பொருள், இறைவன்
- தாயுமானவாரின் கவிதை நூலுக்கு தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்று பெயர்.
- தமிழ்மொழியின் உபநிடதம் என்று அழைக்கப்படுவது தாயுமானவர் பாடல்கள்
- முத்தே பவளமே என்னும் வாழ்த்துப் பாடல் தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் பராபரக்கண்ணி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.
- தெய்வத்தமிழின் இனிமையும், எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் மனத்தூய்மை, பக்திசுவை, ஆகியவற்றை ஊட்டும் நூல் தாயுமானவர் திருப்பாடல்

திரட்டு தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரத்தில் உள்ளது.

## இராமலிங்க அடிகளார்

- பிறப்பு :15.10.1823
- பெற்றோர் : இராமையா - சின்னம்மை
- ஊர் : சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர்
- சிறப்புப் பெயர் : புரட்சித் துறவி, வள்ளலார், இறையருள் பெற்ற திருகுழந்தை, திருவருட்பிரகாச வள்ளலார்.
  - ஆசிரியர் : குறைவற வாசித்தான் பிள்ளை.
- வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தரும சாலை ஆகியவற்றை நிறுவினார்.
- மறைவு: 30.01.1874.

**நூல்கள்**

1. திருவருட்பா
2. சீவகாருண்ய ஒழுக்கம்
3. மனுமுறை கண்ட வாசகம்

**நூல் குறிப்பு**

திரு + அருள் + பா = திருவருட்பா.

ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல்களைக் கொண்டது.

1. கண்ணில் கலந்தான் என்னும் பாடலை இயற்றியவர் இராமலிங்க அடிகளார்
2. பண் என்பதின் சரியான பொருள் பாட்டின் இசை ஆகும்.

3. ”வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்” என்று பாடியவர் இராமலிங்க அடிகளார்.
4. ”அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி - தனிப்பெருங்கருணை அருட்பெரும்சோதி” என்று பாடியவர் - வள்ளலார்
5. இராமலிங்க அடிகளார் பாடிய பாடல் தொகுப்பிற்குப் பெயர் திருவருட்பா
6. சன்மார்க்க நெறிகளை வழங்கியவர் இராமலிங்க அடிகளார்.
   பசியால் வாடும் மக்களுக்கு சோறிட வள்ளலார் அன்று மூட்டிய அடுப்பு இன்றும் அணையாமல் வடலூர் அறச்சாலையில் உள்ளது.
7. அறிவுநெறி விளங்க வள்ளலார் சத்திய ஞானசபையை நிறுவினார்.
8. பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க இராமலிங்க அடிகள் அறச்சாலை அமைத்தார்.

## திரு.வி.கல்யாண சுந்தரனார்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம்(தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார். இவரின் முன்னோர்கள் சோழ நாட்டில் திருவாரூர் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள்.இவர் 26.08.1883 ல் பிறந்தார்.அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த்தென்றல் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

## கல்வி

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னையில் இராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அதன் பின்னர், 1894 இல் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார். 1904 ஆம் ஆண்டில் ஆறாம் வகுப்புத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

## தமிழ்க் கல்வி

வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் நட்பு ஏற்பட்டது. அவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். அவரிடம் தமிழ் நூல்களை முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார். கதிரவேற்பிள்ளை நீலகிரிக்குச் சென்ற பொழுது அங்கு காலமானார். அதன் பின்னர் கல்யாணசுந்தரனார் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ், மற்றும் சைவ நூல்களையும் பாடம் கேட்டார்.

## ஆசிரியப் பணி

1906 ஆம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கர் ஆகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்தும் அவர் நீங்கினார். பின்னர் 1909 இல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது அவருக்குத் திருமணம் நடந்தது. அவருக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். 1918 ஆம் ஆண்டிற்குள் தம் மனைவி, பிள்ளைகளை இழந்து மீண்டும் தனியரானார். இராயப்பேட்டை

வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்து விலகினார்.

## பத்திரிகைப் பணி

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றினார்.

## அரசியல் பணி

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார்.

## எழுதிய நூல்கள்

### வாழ்க்கை வரலாறுகள்

- யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம், நா.கதிரைவேற்பிள்ளை சரித்திரம் - 1908
- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - 1921
- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - 1927
- நாயன்மார் வரலாறு - 1937
- முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
- உள்ளொளி - 1942
- திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 1 - 1944
- திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 2 - 1944
- உரை நூல்கள்
- பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும் - 1907

- **பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும்** - 1923
- **காரைக்கால் அம்மையார் திருமுறை - குறிப்புரை** - 1941
- **திருக்குறள் - விரிவுரை** (**பாயிரம்**) - 1939
- **திருக்குறள் - விரிவுரை** (**இல்லறவியல்**) 1941

## அரசியல் நூல்கள்

- **தேசபக்தாமிர்தம்** - 1919
- **என் கடன் பணி செய்து கிடப்பதே** - 1921
- **தமிழ்நாட்டுச் செல்வம்** - 1924
- **தமிழ்த்தென்றல்** (**அல்லது**) **தலைமைப்பொழிவு** - 1928
- **சீர்திருத்தம்** (**அல்லது**) **இளமை விருந்து** - 1930.
- **தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு** 1 - 1935
- **தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு** 2 - 1935
- **இந்தியாவும் விடுதலையும்** - 1940
- **தமிழ்க்கலை** - 1953

## சமய நூல்கள்

- **சைவசமய சாரம்** - 1921
- **நாயன்மார் திறம்** - 1922
- **தமிழ்நாடும் நம்மாழ்வாரும்** - 1923
- **சைவத்தின் சமசரசம்** - 1925
- **முருகன் அல்லது அழகு** - 1925
- **கடவுட் காட்சியும் தாயுமானவரும்** - 1928
- **இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்** - 1929
- **தமிழ் நூல்களில் பௌத்தம்** - 1929
- **சைவத் திறவு** - 1929
- **நினைப்பவர் மனம்** - 1930
- **இமயமலை** (**அல்லது**) **தியானம்** - 1931
- **சமரச சன்மார்க்க போதமும் திறவும்** - 1933

- **சமரச தீபம்** - 1934
- **சித்தமார்கக்ம** - 1935
- **ஆலமும் அமுதமும்** - 1944
- **பரம்பொருள்** (**அல்லது**) **வாழ்க்கை வழி** - 1949

## பாடல்கள்

- **முருகன் அருள் வேட்டல்** - 1932
- **திருமால் அருள் வேட்டல்** - 1938
- **பொதுமை வேட்டல்** - 1942
- **கிறிஸ்துவின் அருள் வேட்டல்** - 1945
- **புதுமை வேட்டல்** - 1945
- **சிவனருள் வேட்டல்** - 1947
- **கிறிஸ்து மொழிக்குறள்** - 1948
- **இருளில் ஒளி** - 1950
- **இருமையும் ஒருமையும்** - 1950
- **அருகன் அருகே** (**அல்லது**) **விடுதலை வழி** - 1951
- **பொருளும் அருளும்** (**அல்லது**) **மார்க்ஸியமும் காந்தியமும்** - 1951
- **சித்தந் திருத்தல்** (**அல்லது**) **செத்துப் பிறத்தல்** - 1951
- **முதுமை உளறல்** - 1951
- **வளர்ச்சியும் வாழ்வும்** (**அல்லது**) **படுக்கைப் பிதற்றல்** - 1953
- **இன்பவாழ்வு** - 1925

## பயண இலக்கிய நூல்கள்

**இலங்கைச் செலவு** (**இலங்கைப் பயணம் குறித்த தொகுப்பு நூல்**)

**இவர் செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி 1953ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.**

*************

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழ் அறிஞர்கள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழ் அறிஞர்கள் - பாரதியார்

- இயற்பெயர் - சுப்ரமணியம்
- காலம் - 11.12.1882 -- 11.09.1921
- ஊர் - தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையபுரம்.
- பெற்றோர் - சின்னசாமி - இலக்குமி அம்மையார்
- மனைவி - செல்லம்மாள்
- சிறப்பு பெயர்கள்

  பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மகாக்கவி, தீர்க்கதரிசி
- பணி
  - சுதேசமித்திரன் (1904) நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.
  - பாரதியார் தொடங்கிய தமிழ் வார இதழுக்குப் பெயர் - இந்தியா (1907)
  - பாரதியார் தொடங்கிய ஆங்கில வார இதழ் பெயர் - பாலபாரத் (1907)
- நூல்கள்
  - ஞானரதம்
  - சந்திரிகையின் கதை
  - தராசு
- சிறப்புகள்
  - நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல்கள் இயற்றியவர்
- சிறந்த தொடர்கள்
  - வெள்ளிப்பனிமலையின் மீது உலாவுவோம்
- தொடர்புடைய கேள்விகள்
  - பாரதியாருக்குப் பிடித்த ஆங்கில கவிஞர் யார்? ஷெல்லி.
  - பாரதியார் விரும்பிப் படித்த நூல் - காளிதாசரின் சாகுந்தலம்.
  - பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?
    குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம்.
  - சூழ்ச்சிச் சருக்கம் இடம் பெறும் காப்பியம் எது?
    பாஞ்சாலி சபதம்

- பாரதியார் வடித்து தந்த பெண்ணுரிமைக் காப்பியம் எது?
    - அனைவரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை , எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாக தமிழில் பாரதி வடித்துத் தந்தது பாஞ்சாலி சபதம்.
- பாஞ்சாலி சபதம் எந்த நூலைத் தழுவி எழுதப் பெற்றது?
    - வியாசரின் பாரதத்தை தழுவி எழுதப்பட்டது.
- பாஞ்சாலி சபதம் எத்தனை பாகங்களைக் கொண்டது?
    - இரு பாகங்களைக் கொண்டது.
- பாஞ்சாலி சபதம் எத்தனை சருக்கங்கள் கொண்டது? அவை யாவை?
    - ஐந்து சருக்கங்களைக் கொண்டது.

    - 1)சூழ்ச்சிச் சருக்கம்
    - 2)சூதாட்டச் சருக்கம்
    - 3)அடிமைச் சருக்கம்
    - 4)துகிலுரிதல் சருக்கம்
    - 5)சபதச் சருக்கம்.
- பாஞ்சாலி சபதத்தில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?
    - 412 பாடல்கள்.
- பாஞ்சாலி சபதம் என்ன வகை நூல்?
    - குறுங்காப்பியம்
- ”தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை” என்று பாடியவர் யார்?
    - பாரதிதாசன்
- பிடி என்பதன் பொருள் என்ன?
    - பெண் யானை

# பாரதிதாசன்

- இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்.
- காலம் : 29.04.1891 முதல் 21.04.1964 வரை.
- ஊர் : புதுச்சேரி
- சிறப்பு பெயர் : புரட்சிக் கவிஞர், பாவேந்தர்.
- பணி : தமிழாசிரியர்
- எழுதிய நூல்கள் : பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு.

## சிறப்புகள்

- சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.
- குயில் என்னும் கவிதை வடிவில் ஒரு திங்களிதழை நடத்தி வந்தார்.
- 1969 ஆம் ஆண்டு பாரதிதாசனின் பிசிராந்தையார் நாடகம் சாகித்ய அகாதெமி விருது பெற்றது

## சிறந்த தொடர்கள்

- இவர் புதியதோர் உலகம் செய்வோம் –கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் .தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்
- எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு! என்று பாரதிதாசன் தனது எண்ணங்களை கவிதை, இசைப்பாடல், நாடகம், சிறுகதை, புதினம், கட்டுரை ஆகிய வடிவங்களில் வெளியிட்டார்.

## படைப்புகள்

1. அம்மைச்சி (நாடகம்)
2. உயிரின் இயற்கை
3. உரிமைக் கொண்டாட்டமா?, குயில்
4. எது பழிப்பு, குயில்
5. கடவுளைக் கண்டீர்!, குயில்
6. கழைக்கூத்தியின் காதல் (நாடகம்)
7. கலை மன்றம் (1955)

8. கற்புக் காப்பியம், குயில்
9. சத்திமுத்தப் புலவர் (நாடகம்)
10. நீலவண்ணன் புறப்பாடு
11. பிசிராந்தையார், (நாடகம்) பாரி நிலையம் (1967)
12. பெண்கள் விடுதலை
13. விடுதலை வேட்கை
14. வீட்டுக் கோழியும் - காட்டுக் கோழியும்
15. ரஸ்புடீன் (நாடகம்)

## பாரதிதாசன் நூல்கள்:-

அகத்தியன் விட்ட புதுக்கரடி

சத்திமுத்தப்புலவர்

இன்பக்கடல்

அமிழ்து எது?

அமைதி

அழகின் சிரிப்பு

இசையமுது (முதலாம் தொகுதி)

இசையமுது (இரண்டாம் தொகுதி)

இந்தி எதிர்ப்புப் பாடல்கள்

இரணியன் அல்லது இணையற்ற வீரன்

இருண்டவீடு

உலகுக்கோர் ஐந்தொழுக்கம்

எதிர்பாராத முத்தம்

எது இசை?

ஏழைகள் சிரிக்கிறார்கள்

ஏற்றப் பாட்டு

ஒரு தாயின் உள்ளம்

கடற்மேற் குமிழிகள்

கண்ணகி புரட்சிக் காப்பியம்

கதர் இராட்டினப்பாட்டு,

கவிஞர் பேசுகிறார்

கழைக்கூத்தியின் காதல்

| | |
|---|---|
| இலக்கியக் கோலங்கள் | கற்கண்டு |
| இளைஞர் இலக்கியம் | காதலா? கடமையா? |
| பாரதிதாசன் திருக்குறள் உரை | காதல் நினைவுகள் |
| புரட்சிக் கவி | தமிழுக்கு அமிழ்தென்று பேர் |
| பாரதிதாசன் பேசுகிறார் | தலைமலை கண்ட தேவர் |
| புகழ்மலர்கள் | தாயின் மேல் ஆணை |
| குமரகுருபரர் | தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு |
| குயில் பாடல்கள் | திராவிடர் திருப்பாடல் |
| குறிஞ்சித்திட்டு | திராவிடர் புரட்சித் திருமணம் திட்டம் |
| கேட்டலும், கிளத்தலும் | தேனருவி |
| கோயில் இருகோணங்கள் | தொண்டர் வழிநடைப் பாட்டு |
| சஞ்சீவி பர்வதத்தின் சாரல் | நல்லதீர்ப்பு |
| சிரிக்கும் சிந்தனைகள் | நாள் மலர்கள் |
| சிறுவர் சிறுமியர் தேசியகீதம் | படித்த பெண்கள் |

| | |
|---|---|
| சுயமரியாதைச் சுடர் | பன்மணித்திரள் |
| சௌமியன் | பாட்டுக்கு இலக்கணம் |
| சேரதாண்டவம் | பாண்டியன் பரிசு |
| தமிழச்சியின் கத்தி | பாரதிதாசன் ஆத்திசூடி |
| தமிழியக்கம் | பாரதிதாசன் கதைகள் |
| பாரதிதாசனின் கடிதங்கள் | மயிலம் சுப்பிரமணியர் துதியமுது |
| பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி) | மயிலம் ஸ்ரீ ஷண்முகம் வண்ணப்பாட்டு |
| பாரதிதாசன் கவிதைகள் (இரண்டாம் தொகுதி) | மானுடம் போற்று |
| பாரதிதாசன் கவிதைகள் (மூன்றாம் தொகுதி) | முல்லைக்காடு |
| பாரதிதாசன் கவிதைகள் (நான்காம் தொகுதி) | வந்தவர் மொழியா? செந்தமிழ்ச்செல்வமா? |
| பாரதிதாசன் நாடகங்கள் | வேங்கையே எழுக |
| பாரதிதாசனின் புதிய நாடகங்கள் | பாவேந்தர் பாரதிதாசன் |
| பாரதிதாசனின் புதினங்கள் | பிசிராந்தையார் |

## <u>தொடர்புடைய கேள்விகள்</u>

- ✓ விழுதும் வேரும் என்ற பாடலின் ஆசிரியர் யார்?
  பாரதிதாசன்

- ✓ திறல் என்பதின் பொருள் என்ன?
  வலிமை
- ✓ மறவர் என்பதின் பொருள் என்ன?
  வீரர்
- ✓ தூலம்போல் வளர்ந்துள்ள ஆலங்கிளைக்குத் தூண்கள் எவை?
  விழுதுகள்
- ✓ பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் வகுத்தவர் யார்?
  பாரதிதாசன்
- ✓ அழகின் சிரிப்பு நூலின் ஆசிரியர் யார்?
  பாரதிதாசன்

## நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

- காலம் - 19.10.1888 - 24.08.1972
- ஊர் - மோகனூர்
- பெற்றோர் - வெங்கட்ராமன், அம்மணியம்மாள்
- வளர்ப்புத் தாய் - பதுலா பீவி

## இவர் எழுதிய நூல்கள்

- மலைக்கள்ளன் (நாவல்)
- காணாமல் போன கல்யாணப் பெண் (நாவல்)
- பிரார்த்தனை (கவிதை)
- நாமக்கல் கவிஞர் பாடல்கள்
- திருக்குறளும் பரிமேலழகரும்
- திருவள்ளுவர் திடுக்கிடுவார்
- திருக்குறள் புது உரை
- கம்பனும் வால்மீகியும்
- கம்பன் கவிதை இன்பக் குவியல்
- என்கதை (சுயசரிதம்)
- அவனும் அவளும் (கவிதை)
- சங்கொலி (கவிதை)

- மாமன் மகள் (நாடகம்)
- அரவணை சுந்தரம் (நாடகம்)

## சிறப்புகள்

- இவர் தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர்.
- முதலில் பால கங்காதர திலகர் போன்றவர்களின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர் மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஆட்கொள்ளப்பட்ட பின் அறப் போராட்டத்தால் மட்டுமே விடுதலையைப் பெறமுடியும் என்ற முடிவுக்கு வந்தவர்.
- இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி இருந்ததால் இவர் காந்தியக் கவிஞர் என வழங்கப்படுகிறார்.
- தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்
- நடுவணரசு இவருக்கு பத்மபூஷண் விருது வழங்கியுள்ளது

- **சிறந்த தொடர்கள்**
  - கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது

## தொடர்புடைய கேள்விகள்

- நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் எத்தனை தலைப்புகள் உள்ளன?

  பதினொன்று.
- நாமக்கல் கவிஞர் பாடல்கள் கவிதைத்தொகுதியில் உள்ள பதினொரு தலைப்புகளின் பெயர்கள் யாவை?

1.தெய்வத்திருமலர்

2. தமிழ்த்தேன்மலர்

3.காந்தியமலர்

4.தேசியமலர்

5.சமுதாயமலர்

6.பெரியோர்புகழ்மலர்

7.திருநாள்மலர்

8.சிறுகாப்பியமலர்

9.இசைமலர்

10.அறிவுரைமலர்

11.பல்சுவைமலர்.

- “பெண்மை” என்னும் பாடல் அமைந்துள்ள தலைப்பின் பெயா் என்ன?

  சமுதாய மலர்.

- நாமக்கல்லாரின் படைப்புகள் யாவை?

  1.இசைநாவல்கள் - 3

  2.கட்டுரைகள் - 12

  3.தன்வரலாறு - 3

  4.புதினங்கள் - 5

  5.இலக்கியதிறனாய்வுகள் - 7

  6.கவிதைத்தொகுப்புகள் - 10

  7.சிறுகாப்பியங்கள் - 5

  8.மொழிபெயர்ப்புகள் - 4

  ---

  மொத்தம் 49 நூல்கள்

  ---

## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

- காலம் : 27.08.1876 – 26.09.1954 (78 வயது)
- ஊர் : தேரூர்
- பெற்றோர் : சிவதாணு பிள்ளை, ஆதிலெட்சுமி
- மனைவி பெயர் : உமையம்மாள்
- சிறப்புப் பெயர் : கவிமணி தேவி
- ஆசிரியர் பணி : தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கிக் கல்லூரிப் பேராசிரியராக ஓய்வுப் பெற்றவர். 36 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்
- இவரின் ஆசிரியர் : சாந்தலிங்க தம்பிரான்

## நூல்கள்

- ஆசிய ஜோதி – (எட்வின் அர்னால்ட் எழுதிய ‘லைட் ஆப் ஏசியா’ என்ற நூலின் மொழிபெயர்ப்பு)
- மலரும் மாலையும் (கவிதை)
- மருமக்கள் வழி மான்மியம் (நகைச்சுவை நூல்)
- கதர் பிறந்த கதை
- உமர் கய்யாம் பாடல்கள் (மொழிபெயர்ப்பு நூல்)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச் செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்
- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
- காந்தளூர் சாலை (வரலாற்று நூல்)
- உமர்கய்யாம் என்ற பாரசீக கவிஞர் பாரசீக மொழியில் பாடிய ரூபாயத் கவிதைகளை ஆங்கிலத்தில் எட்வர்ட் பிட்ஸ் ஜெரால்டு என்பவா் மொழிபெயா்த்தார் . அதனைத் தமிழில் உமர்கய்யாம் பாடல்கள் என்ற பெயரில் கவிமணி மொழிபெயா்த்துள்ளார்.
- ரூபாயத் என்பது நான்கடி செய்யுள் எனப் பொருள்படும்.

## சிறப்புகள்

- 1940-பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்வேள் உமாமகேசுவரபிள்ளை அவர்கள் கவிமணி என்ற பட்டம் வழங்கினார்.
- 1943-அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பெரும்பொருள் வழங்க முன் வந்த போது அதை வாங்க மறுத்துவிட்டார்.
- 1954-கவிமணிக்கு தேரூரில் நினைவாலையம் அமைக்கப்பட்டது.
- 2005-இந்திய அரசு அஞ்சல் வில்லை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## சிறந்த தொடர்கள்

- “மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ் செய்திட வேண்டுமம்மா….
- “வெய்யிற் கேற்ற நிழலுண்டு வீசும் தென்றல் காற்றுண்டு
  கையில் கம்பன் கவியுண்டு கலசம் நிறைய மதுவுண்டு….”

- “தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி”
- “ஓடும் உதிரத்தில் – வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடி பார்த்தாலும் – சாதி தெரிவதுண்டோ....”
- “உள்ளத்தில் உள்ளது கவிதை – இன்ப ஊற்றெடுப்பது கவிதை தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை தெளிந்து சொல்வது கவிதை”
- “பாட்டுக்கொரு புலவன் பாரதியடா”.

*********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழ் மகளிரின் சிறப்பு

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழ் மகளிரின் சிறப்பு
# அன்னிபெசன்ட் அம்மையார்

1. பிறந்த ஆண்டு 1 அக்டோபர் 1847
2. இவர் இங்கிலாந்து பெண்மணி 1889-ஆம் ஆண்டு தியோசஃபிகல் சொஸைட்டி என்ற அமைப்பை வாரணாசியில் தொடங்கினார்.
3. நியூமால் தூசியன் அமைப்பு என்ற சீர்திருத்த சங்கத்தின் தலைவியானார்
4. 1907-ல் தியோசஃபிகல் சொஸைட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
5. இவர் தொடங்கிய பத்திரிகையின் பெயர் - காமன் வீல், நியூ இந்தியா
6. 1916-ல் ஹோம் ரூல் இயக்கத்தை ஆரம்பித்தார்
7. இவர் மிதவாதிகள் தீவிரவாதிகள் இணைப்பிற்கு பெரிதும் பங்காற்றினார்
8. 1917-ல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்
9. இவர் சென்னையில் (அடையாறு) தேசிய பல்கலைக்கழகத்தை 1918ல் ஆரம்பித்தார்.
10. இவர் இறந்த ஆண்டு 20 செப்டம்பர் 1933.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

காலம் - சூலை 30, 1886 - சூலை 22, 1968

பெற்றோர் - நாராயண சாமி, சந்திரம்மாள்

ஊர் - புதுக்கோட்டை

## தமிழ்ப் பணிகள்

இந்திமொழிக் கிளர்ச்சியில் பங்குபெற்றார். தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வுப் போராட்டம் எனத் தமிழ்ப்

பணிகள் செய்தார். மாதர் இந்திய சங்கம் நடத்திய பெண்களுக்கான 'ஸ்திரீ தருமம்' என்னும் மாத இதழின் ஆசிரியராக விளங்கினார்.

## சமூகப்பணி

- 1926-ஆம் ஆண்டு 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அகில உலகப் பெண்கள் மாநாடு, பிரான்சு நாட்டுத் தலைநகர் பாரீசில் நடைபெற்றது. அதில் இந்தியாவின் சார்பில் முத்துலட்சுமி ரெட்டி கலந்து கொண்டார். அப்போது அவர் நிகழ்த்திய சொற்பொழிவில், ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்களை அடிமைகளாக நடத்தும் வழக்கம் ஒழிய வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் என்னும் பெருமையைப் பெற்றவர்.
- சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் என்னும் பெருமையும் இவருக்கு உண்டு.
- அன்றைய சென்னை மாகாண சட்டசபைக்கு முத்துலட்சுமி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் மூலம் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி என்ற பெருமை பெற்றார்.
- 1925-ஆம் ஆண்டு சட்டசபைத் துணைத்தலைவராகத் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியில் இருந்த ஐந்தாண்டுளில் சில புரட்சி சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். அவற்றில், தேவதாசி முறை ஒழிப்பு, இருதார தடைச் சட்டம்,பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், பால்ய விவாகங்களை தடை செய்யும் சட்டம் போன்ற சில குறிப்பிடத்தக்கவை.
- அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க உருவானதே அவ்வை இல்லம் அடையாறில் அமைந்துள்ள இதனை அமைத்தவர் முத்துலட்சுமி.
- சென்னையில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்க பலவிதங்களிலும் நிதி திரட்டினார். இன்று புற்று நோயாளிகளுக்குப் புகலிடமாக விளங்கும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குப் பிரதமர் நேரு 1952-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அடிக்கல் நாட்டினார்.

## விருதுகள்

முத்துலட்சுமியின் சேவைகளுக்காக மத்திய அரசு 1956 இல் பத்ம பூஷண் விருது கொடுத்து கௌரவித்தது.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் 1883ஆம் ஆண்டு பிறந்தார்
- ஊர் : நாகை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் உள்ள மூவலூர்.
- இவர் அறிஞர் அண்ணா அவர்களால் "தமிழகத்தின் அன்னிபெசண்ட்" எனப் புகழப்பட்டவர் .

## திருமணம்:

- தனக்கு இசையும், நாட்டியமும் கற்றுத்தந்த சுயம்பு என்பவரை மணந்தார்.
- சுயம்பு, அம்மையாரின் அனைத்துப் போராட்டங்களுக்கும் துணை புரிந்தார்.

## முதல் போராட்டம்

- 1917இல் தனது முதல் போராட்டத்தை மயிலாடுதுறையில் தொடங்கினார்.
- தேவதாசி முறையை எதிர்த்து போராட்டம் நடத்தினார்.

## காந்தியடிகள் மீது பற்று

- அம்மையார் காந்தியடிகள் மீது மிகுந்த பற்று வைத்திருந்தார்.
- ஆங்கிலேயர்களின் தடை உத்தரவு காரணமாக தான் பேசாமல் தனது கருத்துக்களை "கரும்பலகையில்" எழுதி வெளிப்படுத்தினார்.

## மூவர்ணக் கொடி ஆடை

- காந்தி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டு, இந்தியா திரும்பியவுடன் கைது செய்யப்பட்டார்.
- அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அம்மையார் மூவர்ணக் கொடியை ஆடையாக உடுத்தினார்.

## குடிசையில் வாழ்தல்

- காந்தியத்தை ஏற்போர் குடிசையில் வாழ வேண்டும் என காந்தியடிகள் கூறியதை அடுத்து, அம்மையார் தனது ஓட்டு வீட்டை விட்டு குடிசையில் குடியேறினார்.
- அக்குடிலின் வெளியே, கரும்பலகையில் "கதர் அணிந்தவர்கள், உள்ளே வரவும்" என எழுதி இருந்தார்.

## சுயமரியாதை இயக்கம்

- 1925-ல் பெரியார் காங்கிரஸில் இருந்து விலகிய போது அம்மையாரும் காங்கிரஸில் இருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.
- தீண்டாமை, தேவதாசி முறை, குழந்தை திருமணம், கைம்மை வாழ்வு ஆகியவற்றை எதிர்த்தார்.
- இவரது சுயசரிதை புதினம்-தாசிகளில் மோச வலை(அ) மதிகெட்ட மைனர்(1936).

## மொழிப்போர் பேரணி

1938ஆம் ஆண்டு நடந்த மொழிப்போர் பேரணியில் உறையூர்(திருச்சி) முதல் சென்னை வரை 42 நாள், 577 மைல் நடைபயணம் மேற்கொண்டார்.

- இந்நடைப்பயணத்தின் போது 87 பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

- அப்பேரணியில் நடந்து வந்த ஒரே பெண் அம்மையார் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## விடிவெள்ளி

- அம்மையார், பெண் உரிமைக்குப் பாடுபட்ட விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்.
- பொதுவாழ்வில் 50 ஆண்டுகள் ஈடுபட்டுத் தனது 80-ம் வயதில் 27.06.1962 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## திருமண உதவித் திட்டம்

- 1989ஆம் ஆண்டு முதல் மூவலூர் அம்மையாரின் நினைவைப் போற்றும் வகையில், அவரது பெயரால் ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தினை தமிழக அரசு வழங்கி வருகிறது.

## தில்லையாடி வள்ளியம்மை

- பிறப்பு: 1898, தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜோகனஸ்பார்க் நகர்.
- பெற்றோர்: முனுசாமி - மங்களம்.
- தென் ஆப்பிரிக்காவில் பிறந்த வள்ளியம்மைக்கு தில்லையாடி வள்ளியம்மை என பெயர் வரக் காரணம் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தாலும் தாயாரின் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக் கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என அழைக்கப்படுகிறார்.
- ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களில் குறிப்பிடத்தகுந்தவர் தில்லையாடி வள்ளியம்மை.

- தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப் பதிவுச் சட்டப்படியும், கிறித்துவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணங்கள் செல்லாது என்று தென்னாப்பிரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பை வெளியிட்ட ஆண்டு 1913.

- தென்னாப்பிரிக்க உச்சநீதிமன்றம் அளித்த திருமணத் தீர்ப்பிற்கு எதிராக நடந்த அறப்போராட்டத்திற்கு தலைமை வகித்தவர். காந்தியடிகள்.
- காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்டவர் தில்லையாடி வள்ளியம்மை.

- தில்லையாடி வள்ளியம்மை 1913-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போராட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனைப் பெற்றார்.

- தென்னாப்பிரிக்கச் சிறையில் வள்ளியம்மைக்கு உணவு கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது.

- “சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா” என்று வள்ளியம்மையிடம் காந்தியடிகள் கேட்டபோது வள்ளியம்மை தந்த பதிலுரை “இல்லை இல்லை மீண்டும் சிறை செல்வதற்குத் தயார்” என்று கூறியதுடன், இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக, என் இன்னுயிரையும் தருவேன்” என்று கூறினார்.

- தில்லையாடி வள்ளியம்மை 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாளன்று தம் 16-ஆம் வயதில் காலமானார்.

- வள்ளியம்மை மறைந்தபோது “என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது” என்று மனம் வருந்தியவர் காந்தியடிகள்
- மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை,தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் தில்லையாடி வள்ளியம்மை

- “நம்பிக்கைதான் அவரது ஆயுதம்” என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து இந்தியன் ஒப்பீனியன் என்ற இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்

- “தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்” என்று காந்தியடிகள் தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்

- தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி நடுவணரசு அஞ்சல் தலையும், அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது

- தில்லையாடி நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ தொலைவில் உள்ளது.

- சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண்புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வள்ளி என பெயரிடப்பட்டுள்ளது.

- காந்தியடிகள் தமிழ் மீதும், தமிழர் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு தில்லையாடி வள்ளியம்மை அவர்களே காரணம்.

- காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாகிரக வேள்விப்பணிக்கு முதல்களப்பலியாகி, அவரை மகாத்மா என்ற உயர்நிலை நோக்கி

திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மை அவர்களுக்கு உண்டு.

- வள்ளியம்மையின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் சிலை நிறுவியுள்ளது.

- கோ-ஆப்-டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என பெயர் சூட்டி பெருமைப்படுத்தியுள்ளது.

## இராணி மங்கம்மாள்

- நாயக்கர் ஆட்சியில் காப்பாட்சியாளராக இருந்து மதுரையை ஆட்சிபுரிந்தவர் இராணி மங்கம்மாள்.

- இராணி மங்கம்மாளின் கணவர் மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கர்.

- தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர் இராணி மங்கம்மாள்.

- இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன் மகன் அரங்ககிருட்டின முத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்னும் கடமை உணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.

- மங்கம்மாள் தன் மகனுக்கு திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.

## இராணி மங்கம்மாளின் அறிவுரைகள்

- அரசாட்சியை அடக்கத்தோடும், தந்திரத்தோடும் நாம் நோக்குதல் வேண்டும். முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒரு போதும் வெற்றியைத் தராது. பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயுத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்பட வேண்டும்.

- நாட்டையாளும் பொறுப்புக்கு வந்துவிட்டால் அனைவரையும் தம் குழந்தைகள் போல் எண்ணி, அன்பு செலுத்துதல் வேண்டும்.

- “நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை” என்னும் உணர்வோடும், நடுவுநிலைப் பண்போடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றவர் முத்து வீரப்பன்.

- தன்மீது மோதிய இளைஞனை தண்டிக்க மெய்க்காவலர்கள் ஆயத்தம் ஆன போது “இளைஞன் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை, பக்தி உணர்வில் தன்னை மறந்து கீழே இறங்கி வரும்பொழுது, நான் எதிரே வருவதனைக் கவனிக்கத் தவறிவிட்டான். இறைவனுக்கு முன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அனைவரும் ஒன்றே. அவனை அவன் வழியில் போகவிடுங்கள்” என்று பெருந்தன்மையோடு கூறியவர் இராணி மங்கம்மாள்.

- முத்துவீரப்பன் இறந்ததால் 1688-ஆம் ஆண்டு பெயரளவில் அரியணை ஏற்றப்பட்டவன் முத்துவீரப்பன் மகன் விசயரங்கச் சொக்கநாதன்.

- மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக் கொண்டு ஆட்சி கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றி புகழ்ந்தனர்.

- மதுரை நாயக்க அரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பொருள்களைச் செலுத்தாதவன் திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மா.

- திருவிதாங்கூர் படையைத் தோற்கடித்து திறைப்பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களைப் மங்கம்மாளின் தளபதி நரசப்பையன் தலைமையிலான படை பெற்றது.

- மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் தஞ்சை அமைச்சராக இருந்தவர் பாலாஜி பண்டிதர்.

- இராணி மங்கம்மாள் காலத்தில் காவிரியின் குறுக்கே அணை கட்டியவன் மைசூர் மன்னன் சிக்கதேவராயன்.

## இராணி மங்கம்மாளின் சமய பொறை மற்றும் மக்கள் பணி

- மதுரை நாயக்க மன்னர்களைப் போல சமயப் பொறையை கடைபிடித்து கிறித்துவ மதக் குருமார்களை சமயப் பேருரை செய்ய அனுமதித்தார்.

- ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையைப் பின்பற்றினார்.

- சமயத்தொடர்பாகச் சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்ததோடு போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.
- இசுலாமியர்களுக்கு மானியம் அளித்தார்.
- மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்.
- “மங்கம்மாள் சாலை” என்றழைக்கப்படும் நெடுஞ்சாலை கன்னியாகுமரிக்கும், மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை ஆகும்.
- குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியன நீர் அருந்துவதற்கு வசதியாகச் சாலையோரங்களில் தண்ணீர்த் தொட்டிகளை திறக்க ஆணையிட்டார்.
- பொதுமக்களுக்காகக் குடிநீர்க்குளங்கள், ஊருணிகள், கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டச் செய்தார்.
- தொழில்வளர்ச்சி, வணிகம், மக்கள் தொடர்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்தவர்.
- ஆனித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தவர்.
- மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு பொன்னும் பொருளும் வழங்கியவர்.
- கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்றபோது உணவு, உறைவிடம் வழங்குவதற்கு ஆணையிட்டார்.

- வெள்ளத்தால் அமைந்த கரையோரத்துச் சிற்றூர்களைச் சீரமைத்தார்.

- மத்தியச்சந்தை, மதுரைக்கல்லூரி உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித்தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை இராணிமகங்கம்மாள் கட்டியதாக கூறப்படுகிறது.

- மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விழாக்கள் நடைபெறும் போது தமது செங்கோலை அம்மனின் முன்வைத்து வழிபடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தவர்.

- சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம்மாளும், இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தைக் கண்டு களித்தனர். தற்போது அருங்காட்சியமாக விளங்கும் தமுக்கம் மைதானம் மங்கம்மாளின் கோடைகால அரண்மனையாகும்.

- ஆற்றில் இறங்கும் கள்ளழகரின் திருவடிகளை வணங்கி மகிழ்ந்தவர் இராணி மங்கம்மாள், இளவரசர் விசயரங்கச் சொக்கநாதன்.

## இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு

## வேலுநாச்சியார்

- ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய முதல் பெண்மணி வேலுநாச்சியார்.
- பிறந்த ஆண்டு : கி.பி. 1730
- பெற்றோர்: இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முக்காத்தாள்.
- கணவர் : சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர்

- ஆங்கிலேயருக்கும் முத்து வடுகநாதருக்கும் 1772ம் ஆண்டு நடைபெற்ற போரில் முத்து வடுகநாதர் வீரமரணமடைந்தார்.
- பின் வேலுநாச்சியார் ஐதர் அலியை சந்தித்து பேசி 5000 படைவீரர்களை உடன் அழைத்து வந்தார்.
- மருது சகோதரர்களுடன் தலைமை ஏற்று சென்ற இவர், 1780-ம் ஆண்டில் ஆங்கிலேயரிடமிருந்து சிவகங்கையை மீட்டார்.

## கடலூர் அஞ்சலையம்மாள்

1. பிறந்த ஆண்டு: 1890
2. ஊர் : முதுநகர் (கடலூர்)
3. 1921ம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கிய போதே அஞ்சலையம்மாளும் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார்.

### கலந்து கொண்ட போராட்டங்கள்:

- நீலன் சிலையை அகற்றும் போராட்டம்,
- உப்புக் காய்ச்சும் போராட்டம்,
- மறியல் போராட்டம்,
- தனியாள் அறப் போராட்டம்,
- வெள்ளையனே வெளியேறு இயக்கம்

### சிறை வாழ்க்கை:

கடலூர் , திருச்சி,வேலூர், பெல்லாரி ஆகிய சிறைகளில் அடைக்கப்பட்டார்.

- வேலூர் சிறையிலிருந்த போது, கருவுற்ற நிலையில் இருந்ததனால் ஆங்கில அரசு வெளியில் அனுப்பி விட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.

- அஞ்சலையம்மாள் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார். குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, விடுதலைப் போராட்டத்திற்காக செலவு செய்தார்.

- நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் தம்முடைய 9 வயது மகளையும் (அம்மாக்கண்ணு) ஈடுபடுத்தி, இருவரும் சிறை சென்றனர்.
- காந்தியடிகள் சிறையில் இருப்பவர்களை பார்க்க வந்தபோது அச்சிறுமியை தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று லீலாவதி எனப் பெயரிட்டு படிக்கவும் வைத்தார்.

- காந்தியடிகள் கடலூருக்கு வந்த போது, அவரைச் சந்திப்பதற்கு அஞ்சலையம்மாளுக்கு ஆங்கில அரசாங்கம் தடை விதித்தது. ஆனால் அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து, குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச் சென்றார். அதனால் அஞ்சலையம்மாளை "தென்னாட்டு ஜான்சிராணி " என்றழைத்தார், காந்தி.

## அம்புஜதம்மாள்

- ✓ பிறந்த தினம் : 08.01.1899
- ✓ பயின்ற மொழிகள்: தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்
- ✓ அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு, எளிமையாக வாழ்ந்தார்.
- ✓ வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி ஆகியவர்களோடு நட்பு கொண்டு பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.
- ✓ பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலையுணர்வை ஊட்டினார்.
- ✓ அந்நியத் துணி விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதால் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்.
- ✓ காந்தியடிகளால் "தத்தெடுக்கப்பட்ட மகள்" என்று அழைக்கப்பட்டார்.
- ✓ சீனிவாச காந்தி நிலையம் என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்தார்.
- ✓ அம்புஜதம்மாள் தம் 70 ஆண்டு நினைவாக நான் கண்ட பாரதம் என்னும் நூலை எழுதியுள்ளார்.
- ✓ 1964 ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்றார்.

**********

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)

பாடம் : பொதுத் தமிழ்

பகுதி : இ - தமிழ் மொழியில் அறிவியல் சிந்தனைகள்

©காப்புரிமை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# தமிழர் வானியல்

- தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் அறிவு.

- உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத்தொன்மையானது வானியல் கல்வி.

- உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகியவற்றை உள்ளடக்கியது எனக் கூறும் நூல் - தொல்காப்பியம்.

- உலகம் தட்டை இல்லை, உருண்டையானது என்று கூறியவர் நிக்கோலஸ் கிராப்ஸ் (போலந்து நாட்டைச் சார்ந்தவர்).

- உலகம் சுழல்கிறது எனப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே கூறிய தமிழர் திருவள்ளுவர்.

- ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் - இது யாருடைய கூற்று? இளங்கோவடிகள்(சிலப்பதிகாரம்)

- ஞாயிறைச் சுற்றிய பாதையை பழந்தமிழர் ஞாயிறு வட்டம் என அழைத்தனர்.

- தானே ஒளிவிடக்கூடிய ஞாயிறை பண்டைத்தமிழர் நாள்மீன் என அழைத்தனர்.

- ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிவிடக்கூடியவற்றை பண்டைத்தமிழர் கோள்மீன் என அழைத்தனர்.

- செந்நிறமாய் இருந்த கோளை செவ்வாய் என அழைத்தனர்.

- ”மாதர் முகம் போல் ஒளிவிடவல்லையேல் காதலை வாழி மதி” என்ற சொற்றொடர் வெளிப்படுத்தும் வானியல் உண்மை எது? திங்களுக்குத் தானாக ஒளிவிடும் தன்மை இல்லை

- **திங்கள் மறைப்பு** (அ) **சந்திரகிரகணம் பற்றி வரும் குறள் எது**?
  **திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் - 1146)**

- **வெண்மை நிறமுடைய கோளை பண்டைத் தமிழர் வெள்ளி என அழைத்தனர்**.

- **புதிதாகக் கண்டறிந்த கோளுக்கு புதன் என்று பெயர் வைத்து பண்டைத் தமிழர் அழைத்தனர்.**

- **புதன் கோளின் மற்றொரு பெயர் அறிவன்**

- **வானில் பெரிய கோளாக வலம் வரும் கோளை வியாழன் என அழைத்தனர்**.

- **உலகம் உருண்டை வடிவமானது என முதலில் கூறிய தமிழ்க் குரல் எது**? **திருவள்ளுவர்**

- **வான்வெளியில் உள்ள மிகப் பெரிய விண்மீன் ஞாயிறு**

  **சனிக் கோளை பண்டைத் தமிழர் காரிக் கோள்**
  **என அழைத்தனர்**.

  **தூமகேதுவை பண்டைத் தமிழர் வால் நட்சத்திரம்**.
  **என அழைத்தனர்**.

- **வானூர்தி ஓட்டுபவரைத் தமிழில் வலவன் என்று அழைத்தனர்**.

- **வலவன் ஏவா வானவூர்தி** - **எந்த நூலில் உள்ள வரிகள்**? **புறநானூறு.**

| வானியல் குறிப்பு | | குறிப்பிடும் தமிழ் நூல்கள் |
|---|---|---|
| வான்வழிப் பயணக் குறிப்பு | - | சிலம்பு, மணிமேகலை |
| மயிற் பொறி விமான செயல்திறன் | - | சீவக சிந்தாமணி |
| புட்பக விமானம் | - | கம்பராமாயணம் |
| வானூர்தி வடிவம், அதை இயக்கும் முறைமை | - | பெருங்கதை |

## தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்
## உயிர்க்கோளம்

- உயிர்கள் வாழும் நிலத்தின் பெயர் உயிர்க்கோளம்.
- உயிரினக்குன்றின் மணிமுடியாக வீற்றிருப்பவர் ஆறறிவு மனிதன்.
- என்றும் வற்றாத நீர்நிலை கடல்.
- மனித வாழ்க்கைக்குத் தேவையான உப்பு, தாது பொருள்களை வழங்குவது கடல்.
- பூமியில் உள்ள காற்றுமண்டலத்தின் பெயர் வளிக்கோளம்.
- காற்று மண்டலத்தில் உயிர்வளி(ஆக்சிஜன்) உப்புவளி(நைட்ரஜன்) மற்றும் மற்ற வளிகளின் சதவீதம் என்ன?
    - உயிர்வளி(ஆக்சிஜன்) - 21 சதவீதம்
    - உப்புவளி(நைட்ரஜன்) - 78 சதவீதம்
    - மற்ற வளிகள் - 1 சதவீதம்
- உயிரினங்கள் வாழும் பகுதியிலுள்ள நிலம், நீர், காற்று போன்றவை அடங்கிய நிலைக்கு சுற்றுச்சூழல்
- என்று பெயர்.
- மேல்வளிப்படலத்தில் உள்ள உயிர்வளிப்படலம் ஓசோன்.

..........................................................